ஸ்ரீமதேராமாநுஜாய நம:

திருவரங்கத்தமுதனாரருளிச்செய்த

# இராமாநுச நூற்றந்தாதி.

இந்த க்ரந்தம்

பரமகாருணிகரான பெரியஜீயரருளிச்செய்த

உரையுடன்


தர்க்க தீர்த்தரான

சிங்கப்பெருமாள்கோவில் - மாடபூசி-ராமாநுஜாசார்யராலும்,

ஸி. முத்துக்ருஷ்ணநாயுடு அவர்களாலும்,


நாநாதேசாநீத அநேக ஸ்ரீகோசங்களின் ஸஹாயத்தினால்

பரிசோதிப்பிக்கப்பட்டு,


ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையாரால்,

பராங்குச திருவவதாராதி ௫௦௦௬-வது ஸம்வத்ஸரமான

விஸ்வாவஸு ஸம்வத்ஸரத்தில்,

சென்னப்பட்டணம்:

பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்தில்,

அச்சிடப்பட்டது.


விஜயதேதராம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபை (லிமிடெட்.)

# இராமாநுச நூற்றந்தாதி.

இந்தக்ரந்தம் நாலாயிரம் திவ்யப்ரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமான இயற்பாவில் பதினோராவது க்ரந்தம். இதை அருளிச்செய்தவர், திருவரங்கத் தமுதனார். இவர் ஆதியில் ஸாமாந்யஶாஸ்த்ரப்ரவணராய், விசேஷ ஶாஸ்த் ரானபிஜ்ஞராயிருந்து, அநந்தரம், தர்சநப்ரவர்த்தகரான எதிராசர் பேரரு ளால் முக்குறும்பாம் குழியைக்கடக்கும் கூரத்தாழ்வான் திருவடிகளை யாஶ் ரயித்து, அவர் காட்டக்கண்ட எம்பெருமானார் விஷயமாக, சரமபர்வ நிஷ்ட் டையை அனைவரும் எளிதிலறிந் துஜ்ஜீவிக்கும்படி செந்தமிழில் தொடுத்து இந்த திவ்யப்ரபந்தத்தை யருளிச்செய்தார்.

இதற்கு உரையருளிச்செய்த பெரிய ஜீயர்ப்ரபாவம் இச்சபையி லச்சி டும் ஸ்ரீவசநபூஷண பீடிகையில் காண்க.

இப்படிக்கு
சிங்கப்பெருமாள்கோவில்
மாடபூசி-ராமாநுஜாசார்யர்.

## இச்சபையில் தமிழ்லிபியில் அச்சிட்ட க்ரந்தங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தனிஶ்லோகம் ஸவ்யாக்யாநம், ப்ரதிபத தாத்பர்ய ஸஹிதம் | | | 3 | 4 | 0 |
| பாரதாதி தனிஶ்லோகம் | ,, | ,, | 0 | 5 | 0 |
| ராமசரமஶ்லோகம் | ,, | ,, | 0 | 3 | 0 |
| துஷ்கரஶ்லோகடிப்பணி | ,, | ,, | 0 | 5 | 0 |
| யதிதர்ம ஸமுச்சயம் | ,, | ,, | 1 | 2 | 0 |
| முதல் திருவந்தாதி | ,, | அரும்பத ப்ரதிபத ஸஹிதம் | 1 | 2 | 0 |
| இரண்டாம் திருவந்தாதி | ,, ,, | ,, | 0 | 12 | 0 |
| மூன்றாம் திருவந்தாதி | ,, ,, | ,, | 0 | 12 | 0 |
| நான்முகன் திருவந்தாதி | ,, ,, | ,, | 0 | 14 | 0 |
| திருவிருத்தம் | ,, | அரும்பதப்ரதிபததாத்பர்ய ஸஹிதம் | 3 | 12 | 0 |
| திருவாசிரியம் | ,, ,, | ,, | 0 | 5 | 0 |
| பெரிய திருவந்தாதி | ,, ,, | ப்ரதிபத ஸஹிதம் | 0 | 14 | 0 |
| திருவெழுகூற்றிருக்கை | ,, ,, | ,, | 0 | 6 | 0 |
| சிறிய திருமடல் ,, | ,, ,, | ,, | 0 | 9 | 0 |
| பெரிய திருமடல் | ,, ,, | ,, | 0 | 10 | 0 |
| இராமாநுச நூற்றந்தாதி உரையுடன் | ,, | ,, | 0 | 15 | 0 |
| பராசரவிசிஷ்ட பரமதர்ம சாஸ்த்ரம் தாத்பர்ய ஸஹிதம் | | | 0 | 14 | 0 |
| ஷண்மததர்சிநி | | | 0 | 3 | 0 |

இப்படிக்கு,

கராலபாடி - ஆழ்வாரய்ய,

காரியதர்சி - தனாதிகாரி.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# இராமாநுச நூற்றந்தாதி பாசுரங்களின்

# அட்டவணை.


| பாசுரங்கள். | பாசுர ஸங்க்யை. | பாசுரங்கள். | பாசுர ஸங்க்யை. |
|---|---|---|---|
| அ. | | க. | |
| அங்கயல் ... ... | ௧௦௮. | கடலளவாய ... ... | ௫௯. |
| அடல்கொண்ட... ... | ௩௬. | கட்டப்பொருளை ... | ௯௩. |
| அடியை ... ... | ௫௧. | கண்டவர் ... ... | ௫௫. |
| அடையார் ... ... | ௩௩. | கண்டுகொண்டேன் ... | ௮௪. |
| அற்புதன் ... ... | ௫௩. | கதிக்கு ... ... | ௧௪. |
| ஆ. | | கருத்தில் ... ... | ௭௮. |
| ஆக்கி ... ... ... | ௩௮. | கலிமிக்க ... ... | ௮௮. |
| ஆண்டுகள் ... ... | ௩௧. | கள்ளார் ... ... | ௨. |
| ஆயிழையர் ... ... | ௪௨. | கா. | |
| ஆரப்பொழில் ... ... | ௨௦. | காரேய் ... ... | ௨௫. |
| ஆறெனக்கு ... ... | ௬௮. | கார்த்திகையானும் ... | ௨௨. |
| ஆனது ... ... ... | ௪௯. | கூ. | |
| இ. | | கூட்டும்விதி ... ... | ௨௯. |
| இடங்கொண்ட... ... | ௧௨. | கூறும்... ... ... | ௪௬. |
| இடுமே... ... ... | ௯௮. | கை. | |
| இயலும் ... ... | ௬. | கைத்தனன் ... ... | ௭௨. |
| இருந்தேன் ... ... | ௬௨. | கையில் ... ... | ௧௦௪. |
| இருப்பிடம் ... ... | ௧௦௬. | கொ. | |
| இறைஞ்சப்படும் ... | ௪௭. | கொழுந்து ... ... | ௬௧. |
| இறைவனை ... ... | ௯. | கொள்ள ... ... | ௨௭. |
| இன்பம்தரு ... ... | ௩௦. | கோ. | |
| இன்புற்ற ... ... | ௧௦௭. | கோக்குல ... ... | ௫௬. |
| ஈ. | | ச. | |
| ஈந்தனன் ... ... | ௨௧. | சரணமடைந்த ... | ௬௭. |
| உ. | | சா. | |
| உணர்ந்த ... ... | ௬௦. | சார்ந்ததென் ... ... | ௭௧. |
| உண்ணின்று ... ... | ௯௫. | சி. | |
| உதிப்பன ... ... | ௫௦. | சிந்தையினோடு ... | ௬௯. |
| உறுபெரும் ... ... | ௧௯. | சீ. | |
| எ. | | சீரிய ... ... ... | ௧௧. |
| எய்தற்கரிய ... ... | ௧௮. | சீர்கொண்டு ... ... | ௮௩. |
| எனக்குற்ற ... ... | ௫. | சு. | |
| என்னைப்புவியில் ... | ௪. | சுரக்கும் ... ... | ௪௭. |
| என்னையும்பார்த்து ... | ௭௦. | செ. | |
| ஓ. | | செய்த்தலை ... ... | ௭௫. |
| ஓதிய ... ... ... | ௩௦. | செய்யும் ... ... | ௧௩. |

| பாசுரங்கள். | பாசுர ஸங்க்யை. |
|---|---|
| செழுந்திரை ... ... | ௧௦௫. |
| சே. | |
| சேமநல் ... ... | ௪௦. |
| சொ. | |
| சொல்லார் ... ... | ௪௪. |
| சோ. | |
| சோராத ... ... | ௧௫. |
| சோர்வின்றி ... ... | ௮௧. |
| ஞா. | |
| ஞானம் ... ... | ௬௬. |
| த. | |
| தவந்தரும் ... ... | ௯௪. |
| தற்சச்சமணரும் ... | ௯௯. |
| தன்னையுற்று ... ... | ௯௭. |
| தா. | |
| தாழ்வொன்று ... ... | ௧௬. |
| தி. | |
| திக்குற்ற ... ... | ௨௬. |
| தெ. | |
| தெரிவுற்ற ... ... | ௮௨. |
| தே | |
| தேரார் ... ... | ௭௪. |
| ந. | |
| நயவேன் ... ... | ௩௫. |
| நல்லார் ... ... | ௮௦. |
| நா. | |
| நாட்டிய ... ... | ௫௪. |
| நி. | |
| நிகரின்றி ... ... | ௪௮. |
| நிதியை ... ... | ௨௧. |
| நிலத்தை ... ... | ௩௪. |
| நினையார் ... ... | ௯௦. |
| நின்றவன் ... ... | ௭௬. |
| நெ. | |
| நெஞ்சில் ... ... | ௨௮. |
| நை. | |
| நையும் ... ... | ௧௦௨. |
| ப. | |
| படிகொண்ட ... ... | ௬௭. |
| பண்டருமாறன் ... | ௬௪. |
| பற்று ... ... ... | ௮௬. |
| பா. | |
| பார்த்தான் ... ... | ௫௨. |
| பி. | |
| பிடியை ... ... | ௮௯. |
| பு. | |
| புண்ணிய ... ... | ௯௨. |
| பூ. | |
| பூமன்னு ... ... | ௧. |
| பெ. | |
| பெரியவர் ... ... | ௮௭. |
| பே. | |
| பேதையர் ... ... | ௫௮. |
| பேரியல் ... ... | ௬. |
| பேறொன்று ... ... | ௪௫. |
| பொ. | |
| பொய்யை ... ... | ௭௯. |
| பொருந்திய ... ... | ௬௨. |
| பொருளும் ... ... | ௬௯. |
| போ. | |
| போந்தது ... ... | ௧௦௬. |
| போற்றரும் ... ... | ௮௯. |
| ம. | |
| மண்மிசை ... ... | ௪௭. |
| மயக்கும் ... ... | ௧௦௧. |
| மருள் ... ... ... | ௯௬. |
| மற்றொரு ... ... | ௫௭. |
| மன்னிய ... ... | ௧௦. |
| மு. | |
| முனியார் .. ... | ௧௭. |
| மொ. | |
| மொய்த்த ... ... | ௨௪. |
| மொழியை ... ... | ௭. |
| வ. | |
| வண்மையினாலும் ... | ௭௬. |
| வருத்தும் ... ... | ௮. |
| வளரும் ... ... | ௯௬. |
| வளர்ந்த ... ... | ௧௦௩. |
| வா. | |
| வாழ்வற்றது ... ... | ௬௫. |
| வை. | |
| வைப்பாய ... ... | ௨௩. |


இராமாநுசநூற்றந்தாதி பாசுரங்களின் அட்டவணை முற்றிற்று.



ஸ்ரீமதேராமாநுஜாயநம:



திருவரங்கத்தமுதனார்

# இராமாநுச நூற்றந்தாதி.

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த

## தனியன் வ்யாக்யாநம்

அவதாரிகை.—"ப்ராக்தநகர்ம நிவ்ருத்யர்த்தமாக, அபிஜாதரான அமுதனார் திருவடிகளைச் சிரோபூஷணமாகத் தரித்தேன்; ஆகையால் கர்மபலாநுபவம் பண்ணுவிக்கும் யமாதிகளுக்கு என்னோடு என்ன ப்ராப்தியுண்டு" என்கிறது.

வேதப்பிரான் பட்டரருளிச்செய்த தனியன்.

முன்னை வினையகல மூங்கில்குடியமுதன்,
பொன்னங் கழற்கமலப் போதிரண்டும்,—என்னுடைய
சென்னிக் கணியாகச் சேர்த்தினேன் தென்புலத்தார்க்கு,
என்னுக் கடவுடையேன் யான்.

வ்யா.—(முன்னைவினையகல) (க) "முன்னருளு மாரியனால்" என்றுரிறே வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயரும்; அப்படியே, அநாதிகாலார்ஜிதகர்மங்கள் அகன்றுபோக. பாவமெல்லாம் அகன்று என்னை விட்டுப்போக. அது எத்தாலே யென்ன, அமுதன்கால் தலைப்பட்டத்தாலேயென்கிறது (மூங்கில்குடியமுத னித்யாதி யாலே). மூங்கில் குடியாவது-(உ) "வேயர்தங்கள் குலம்" என்னு மாபோலே இவர்க்கு மூங்கில் குடியாயிற்று. அக்குடியிலே அவதரித்த அமுதனுருடைய. (பொன்னம் கழல்கமலப் போதிரண்டும்) ஸ்ப்ருஹணீயமாய் அழகியதாயிருக்கிற திருவடித்தாமரைப் பூவிரண்டையும். (என்னுடைய சென்னிக்கணியாகச் சேர்த்தினேன்) அவருடைய சென்னிக்கணி (ங) * இராமாநுசனடிப்பூ, என்னுடைய சென்னிக்கணி இவையாயிற்று. (சென்னிக்கணியாகச் சேர்த்தினேன்) தலைக்கலங்காரமாகச் சேர்த்தேன். (ச) "செம்மாபாத பற்புத்தலை சேர்த்து" என்னுமாபோலே. அங்குப்ரார்த்தனை; இங்குக்ருதார்த்ததை. அத்தால், (தென்புலத்தார்க்கு) யமபுரவாஸிகளான யமகிங்கரர்களுக்கு. (என்னுக் கடவுடையேன்) இனியேதுக்காகக் கர்மபலாநுபவத்துக்குக்கடவேன்? கர்மக்ஷயம் பிறந்தவாறே பலாநுபவமில்லையிறே. ஆகையாலே கர்மபலாநுபவம் பண்ணுவிப்பார்க்குக் கர்த்தவ்யமில்லை. (ரு) *பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து, என்சென்னித்திடரில் பாதவிலச்சினைவைக்கையாலே, (சு) * தென்புலக்கோன்பொறியொற்றிவைத்தவிலச்சினைமாற்றித் தூதுவரோடி யொளித்தார்; அத்தாலே "என்னுக்கடவுடையேன் யான்" என்கிறது (எ) "என்பெய்வினை தென்புலத்தில் பொறித்த அப்புத்தகச் சும்மை பொறுக்கியபின்" என்னக்கடவதிறே. (யான்) பொன்னங்கழற்கமலப் போதிரண்டும் என்னுடைய சென்னிக்கணியாகச்சேர்த்தயானென்றபடி. (என்னுக்கடவுடையேன்) "என்னுக்கு" என்கிறகுகரம் கடைக்குறைத்தலாயிருக்கிறது. (கடவுடையேன்) எதுக்காக ப்ராப்தியுடையே னென்றபடி. அம்ருதத்துக்கும் விஷத்துக்கும் சேர்த்தியில்லாதாப்போலே, திருவா

(க) (உ) பெரியா-திரு-ரு-௪-௧௦. (ங) ௧௦ரு.
(ச) திருவாய்-௨-௯-௧. (ரு) பெரியா-திரு-ரு-௨-அ.
(சு) பெரியா-திரு-ரு-௨-௨, (எ) ஙச,

ங்கத்தமுதனார் திருவடிகளில் ஸம்பந்த முடையார்க்கும் தென்புலக் கோனடியார்க்கும் என்ன சேர்த்தியுண்டு? (க) "அரங்கமாநகருளானே - நின்னுமங்கற்றஆவலிப் புடைமைகண்டாய் - நமன்தமர்தலைகள்மீதே—நாவலிட் டுழிதருகின்றோம்" என்றும், (உ) "அரங்கமென்றழைப்பராகில் பொறியில்வாழ் நரகமெல்லாம் புல்லெழுந்தொழியுமன்றே" என்றும், (ரு) "నచజ్ఞానస్యసఙ్కోచం నచైవయమగోచరమ్ । తస్మాద్రఙ్గంమహాపుణ్యం కో న సేవేత బుద్ధిమాన్- நசஜ்ஞாநஸ்யஸங்கோசம் நசைவயமகோசரம் | தஸ்மாத்ரங்கம் மஹாபுண்யம் கோநஸேவேத புத்திமாந்" என்றும், (ச) "నఖలుభాగవతాయమవిషయంగచ్ఛన్తి-நகலுபாகவதா யமவிஷயம் கச்சந்தி" என்றும் சொல்லக்கடவதிறே.

நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதென்று நண்ணினர்பால்,
சயந்தரு கீர்த்திஇராமாநுசமுனிதாளிணைமேல்,
உயர்ந்த குணத்துத் திருவரங்கத்தமு தோங்குமன்பால்
இயம்பும் கலித்துறையந்தாதியோத விசைநெஞ்சமே.

அவ.—(நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதென்று) ப்ராப்யாபாஸங்களை ஹேயமென்று புத்திபண்ணி தம்திருவடிகளை யாஶ்ரயித்தவர்கள் விஷயமாக ஸம்ஸாரஜயத்தைப் பண்ணித்தருமத்தாலே வந்த யசஸ்ஸையுடைய எம்பெருமானார் திருவடிகளிலே உத்துங்க குணத்தையுடைய திருவரங்கத் தமுதனார் தம்முடைய நிரவதிகபக்தியினாலே பணிக்கும் நூற்றந்தாதியை ஓத ஸம்மதியென்று மநஸ்ஸை அர்த்திக்கிறதாயிருக்கிறது.

வ்யா.—(நயம்தருபேரின்பமெல்லாம்) விஷயங்களாலேவரும் நிரவதிகஸுகங்களையெல்லாம். (நயம்) விஷயம். (ரு) "நாளுமைநள்ளேன்நயம்" என்கிறவிடத்துக்கு விஷயங்களை யென்றிறே வ்யாக்யாநம்பண்ணியருளிற்று. அஜ்ஞாபிப்ராயத்தாலே, சிற்றின்பத்தைப் பேரின்பமென்கிறது. (பழுதென்று) அவற்றை ஹேயமென்று விசாரித்துவிட்டு. (நண்ணினர்பால்) ஆஶ்ரயித்தவர்கள் விஷயத்திலே.

(க) திருமாலை-க. (உ) திருமாலை-கரு. (ரு)
(ச) (ரு) க - திரு கரு.

(சயம்தரு கீர்த்திராமாநுசன்) அவர்களுக்கு ஸம்ஸார ஜயத்தைப்பண்ணித் தருகிற எம்பெருமானார். இப்படி ஆபாஸஸாதகங்களைவிட்டு ஆஶ்ரயித்தவர்கள்-ஆழ்வானும் அமுதனருமாயிற்று. (௧) „రామానుజార్యవిషయీకృతమ్-ராமாநுஜார்யவிஷயீக்ருதம்" (உ) "அக்காதலளற்றழுந்தி மாயுமென்னாவியை வந்தெடுத்தான்" என்றார்களிறே. (௩) „కామాదిదోషహరమాత్మపదాశ్రితానాం రామానుజం యతిపతిమ్-காமாதிதோஷஹர மாத்ம பதாஶ்ரிதாநாம் ராமாநுஜம் யதிபதிம்" (௪) మదనకదనైర్నక్లిశ్యన్తే యతీశ్వరసంశ్రయాః-மதநகதநைர்நக்லிஶ்யந்தேயதீஶ்வரஸம்ஶ்ரயாஃ" என்னக்கடவதிறே. இதுவாயிற்று சயந்தருகிறது. (௫) "சயப்புகழார்" என்னுமாபோலே. (இராமாநுசமுனி தாளிணைமேல்) இப்படி ஆஶ்ரிதஜநஜயப்ரதரான ராமாநுஜமுனி சரணத்வய விஷயங்களிலே வாசிககைங்கர்யமாகச்செய்த ப்ரபந்தத்தையப்யஸிக்கஸம்மதியென்று ஸௌமநஸ்யமுண்டாம்படி மங்களையர்த்திக்கிறது. (௬) "இராமாநுசன் சரணாரவிந்தம்" (௭) "இராமாநுசன் தன்னிணையடி" (அ) "இராமாநுசனடிப்பூமன்னவே" என்றிறே ஆதிமத்யாவஸாநம், அங்க்ரித்வய விஷயமாயிருப்பதாயிற்று இப்ப்ரபந்தந்தான்.

அன்றிக்கே "நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதின்றி நண்ணிநம்பால் சயந்தருகீர்த்திராமாநுசமுனி" என்று - இத்தனியன் அருளிச்செய்தவர் அபிப்ராயமாகவுமாம். அதாவது-(நயந்தருபேரின்ப மெல்லாம் பழுதின்றிநண்ணி நம்பால்)-நன்மையைப்பண்ணுமதானநிரதிசயஸாதகங்களெல்லாம். (பழுதின்றி) ஸங்கோசமின்றிக்கே. (நண்ணிநம்பால்) (௯) "தந்தைநல்தாய்தாரம் தனயர்பெருஞ்செல்வம் என்றனக்குநீயே எதிராசா" என்கிறபடியே ஸர்வஸாதகங்களும் அவரேயென்று ஆஶ்ரயித்த நம்முடைய விஷயமாக என்று இங்ஙனேயும் யோஜிக்கவுமாம். மேல் பூர்வவத்.

அன்றிக்கே, (நயம்தரு பேரின்பமெல்லாம் பழுது என்று) த்ரிதரங்களை த்ருணவத் கரித்து. (நண்ணி) நாராயணனை நண்ணின

(௧) வரத-ஸ்த- (உ) ௪௨. (௩) யதிராஜவி-௧-
(௪) (௫) திருவாய்-௩-௧-௧௧. (௬) ௧.
(௭) ௫௦ (அ) ௧௦௫. (௯) ஆர்த்தி. ௩.

வருமாய் என்று எம்பெருமானுர்க்கு விசேஷணமாகவுமாம். (நன்பால்) நல்லஸ்வபாவத்தாலே; பரஸம்ருத்தியே பேருன ஸ்வபாவத்தாலே. (சயம்தரு கீர்த்தி யிராமாநுசன்) தான் நயந்தருபேரின்பமெல்லாம் பழுதின்றி நண்ணினமாத்ர மன்றிக்கே தம்மையாஶ்ரயித்தவர்களும் (க) "நரகத்தை நகுநெஞ்சே" என்கிறபடியே ஸம்ஸாரத்தை வெல்லவல்லராம்படிபண்ணி அத்தாலே வந்த யசஸ்ஸையுடையவர் என்றுகவுமாம். (௨) "తృణీకృతవిరిఞ్చాదినిరఙ్కుశ విభూతయః। రామానుజపదామ్భోజసమాశ్రయణశాలినః— த்ருணீக்ருதவிரிஞ்சாதி நிரங்குசவிபூதய꞉। ராமாநுஜபதாம்போஜ ஸமாஶ்ரயணசாலிந꞉" என்னக்கடவதிறே.

சொல்லின்தொகைகொண்டுனதடிப்போதுக்குத்தொண்டுசெய்யும்
நல்லன்பரேத்து முன்னுமமெல்லாம், என்றன் நாவினுள்ளே

அல்லும் பகலுமமரும்படி நல்கு, அறுசமய
வெல்லும்பரம விராமாநுச விதென்விண்ணப்பமே.

அவ.—(சொல்லின் தொகைகொண்டு) இது அமுதனர் அருளிச்செய்ததாதல்; அவர் அபிப்ராயத்தாலே அபிநிவேசமுடைய ஆஸ்திக ரருளிச்செய்ததாதலா யிருக்கும்.

வ்யா.—(சொல்லின்தொகைகொண்டு) "இவ்வளவாகச் சொல்லக்கடவோம்" என்று ஸங்க்யா நிர்த்தேசம்பண்ணி. அன்றிக்கே, சப்தஸமூஹங்களைக்கொண்டு என்னவுமாம். (உனதடிப்போதுக்கு) தேவரீருடைய திருவடித்தாமரைகட்கு. (தொண்டுசெய்யும்) வாசிக கைங்கர்யமாக(௩)*இருங்கவிகளைப்புனையும். (நல்லன்பர்)(௪)"நல்லார்பரவும்" என்கிறபடியே அநந்யப்ரயோஜநபக்தியுக்தர். (ஏத்தும் உன்னுமமெல்லாம்) அந்தபக்தி பாரவஶ்யத்தாலே ஸ்தோத்ரம்பண்ணும்தேவரீருடைய திருநாமமெல்லாம். (என்றன்நாவினுள்ளே) அந்நத்திருநாமங்களைய நுஸந்திக்க வேணுமென்றிருக்கிற என்றன்நாவினுள்ளே. (அல்லும்பகலும் அமரும்படிநல்கு)(௫) "நள்ளிருளளவும் பகலும் நானழைப்பன்" என்னும்படி திவாராத்ரவிபாகமறப் பொருந்தி யிருக்கும்படி உபகரித்தருளவேணும். (அறுசமயம் வெல்லும்

(க) திருவாய்-௧௦-௬-௫. (௨) ஆழ்வான்முக்தகம்.
(௩) ௬௦. (௪) (௫) திருமொழி-௭-௩-௫.

பரம) (க) * கூறும்சமயங்களாறுங் குலேயும்படியிறே வெல்லு வது. இப்படி (வெல்லும்பரம) வெல்லுகிறமேலானவரே! ஶ்ரேஷ்ட்டரானவரே. (இராமாநுச) நாலெழுத்தால் நாராயண நாமத்திலும் அதிகமான திருநாமத்தையுடையவரே! உன்னுமமெல்லாம் என்றன் நாவினுள்ளே அல்லும்பகலுமமரும்படிநல்கு - இதென் விண்ணப் பம்" இதென் விஜ்ஞாபநம். தேவரீர் நாலெழுத்துடைய திருநாமம் என்னுவிலே அமரும்படி நல்கியருளவேணும். இராமாநுசன் என் றிறே முடியவருளிச்செய்தது.

(சொல்லின்தொகைகொண்டு) நூற்றெட்டுப்பாட்டாகச் சொல் லவேணுமென்று சொல்லின்தொகையை - ஸங்க்யாநிர்த்தேசத்தை, திருவுள்ளத்திலேகொண்டு. (உனதடிப்போதுக்கு) (உ) "இராமாநு சன் சரணாரவிந்தம் நாம்மன்னிவாழ" (ங) "இராமாநுசனடிப்பூமன் னவே" என்றிறே இவர் இராமாநுசனடிப்போதுக்கு வாசிகமாகத் தொண்டுசெய்தது; இப்படி தொண்டுசெய்யும் நல்லன்பர் அமுதனு ரிறே.(ஏத்தும்உன்னுமம்) அவர்களாலே ஸ்தோத்ரம் பண்ணப்பட்ட தேவரீர்திருநாமமான நூற்றெட்டுப்பாட்டும். (என்றன்நாவினுள் ளே அல்லும்பகலுமமரும்படிநல்கு) இத்தைநிரந்தரமநுஸந்திக்க வேணுமென்கிற என்னுவினுள்ளே திவாராத்ரம் திருநாமமமரும் படி அநுக்ரஹிக்கவேணும். (இதென்விண்ணப்பம்) (ச) *இதம்மம விஜ்ஞாபநம். * (ரு) அடியேன்செய்யும் விண்ணப்பமே. இது அமுத னார் நிர்வாஹத்தை அநுவதித்துச் சொன்னபடி.

ஸோமாசியாண்டானருளிச்செய்தது.

இனியென்குறை நமக்கெம்பெருமானார் திருநாமத்தால்,
முனிதந்த நூற்றெட்டுச் சாவித்திரியென்னும் நுண்பொருளைக்,
கலிதந்த செஞ்சொல்கலித்துறையந்தாதி பாடித்தந்தான்,
புனிதன் திருவரங்கத் தமுதாகிய புண்ணியனே.

அவ.—(இனியென்குறைநமக்கு எம்பெருமானார் திருநாமத் தால்) ஸகலவேத ஸாரமான ஸாவித்ரியின் ஸாரமாய் ப்ரபந்நகாயத் ரியாம்படி நூற்றெட்டுப்பாட்டிலும் "இராமாநுசன்" என்னும் திரு

(க) சசூ. (உ) க.
(ங) கo௫. (ச) யதி-வி-உo. (ரு) திருவிரு-க.

நாமத்தை யருளிச்செய்து உபகரிக்கையாலே த்ருஷ்டாத்ருஷ்டங்களிரண்டிலும் ஒருகுறைகளுமில்லையென்று பெற்றலாபத்தைப் பேசுகிறது.

வ்யா.—(இனியென்குறைநமக்கு)ஒன்றும்குறையில்லை. த்ருஷ்டத்தில் சொல்லப்புகில் (க) "வாயமுதம்பரக்கும்-இராமாநுசனென்றுசொல்லுமின்". அமுதன்வாயிலேயிறே அமுதமுண்டாவது.(உ) "హృద్యాన్యమృతకల్పాని మనః ప్రహ్లాదనాని చ - ஹ்ருத்யாந்யம்ருதகல்பாநிமந:ப்ரஹ்லாதநாநிச"(உ) "త్వామే వేక్ష్వాకునాథస్య భరతస్య కథాం కురు-தாமேவேக்ஷ்வாகு நாதஸ்ய பரதஸ்யகதாம்குரு" இவரும்இராமாநுசனிறே; ஆகையாலே த்ருஷ்டஸுகமுமுண்டு. மோக்ஷஹேதுவாகையாலே அத்ருஷ்டஸுகமுமுண்டு. அத்தாலே "இனியென்குறை" என்கிறது.(எம்பெருமானார்திருநாமத்தால்).(ந) "இராமாநுசன் திருநாமம்" என்றிறே அருளிச்செய்தது; அந்தத்திருநாமத்திலே. நம்பெருமானுன நாராயணன்நாமத்துக்குஒருகுறையுண்டு, பந்தத்துக்கும்ஹேதுவாகை; எம்பெருமானார் இராமாநுசனென்னும்திருநாமம் மோக்ஷத்துக்கே ஹேதுவாகையாலே அக்குறையுமில்லை. ஏவம்வித வைலக்ஷண்யத்தையுடைய திருநாமத்திலே பாடித்தந்தானென்கிறது. (முனிதந்த) (ச) "తస్య ధ్యానాన్తస్థస్య-தஸ்யத்யாநாந்தஸ்த்தஸ்ய" என்றும்,(ரு) "முனிமாப்பிரம முதல்வித்தாய்" என்றும், (சு) "முனியே" என்றுமிறே ஸ்ருஷ்ட்யுந்முகனுன ஸர்வேஶ்வரனைச் சொல்லுவது. அப்படிப்பட்ட ஸர்வேஶ்வரன் ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து, (ச) "వేదప్రదానతః పూర్వం గాయత్రీం వేదమాతరమ్-வேதப்ரதாநத: பூர்வம் காயத்ரீம் வேதமாதரம்" என்னும்படியான காயத்ரியையும் ப்ரணவபூர்வகமாக உபதேசித்தான். அது அஷ்டோத்தரசதமாயிறே உச்சரித்துப் போருவது. அப்படியே அநுஸந்திக்கும்படி, அதின் நுண்பொருளை-ஸூக்ஷ்மார்த்தத்தை. அந்த காயத்ரிக்கும் மாதாவாயிறே ப்ரணவமிருப்பது. அதில் அகாரத்தாலே எம்பெருமானையும், உகாரத்தாலே பிராட்டியையும், மகாரத்தாலே தச்சேஷபூதனுன சேதநனையுமிறேசொல்லுவது. (எ) "మకారస్తుతయో

---

(க) சந. (உ) ராமா-ஆர-சகு-நஎ-நக. (ந) (ச)
(ரு) திருவாய்-அ-கO-எ. (சு) திருவாய்-Oக-கO-ச. (எ)

[illegible]-மகாரஸ்துதயோர்தாஸ:" (க) "[illegible]-அக்ரத:" இத்யாதியாலே அகாரஉகாரமகாரார்த்தங்கள் சப்தார்த்தஸ்வாரஸ்யங்களோடே கூடியிறே யிருக்கிறது. இவரும் இராமாநுசனிறே. (உ) "[illegible]-ஓமித்யாத்மாநம்யுஞ்ஜீத" என்று சப்தஸ்வாரஸ்யத்தால் சேதநப்ரதாநத்வமுண்டிறே ப்ரணவத்துக்கு; அதிறே நுண்பொருளாவது. "இராமாநுசன்" என்றிறேபாட்டுத்தோறும் பதஸ்த்தமாயிருப்பது. உவ்வானவரிறேஉடையவர். தன்நாமத்திலும்ததீயநாமமிறே அவன்றனக்கு மிஷ்டமாயிருப்பது. இனித்தான் (ந) "[illegible]-தத்ஸவிதுர்வரேண்யம்" என்று ஆதித்யமண்டலாந்தர்வர்த்தியான நாராயணனையிறே அங்குப்ரதிபாதிக்கிறது. (ச) "[illegible]- யஏஷோந்தராதித்யே ஹிரண்மய:புருஷோத்ருஶ்யதே" (ரு) "[illegible]-ஸயஶ்சாயம்புருஷே।யஶ்சாஸாவாதித்யே।ஸஏக:" என்கிறபடியே (சா) * அவைதன்னொடும் வந்திருப்பிடம் மாயனிராமாநுசன்மனமிறே. அத்தாலே சிவந்தாயிற்று இவர்வடிவிருப்பது. இவரும் (எ) * ராமாநுஜதிவாகரரிறே. (அ) * கடலளவாய-சுடரொளியாலே (அ) * அவ்விருளைத்துரந்தது. இப்படியாயிற்று ஸாவித்ரியென்னும் நுண்பொருளைப்பாடித்தந்தது. ஸகலவேதஸங்க்ரஹமான திருமந்த்ரத்தின் தாத்பர்யமிறே ததீயசேஷத்வம். (கூ) "நின்திருவெட்டெழுத்துங்கற்று-நானுற்றது முன்னடியார்க்கடிமை".

நுண்பொருளைப்பாடித் தந்தப்ரகாரஞ் சொல்லுகிறது (கலிதந்தசெஞ்சொல் இத்யாதியாலே). கலிதருகையாவது-மிகைக்கைத்தருகை; அன்றிக்கே ஆரவாரமாதல், அபூர்வமாதல். இப்படி (கலியைத்தந்த) சப்தசக்தியைத்தந்த. (செஞ்சொல்) செவ்வியசொல். (கo) "செவிக்கினிய செஞ்சொல்" என்னக்கடவதிறே. (கலித்துறையந்தாதிபாடித்தந்தான்) கலித்துறையென்கிற பாவிலேயாயிற்று பாடித்தந்தது. (செஞ்சொல்கலித்துறை) ஶ்ராவ்யமான கலித்துறையிலேயா

(க) ராமா. ஆர. கச-க. (உ) தை-நா-ருக. (ந) காயத்ரீ.
(ச) சாந்தோ. க-சா-சா. (ரு) தைத்திரி. ப்ருகு-கo-ச.
(சா) கoந. (எ) ஆழ்வான்முக். (அ) ருகூ.
(கூ) திருமொழி-அ-கo-ந. (கo) திருவாய்-கo-சா-கக.

யிற்று அந்தாதிபாடித்தந்தது. அந்தாதிபாட்டு அடியெடுத்து ஸமல பமாயிறேயிருப்பது. (பாடித்தந்தான்) அநுபவபரீவாஹமாகப்பாடிப் பின்புள்ளார்க்கு முபகரித்தார். (புனிதன்) பரிசுத்தன்; பாடித்தந்த சுத்தி; அசுத்தரையுஞ் சுத்தராக்கவல்லசுத்தி; * (க) போற்றும் புநிதனைப்போற்றுமவரிறே. (திருவரங்கத் தமுதாகிய புண்ணியனே) திருவரங்கத் தமுதனாராகிறதார்மிகன். (உ) "இராமாநுசன் மிக்க புண்ணியன்" என்னுமாபோலே மிக்கபுண்ணியனடியாகவந்த புண்ணியம். [திருவரங்கத் தமுதாகிய புண்ணியன் எம்பெருமானார்திருநாமத்தால் - கலித்துறையந்தாதி பாடித்தந்தான் - இனியென்குறை நமக்கு] என்று க்ரியை. (௩) "అష్టోత్తరసహస్రం వా శతమష్ట సమాహితః। లక్ష్మణస్యమనుజప్యః ముముక్షుభిరతన్ద్రితైః-அஷ்டோத்தரஸஹஸ்ரம்வாசதமஷ்டஸமாஹிதஃ। லக்ஷ்மணஸ்யமநுர்ஜப்யஃ முமுக்ஷுபிரதந்த்ரிதைஃ" என்றும், (௪) "యోజపేల్లక్ష్మణమనుం నిత్యమేకాన్తసంస్థితః।ముచ్యతేసర్వపాపేభ్యో విష్ణులోకం సగచ్ఛతి- யோஜபேல் லக்ஷ்மணமநும் நித்யமேகாந்தஸம்ஸ்திதஃ। முச்யதேஸர்வபாபேப்யஃ விஷ்ணுலோகம் ஸகச்சதி" என்றுமிறே அகஸ்த்யஸம்ஹிதையில் ப்ரமாண ப்ராசஸ்த்யமிருப்பது; இவரும் லக்ஷ்மணமுனியென்று சொல்லப்படும் ராமாநுஜனிறே.

இராமாநுச நூற்றந்தாதி தனியன் வ்யாக்யாநம் முற்றிற்று.

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளேசரணம்.

(க) ருகூ. (உ) கக. (௩) (௪)



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# திருவரங்கத் தமுதனாரருளிச்செய்த இராமாநுசநூற்றந்தாதி.

## பெரியஜீய ரருளிச்செய்த உரையி னவதாரிகை.

ஸகல சாஸ்த்ர ஸங்க்ரஹமான திருமந்த்ரத்தினுடைய தாத்பர்யமாய், பகவதாகஸ்மிக க்ருபாலப்தபரிசுத்தஜ்ஞாநரான ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்த ஸாரார்த்தமாய், பரமகாருணிகரான நம்மாழ்வாருடைய பரிபூர்ணகடாக்ஷபாத்ரபூதரான ஸ்ரீமதுரகவிகளுடைய உக்த்யநுஷ்ட்டாநங்களாலே ப்ரகடிதமாய், ஆழ்வார்தம்மாலே நாதமுனிகளுக்கருளிச் செய்யப்பட்டதாய், அவர்திருவடிகளை யாஸ்ரயித்த யோக்யவிஷயங்களுக் குபதேசித்தருள அவர்கள் தாங்களுமப்படியே உபதேசிக்கையாலே உபதேசபரம்பராப்ராப்தமாய், அகில சேதநர்க்கும் ஸ்வரூபோபாய புருஷார்த்த யாதாத்ம்யரூபேண அவஸ்யாபேக்ஷிதமாய், பரமரஹஸ்யமாயிருந்துள்ள சரமபர்வநிஷ்ட்டா ப்ரகாரத்தை, எம்பெருமானார், கேவலக்ருபையாலே தம்மை ஆழ்வான் திருவடிகளிலேயாஸ்ரயிப்பித்துத்தந்முகேந உபதேசித்தருளக் கேட்டு, அவ்வர்த்தங்களையதாதர்சநம்பண்ணி, அநவரதம் எம்பெருமானார் திருவடிகளை ஸேவித்துக்கொண்டு போராநின்றுள்ள பிள்ளையமுதனார், அவருடைய திவ்யகுணங்களைத் தம்முடைய ப்ரேமத்துக்குப் போக்குவீடாகப் பேசியநுபவிக்கவேண்டும்படியான தசை தமக்கு விளைகையாலும் இவ்வர்த்தஜ்ஞாநம் சேதநர்க்கு ஸுஸங்க்ரஹமாம்படி பண்ணவேணுமென்கிற தம்முடைய பரமக்ருபையாலும், தாம் எம்பெருமானாருடைய திவ்யகுணங்களை ப்ரேமாநுகுணமாகப் பேசுகிறபாசுரங்களாலே தத்ப்ரபாவத்தை எல்லார்க்கும் ப்ரகா

சிப்பியாநின்றுகொண்டு முன்பு ஆழ்வார் திருவடிகளுக்கு அநந்யார்ஹரான ஸ்ரீமதுரகவிகள் ஸ்வநிஷ்டாகதநரூபேணவும் பரோபதேசரூபேணவும், உஜ்ஜீவநார்த்தத்தை லோகத்துக்குவெளியிட்டருளினாற்போலே, தாமும் ஸ்வநிஷ்டாகதந ரூபத்தாலும் பரோபதேசத்தாலும், அவரைப்போலே ஸங்க்ரஹேண பத்துப்பாட்டாகவன்றிக்கே பரக்கக்கொண்டு, ஆசார்யாபிமாநநிஷ்டர்க்கு ஜ்ஞாதவ்யார்த்தங்களை யெல்லாம் இப்ப்ரபந்தமுகேந வருளிச்செய்கிறார்.

"எம்பெருமானார் திருவடிகளிலே ப்ரேமமுடையவர்களுக்கு ஸாவித்ரிபோலே இது நித்யாநுஸந்தேய விஷயமாகவேணும்" என்றுயிற்று பாட்டுத்தோறும் திருநாமத்தைவைத்து நூற்றெட்டுப்பாட்டாக வருளிச்செய்தது; ஆகையால் இத்தை ப்ரபந்நஸாவித்ரி யென்றுயிற்று நம்முதலிக ளருளிச்செய்தது.

பூமன்னு மாது பொருந்திய மார்பன், புகழ்மலிந்த
பாமன்னு மாற னடிபணிந் துய்ந்தவன், பல்கலையோர்
தாம்மன்ன வந்த விராமாநுசன் சரணாரவிந்தம்
நாம்மன்னிவாழ, நெஞ்சே சொல்லுவோ மவன்நாமங்களே.

முதற்பாட்டு. தம்திருவுள்ளத்தைக் குறித்து "எம்பெருமானாருடைய திருவடிகளை நாம்பொருந்தி வாழும்படியாக அவருடைய திருநாமங்களைச் சொல்லுவோம் வா" என்கிறார்.

(க) "[illegible]—பத்மேஸ்த்திதாம்" என்கிறபடியே தாமரைப்பூவை இருப்பிடமாகவுடைய பெரியபிராட்டியார், இந்த போக்யதையைக் கண்ட பின்பு அத்தையுபேக்ஷித்து (உ) "இறையும்-அகலகில்லேன்" என்று நித்யவாஸம் பண்ணும் திருமார்வை யுடையவனுடைய கல்யாணகுணங்களால் ஸம்ருத்தமாயிருந்துள்ள திருவாய்மொழியிலே, (ங) "கவியமுதம் நுகர்ச்சியுறுமோமுழுதும்" என்னும்படி திருவுள்ளத்தில் ஊற்றத்தையுடையரான ஆழ்வாருடைய திருவடிகளை ஆஶ்ரயித்து உஜ்ஜீவித்தவராய், அநேக சாஸ்த்ரங்களை யதிகரித்திருக்கச் செய்தேயும் தத்வஹித புருஷார்த்த நிர்ணயம் பண்ணவறியாதே ஒன்றிலுமொரு நிலையற்றிருக்கு மவர்கள், அவற்றினுடைய யாதாத்ம்யவேதநத்தாலே ஸுப்ரதிஷ்டிதராம்படியாக

(க) ஶ்ரீஸூ. (உ) திருவாய். கு - கo - கo.

(ங) திருவாய். அ - கo - டு.

வந்தவதரித்த" எம்பெருமானுருடைய திருவடித்தாமரைகளை, "இதுவே ப்ராப்யம்" என்றறிந்த நாம் பொருந்தி வாழும்படியாக, நெஞ்சே! அவருடைய திருநாமங்களைப் பேசுவோம்.

"தாம் மன்ன" என்றது - தாங்களே வந்தாஶ்ரயிக்கும்படி யென்றுமாம். "நாம்" என்றது - அநாதிகாலம் இதரவிஷயங்களின் காற்கடையிலே துவண்ட நா மென்னவுமாம். மன்னுதல் - பொருந்தலும், நிலைப்பாடும். க

கள்ளார் பொழில் தென்னரங்கன், கமலப்பதங்கள்நெஞ்சில்
கொள்ளாமனிசரை நீங்கி, குறையல் பிரானடிக்கீழ்
விள்ளாதவன்ப னிராமாநுசன் மிக்க சீலமல்லா
துள்ளாதென்னெஞ்சு, ஒன்றறியேன் எனக்குற்றபேரியல்வே.

இரண்டாம்பாட்டு. என்னுடைய நெஞ்சானது எம்பெருமானுருடைய சீலகுணமொழிய வேறொன்றை நினையாதபடியாயிற்று; இது எனக்கு ஸித்தித்த பெருவிரகொன்றுமறிகிறிலேன் என்கிறார்.

மதுமிக்க பொழிலை யுடைத்தாய் தர்சநீயமாயிருந்துள்ள கோயிலிலே கண்வளர்ந்தருளுகையாலே அத்தேச ஸம்பந்தத்தையிட்டுத் தம்மைநிரூபிக்கலாம்படி யிருக்கிற பெரிய பெருமாளுடைய, விகாஸாதிகளால் தாமரைபோலே போக்யமான திருவடிகளைத் தங்கள் மநஸ்ஸிலே ஒருகாலும் வையாதே, சாஸ்த்ரவஶ்யமான ஜந்மத்திலே பிறந்துவைத்து நிர்ப்பாக்யராயிருக்கு மவர்களை விட்டகன்று, திருக்குறையலூரைத் திருவவதாரஸ்த்தலமாகவுடையராய், திவ்யப்ரபந்த நிர்மாணமுகத்தாலே லோகோபகாரகரான திருமங்கையாழ்வாருடைய திருவடிகளின்கீழ்விண்டு நீங்காத ஸ்நேஹத்தையுடையராயிருந்துள்ள எம்பெருமானுருடைய நிரவதிகமான சீலகுணத்தையொழிய, என்னுடைய நெஞ்சானது வேறொன்றையும் சிந்திக்கிறதில்லை; இது எனக்கு ஸித்தித்த பெரியவிரகு ஒன்றுமறிகிலேன்.

விள்ளுதல் - நீங்குதல். இயல்வு - விரகு. உ

பேரியல் நெஞ்சே யடிபணிந்தே னுன்னைப், பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ள சுற்றம் புலத்திப், பொருவருஞ்சீ
ராரியன் செம்மை யிராமாநுசமுனிக்கன்பு செய்யும்
சீரிய பேறுடையார், அடிக்கீழென்னைச் சேர்த்ததற்கே.

மூன்றும்பாட்டு. ப்ராக்ருதரோட்டை ஸம்பந்தத்தை நீக்கி எம்பெருமானுர் திருவடிகளில் ஸம்பந்த முடையவர்கள் திருவடிக

ளிலே என்னைச் சேர்த்த உபகாரத்துக்கு நெஞ்சே! உன்னை வணங்கினேன் என்கிறார்.

பெரிய ஸ்வபாவத்தையுடைய மநஸ்ஸே! ஹேயஜந்மாக்களாய் அஹங்காராதி தோஷ தூஷிதரானவர்களோடுண்டான ஸம்பந்தத்தை நீக்கி, உபமாநரஹிதமான குணங்களையுடையராய், ஸமதிகத ஸமஸ்த சாஸ்த்ரராய், ஆஶ்ரிதருடைய கௌடில்யம் பார்த்துக் கைவிடாதே அவர்களுக் கீடாகத் தம்மை யமைத்துப் பரிமாறும் ஆர்ஜவ குணயுக்தரான எம்பெருமானார் விஷயத்திலே ப்ரேமத்தைப் பண்ணுகையாகிற பரமபுருஷார்த்தத்தை யுடையவர்களுடைய திருவடிகளின்கீழே என்னைச் சேர்த்த இந்த மஹோபகாரத்துக்கு உன்னை வணங்கினேன்.

பேய்ப்பிறவி - தீதானபிறவி. பூரியர் - பொல்லாதவர்கள். பூரி - பொல்லாங்கு. புலத்தல் - நீக்கல். ரு

என்னைப் புவியி லொருபொருளாக்கி, மருள்சுரந்த
முன்னைப்பழவினை வேரறுத்து, ஊழிமுதல்வனையே
பன்னப்பணித்த விராமாநுசன் பரன்பாதமுமென்
சென்னித்தரிக்க வைத்தான், எனக்கேதும் சிதைவில்லையே.

நாலாம்பாட்டு. இப்படி இவர் திருவுள்ளத்தைக் கொண்டாடினவாறே, "இன்னமும் துர்வாஸனையாலே இந்நெஞ்சுதான் நழுவகிற்குமாகில் உம்முடைய நிஷ்டைக்கு ஹாநிவாராதோ?" என்ன; எம்பெருமானார்தாமே நிர்ஹேதுகமாக அங்கீகரிக்கப்பெற்ற எனக்கு ஒருஹாநியும் வாராது என்கிறார்.

காலோபலக்ஷித ஸகல பதார்த்தங்களுக்கும் காரணபூதனை ஸர்வேஶ்வரனையே ஸர்வரும் விவேகித்தநுஸந்திக்கும்படி ஶ்ரீபாஷ்யமுகேந வருளிச்செய்த ஸர்வோத்க்ருஷ்டரான எம்பெருமானார், அவஸ்துவானவென்னை லோகத்திலே ஒரு வஸ்துவாம்படிபண்ணி, அவித்யா ஸம்வர்த்திதமாய், அநாதியாகையாலே மிகவும் பழைய தாய்ப்போருகிற கர்மங்களை ஸவாஸநமாகப் போக்கித் தம்முடைய திருவடிகளையும் என்தலையிலே தரிக்கும்படி வைத்தருளினார்; ஆன பின்பு, எனக்கு ஒரு ஹாநியுமில்லை.

அன்றிக்கே, "பரன்பாதமும் என் சென்னித்தரிக்க வைத்தான்" என்று "பரன்" என்கிற வித்தை மேலேகூட்டி, ஸர்வஸ்மாத்

பரனனஸர்வேஸ்வரனுடைய திருவடிகளையும் என் சென்னியிலே தரிக்கவைத்தானென்னவுமாம். "பரன்பாதமென்றன் சென்னித் தரிக்கவைத்தான்" என்று பாடமுமாம்.

பன்னுதல் — ஆராய்தல். சிதைவு - அழிவு. ச

எனக்குற்ற செல்வ மிராமாநுசனென்று, இசையகில்லா
மனக்குற்ற மாந்தர் பழிக்கில்புகழ், அவன்மன்னியசீர்
தனக்குற்றவன்ப ரவன்திருநாமங்கள் சாற்றுமென்பா
இனக்குற்றங் காணகில்லார், பத்திபேய்ந்த இயல்விதென்றே.

அஞ்சாம்பாட்டு. இப்படி எம்பெருமானாருடைய விஷயீகார தார்ட்யத்தை யருளிச்செய்தவநந்தரம், "அவர் திருநாமங்களைச் சொல்லுவோமென்று முன்பு உபக்ரமித்தபடியே ஸ்தோத்ரம் பண்ணுவதாக உத்யோகித்தவர், அதில் நிரவத்யமாகச் செய்கை அரிதாகையாலே லாக்ஷணிகர் நிந்திப்பார்களேயென்று நிவ்ருத்யுந்முகராய், மீளவும் தாமே சித்தஸமாதானம் பண்ணிக்கொண்டு ப்ரவ்ருத்தராகிறார்.

எனக்கு ஸ்வரூபாநுரூபமான ஸம்பத்து எம்பெருமானாரென்று§(ஏத்த) இசையாத மநோதோஷத்தையுடைய மநுஷ்யர் நிந்தித்தார்களாகில், அது ஸ்துதியாமித்தனை. அவருடைய நித்யஸித்த கல்யாணகுணங்களுக்குத்தகுதியான ப்ரேமத்தையுடையவர்கள் "பக்தியோடே கூடின ப்ரவ்ருத்தியையுடையது" என்று அவருடைய திருநாமங்களைச் சொல்லாநின்றுள்ள என்னுடைய சந்த (ச்ந்த) ஸ்ஸமூஹத்தினுடைய குற்றத்தைக் காணமாட்டார்கள்.

இயல்வு ப்ரவ்ருத்தி. இயல்விதென்றது - இயல்வையுடையதென்றபடி. "பத்திமேய்ந்த வியலிது" என்று பாடமானபோது, இது பக்தியோடேகூடிய சொல்லென்று கொண்டு குற்றம் காணகில்லாரென்கை.

பா - சந்தஸ்ஸு. இனம் - ஸமூஹம். தாழிசை, துறை, விருத்தம் என்று இனத்தின் வகையான கவித்துறையாகையாலே பாவினமென்கிறாராகவுமாம். ரு

இயலும் பொருளுமிசையத் தொடுத்து, ஈன்கவிகளன்பால்
மயல்கொண்டு வாழ்த்து மிராமாநுசனை, மதியின்மையால்
பயிலும் கவிகளில் பத்தியில்லாத வென்பாவிநெஞ்சால்
முயல்கின்றனன், அவன்றன்பெருங்கீர்த்தி மொழிந்திடவே.

§ குண்டலிதம்க்வாசித்கம், ப்ரக்ஷிப்தம்.

ஆறும்பாட்டு. "பத்தியெய்ந்த வியல்விதென்று என்பாவினக் குற்றம் காணகில்லார்" என்றார்கீழ், அந்தபக்திதான் தமக்குண்டோ வென்று பார்த்தவிடத்தில், அதுவும் விஷயாநுகுணமாகத் தமக்கில்லாமையாலே ஸ்தோத்ரோத்யுக்தரான தம்மை கர்ஹிக்கிறார்.

சப்தமும் அர்த்தமும் பொருந்தத்தொடுத்து விலக்ஷணரான கவிகள் ப்ரேமத்தாலே அறிவழிந்து ஏத்தாநின்றுள்ள எம்பெருமானை ப்ரதிபாதகத்வேந செறிந்திருப்பதான கவிகளில் பக்தியின்றிக்கேயிருக்கிற என்னுடைய பாபிஷ்ட்டமான மநஸ்ஸாலே அவருடைய நிரவதிக கீர்த்தியைப் பேசுவதாக அறிவுகேட்டாலே உத்ஸாஹியாநின்றேன்; இப்படி துஸ்ஸகப்ரவ்ருத்தியிலே இழிந்த மூர்க்கனை நான் இனி எத்தைச்செய்யேனென்று கருத்து.

"பாவிநெஞ்சால் அவன்றன் பெருங்கீர்த்தி மொழிந்திட" என்றது - இப்படி யிருந்துள்ள மநஸ்ஸோடே கூடிக்கொண்டு அவருடைய கீர்த்தியைப் பேசுவதாக வென்கை. பயிலுதல்-செறிதல். முயல்தல் - உத்ஸாஹித்தல். சு

மொழியைக் கடக்கும் பெரும்புகழான், வஞ்சமுக்குறும்பாம்
குழியைக்கடக்கும் நங் கூரத்தாழ்வான் சரண்கூடியபின்,
பழியைக் கடத்து மிராமாநுசன்புகழ்பாடியல்லா
வழியைக் கடத்தல், எனக்கினியாதும் வருத்தமன்றே.

ஏழாம்பாட்டு. இப்படி தம்முடைய அயோக்யதையைப்பார்த்து "நமக்கிது துஸ்ஸகம்" என்று மீள நினைத்தவர், "ஆழ்வான் திருவடிகளில் ஸம்பந்தமுண்டானபின்பு எனக்கு அசக்யாம்சமொன்றுமில்லை" என்று ஸ்தோத்ரத்திலே ப்ரவ்ருத்தராகிறார்.

பேச்சுக்கு நிலமல்லாத பெரியபுகழையுடையராய், ஆத்மாபஹாரத்தை விளைப்பதாய்த் தனித்தனியே ப்ரபலமாய்க்கொண்டு மூலையடியே நடத்துவதான அபிஜந வித்யா வ்ருத்தங்களாகிற படுகுழியைக் கடந்திருப்பாராய், நமக்கு நாதரான கூரத்தாழ்வானுடைய திருவடிகளை ஆஸ்ரயித்தபின்பு, பழிபோலே அவஸ்யமநுபோக்தவ்யமான பாபகர்மங்களில் மக்நராகாதபடி நிஸ்தரிப்பிக்கும் எம்பெருமானாருடைய திவ்யகுணங்களை ப்ரீதிப்ரேரிதராய்க் கொண்டு பாடி ஸ்வரூபாநுரூபமல்லாத மார்க்கங்களைத் தப்புகையாலே எனக்கு இனியொன்றும் அருமையில்லை.

"குழியைக்கடத்தும்" என்றுபாடமானபோது, தம்முடைய அபிமாநாந்தர்ப்பூதரையும் இப்படிகுழியில்விழாமல் கடத்துமவ ரென்கை. "எங்கூரத்தாழ்வான்" என்றும் பாடஞ்சொல்லுவர்கள். எ

வருத்தும் புறவிருள்மாற்ற, எம்பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ்தன்னையும் கூட்டி, ஒன்றத்
திரித்தன்றெரித்த திருவிளக்கைத் தன்திருவுள்ளத்தே
யிருத்தும்பரமன், இராமாநுச னெம்மிறையவனே.

எட்டாம்பாட்டு. [க] முதலிலே "எம்பெருமானார் திருநாமங்களைச்சொல்லுவோம் வா" என்று தம்திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்து; [உ] அநந்தரம், தம்முடைய திருவுள்ளம் எம்பெருமானாருடைய சீலகுணமொழிய மற்றொன்றறியாதிருக்கிறபடியைப் பேசி; [ந] அநந்தரம், தம்முடைய திருவுள்ளம் தமக்குப்பண்ணின உபகாரத்தை யநுஸந்தித்து அதின்காலிலே விழுந்து; [ச] அநந்தரம், தம்முடைய திருவுள்ளத்தினுடைய அஸ்த்தைர்யத்தைச்சொல்லி, "இன்னமுமுமக்கிது நிலைநின்றவாறென்?" என்றவர்களைக்குறித்து, "எம்பெருமானார் தம்முடைய விஷயீகாரதார்ட்யத்தைத் தர்சிப்பித்தாராகையாலே நமக்கொரு ஹாநியுமில்லை" என்று; [ரு] அநந்தரம், தத்விஷய ஸ்தோத்ரப்ரவ்ருத்தரானவர், லாக்ஷணிகர் நிந்திக்கில் செய்வதென்னென்று நிவ்ருத்யுந்முகராய், மீளவும் தாம் "எம்பெருமானாரளவில் ப்ராப்யபுத்தியில்லாதார் நிந்தித்தார்களாகில் ஸ்துதியாமித்தனை, தத்விஷயப்ரேமயுக்தர் "இவனுடையப்ரேமக்ருதமன்றோ?" என்று இதில் தோஷதர்சநம் பண்ணமாட்டார்கள்" என்று ப்ரவ்ருத்யுந்முகராய்; [சு] அநந்தரம், அந்த ப்ரேமந்தன்னை நிரூபித்தவிடத்தில் அதுவும் தமக்கு விஷயாநுரூபமாகப் போராமையாலே தமக்கு ஸ்தோத்ராதிகாரமில்லாமையைச் சொல்லி க்ஷேபித்து; [எ] அநந்தரம், ஆழ்வான் திருவடிகளில் ஸம்பந்த பலத்தை யநுஸந்தித்து "இது உண்டான பின்பு நமக்கசக்யாம்சமொன்று மில்லை" என்று ஸமாஹிதராய் நின்றார்கீழ்; இனி மேலெல்லாம் ஸ்தோத்ரம் பண்ணுகிறார்.

பொய்கையாழ்வா ரருளிச்செய்த திவ்யப்ரபந்தத்தைத் தம்முடைய திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டிருக்கும் பெருமையையுடைய எம்பெருமானார் எங்களுக்கு நாதரென்கிறார்.

(க) "భీషాస్మాద్వాతః పవతే। భీషోదేతి సూర్యః-பீஷாஸ்மாத்வாதஃ பவதே, பீஷோதேதிஸூர்ய:" இத்யாதிப்படியே பகவதாஜ்ஞாநுஸாரிகளாயிருக்கிற வஸ்துக்களிலே ஸ்வதந்த்ர புத்தியைப் பண்ணுவித்து, அவ்விஷயமான பாதகத்வ ப்ரதிபத்தியாலே சேதநரைவருந்தப்பண்ணுமதாய், ப்ரத்யக்கான ஆத்மாவும் ததந்தராத்மாவான ஈஸ்வரனும் போலன்றிக்கே சக்ஷுர்விஷயமாய்க் கொண்டு புறம்பேதோற்றுகிற விபூதியை விஷயீகரித்திருக்கும் அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்கும்படியாக ப்ரபந்நகுலோத்தேஶ்யராய் பரமோபகாரகரான பொய்கையார், வேதாந்தத்தினுடைய அர்த்தத்தையும் நடைவிளங்கு தமிழானசொல்லையும் கூட்டித் தன்னிலேசேரும்படி ஸம்பந்திப்பித்துத் திருவிடைகழியிலே ஸர்வேஶ்வரன்வந்து நெருக்கினபோது (உ) "வையந்தகளியா" என்றுதொடங்கி ப்ரகாசிப்பித்த திருவிளக்கைத் தம்முடைய திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டிருக்கும் நிரதிசயப்ரபாவரான எம்பெருமானார் எங்களுக்குநாதர். அ

இறைவனைக்காணு மிதயத்திருள்கெட, ஞானமென்னும்
நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடி தாள்கள், நெஞ்சத்
துறையவைத்தாளு மிராமாநுசன் புகழோதும்நல்லோர்
மறையினைக்காத்து, இந்தமண்ணகத்தே மன்னவைப்பவரே.

ஒன்பதாம்பாட்டு. பூதத்தாழ்வார் திருவடிகளைத்தம் திருவுள்ளத்திலே வைத்தநுபவிக்குமெம்பெருமானார் திவ்யகுணங்களைச்சொல்லுமவர்கள், வேதத்தை ரக்ஷித்து லோகத்திலே ப்ரதிஷ்ட்டிப்பிக்குமவர்களென்கிறார்.

வகுத்தசேஷியானவனை ஸாக்ஷாத்கரிக்கைக்கு உபகரணமான ஹ்ருதயத்தைப் பற்றிக்கிடக்கிற அஜ்ஞாநாந்தகாரமானது நசிக்கும்படியாக, (ங) "அன்பேதகளியா" என்று தொடங்கி (ங) "ஞானச்சுடர் விளக்கேற்றினேன்" என்று பரஜ்ஞாநமாகிற பரிபூர்ணதீபத்தைப் ப்ரகாசிப்பித்த ஶ்ரீபூதத்தாராகிற ஸ்வாமியுடைய திருவடிகளைத் திருவுள்ளத்திலே நிரந்தரவாஸம்பண்ணும்படியாகவைத்து அநுபவிக்கும் எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களை ஸ்தோத்ரம்பண்ணும் ஸத்துக்களானவர்கள், பாஹ்ய குத்ருஷ்டிகளாலழிக்கவொண்ணாதபடி வேதத்தை ரக்ஷித்து இந்த லோகத்திலே ஸுப்ரதிஷ்ட்டிதமாக வைக்குமவர்கள். கூ

(க) தைத்தி - ஆ - உ - அ. (உ) க - திருவ - க. (ங) உ - திருவ - ௫.

மன்னியபேரிருள் மாண்டபின், கோவலுள் மாமலராள்
தன்னொடுமாயனைக் கண்டமைகாட்டும், தமிழ்த்தலைவன்
பொன்னடிபோற்று மிராமாநுசற் கன்புபூண்டவர்தாள்
சென்னியிற்சூடும் திருவுடையார், என்றும் சீரியரே.

பத்தாம்பாட்டு. பேயாழ்வார்திருவடிகளை ஸ்துதிக்கும் ஸ்வபாவரான எம்பெருமானார்விஷயத்திலே ஸ்நேஹயுக்தர் திருவடிகளை சிரஸாவஹிக்குமவர்கள் எல்லாக்காலத்திலும் சீரியரென்கிறார்.

பேர்க்கப்பேராதபடி நின்றஅஜ்ஞாநமாகிற மஹாந்தகாரமானது முற்பாடரான ஆழ்வார்களிருவரும் ஏற்றின திருவிளக்காலே நிஸ்ஸேஷமாகப்போனபின்பு, (க) "நீயும்திருமகளும்" என்கிறபாட்டின்படியே திருக்கோவலூரிலே திருமகளாருடனே க்ருஷ்ணவதாரத்தில் ஆஸ்ரிதபவ்யதையடங்கலும் தோற்றும்படி வந்துநின்ற ஸர்வேஸ்வரனை ஸாக்ஷாத்கரித்த ப்ரகாரத்தை, (உ) "திருக்கண்டேன்" இத்யாதியாலே தர்சிப்பித்த, தமிழுக்குத்தலைவரான பேயாழ்வாருடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளைப் புகழும் ஸ்வபாவரான எம்பெருமானார் விஷயத்தில் ப்ரேமத்தைத் தங்களுக்கு ஆபரணமாகத் தரித்திருக்குமவர்களுடைய திருவடிகளைச் செவ்விப்பூச்சூடுவாரைப்போலே தங்கள் சிரஸ்ஸிலேதரிக்கும் ஸம்பத்தையுடையவர்கள் ஸர்வகாலத்திலும் சீரியர்.

போற்றுதல் - புகழ்தல். அன்புபூண்டவரென்றது - அன்பிலே பூட்சியையுடையவர்கள்; அதிலே ஊன்றியிருக்குமவர்கள் என்னவுமாம். க௦

சீரியநான்மறைச் செம்பொருள், செந்தமிழாலளித்த
பாரியலும் புகழ்ப்பாண்பெருமாள், சரணாம்பதுமத்
தாரியல்சென்னி யிராமாநுசன் றன்னைச் சார்ந்தவர்தம்
காரியவண்மை, என்னால் சொல்லொணாதிக்கடலிடத்தே.

பதினோராம்பாட்டு. திருப்பாணாழ்வார் திருவடிகளைச் சிரஸாவஹிக்கும் எம்பெருமானாரைத் தங்களுக்கு அபாஸ்ரயமாகப்பற்றியிருக்குமவர்களுடைய கார்யவைலக்ஷண்யம் இந்தலோகத்தில் என்னால் சொல்லித் தலைக்கட்டவொண்ணாதென்கிறார்.

பகவத்ஸ்வரூபரூபகுண விபூதிகளை உள்ளபடி ப்ரதிபாதிக்கையாலேவந்த சீர்மையையுடைத்தாய் ருகாதிபேதத்தாலே நாலு

(க) க - திருவ - அசு. (உ) ந - திருவ - க.

வகைப்பட்டிருந்துள்ள வேதத்தினுடைய ஸ்வரஸமான அர்த்தத்தை (க) * நடைவிளங்கு தமிழாலே உபகரித்தருளினவராய், பூமியிலே வர்த்தியாநின்றுள்ள கீர்த்தியையுடைய திருப்பாணாழ்வார் திருவடிகளாகிற தாமரைப்பூவாலே அலங்க்ருதமான திருமுடியையுடைய எம்பெருமானாரை அபாஶ்ரயமாகப்பற்றி யிருக்குமவர்களுடைய அதுஷ்டாநவைலக்ஷண்யம் இந்தக்கடல் சூழ்ந்த பூமியில் என்னால் சொல்லித் தலைக்கட்டவொண்ணாது.

[இக்கடலிடத்தே இராமாநுசன் றன்னைச் சார்ந்தவர்] என்றந்வயித்து, பகவத்ஸமாஶ்ரயணத்துக்குங்கூட இசைவாரில்லாத இந்தலோகத்திலே அதினுடைய எல்லை நிலத்தளவும்வந்து எம்பெருமானாரையாஶ்ரயிக்கப்பெற்றவர்களென்னவுமாம். "பாரியல்" என்றவிடத்தில், இயல்தல் - நடத்தல். "தாரியல்" என்றவிடத்தில், இயல்தல் - அலங்கரித்தல். தார் - பூ. காரியம் - க்ருத்யம். "காரியல்வண்ணம்" என்று பாடமானபோது, காரினுடைய இயல்வையுடைத்தான ஔதார்யமென்கை. அதாவது - ஜலஸ்த்தலவிபாகம்பாராதே அது வர்ஷிக்குமாபோலே ஸர்வவிஷயமாக எம்பெருமானாருடைய திவ்யகுணங்களை வர்ஷிக்கை. (கக)

இடங்கொண்ட கீர்த்திமழிசைக்கிறைவன், இணையடிப்போ
தடங்குமிதயத் திராமாநுசன், அம்பொற்பாதமென்றும்
கடங்கொண்டிறைஞ்சுந்திருமுனிவர்க் கன்றிக்காதல்செய்யாத்
திடங்கொண்ட ஞானியர்க்கே, அடியேனன்புசெய்வதுவே.

பன்னிரண்டாம்பாட்டு. திருமழிசைப்பிரானுடைய திருவடிகளுக்கு ஆவாஸமான திருவுள்ளத்தையுடைய எம்பெருமானாரை ஆஶ்ரயித்திருப்பார்க்கொழிய ஸ்நேஹியாதவர்கட்கே நான் ஸ்நேஹித்திருப்பதென்கிறார்.

பூமியெங்கும் வ்யாப்தையான குணவத்தாப்ரதையையுடையரான திருமழிசைப்பிரானுடைய சேர்த்தியழகை யுடைத்தான திருவடிகளாகிற செவ்விப்பூக்கள் தன்னுள்ளே அடங்கும்படியான திருவுள்ளத்தை யுடையராயிருக்கிற எம்பெருமானாருடைய விலக்ஷணமாய் ஸர்வஸமாஶ்ரயணீயமான திருவடிகளை ஸர்வகாலத்திலும் ஸ்வரூபப்ராப்தமென்று நினைத்து வணங்குகையாகிற ஸம்பத்தை

(க) பெருமாள்திரு - க - கo.

யுடையராய், தத்விஷய மநநசீலராயிருக்குமவர்களுக்கொழிய ஸ்நே ஹத்தைப்பண்ணாத த்ருடதரஜ்ஞாநயுக்தர்க்கேஅடியேன் ஸ்நேஹத் தைப்பண்ணுவது.

கடம்-கடன், ப்ராப்தம். திடம்-த்ருடம். கொள்கை-உடைத்தாகை.

செய்யும் பசுந்துளவத் தொழில்மாலையும், செந்தமிழில்
பெய்யும்மறைத் தமிழ்மாலையும், பேராதசீரரங்கத்
தய்யன்கழற்கணியும் பரன்றாளன்றியாதரியா
மெய்யன், இராமாநுசன் சரணேகதிவேறெனக்கே.

பதின்மூன்றும்பாட்டு. ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் திரு வடிகளையொழிய மற்றொன்றில் ஆதரமற்றிருக்கும் எம்பெருமானார் திருவடிகளே எனக்கு ப்ராப்யமென்கிறார்.

(க) * மிக்கசீர்த்தொண்டரான தம்மாலே செய்யப்பட்டதாய், தம்முடைய கரஸ்பர்சத்தாலே வந்த புதுக்கணிப்பெல்லாம் நிறத்தி லே காணலாம்படி யிருக்கிற திருத்துழாயாலே வகுப்புண்டாகச் சமைத்த திருமாலையையும், ஸ்வார்த்த ப்ரகாசகமான தமிழிலே யுண் டாக்கப்பட்டதொரு வேதமென்னலான தமிழ்த்தொடையையும், (உ) "வீடில்சீர்" என்கிறபடியே நித்யஸித்தமான கல்யாணகுணங் களை யுடையராய்க் கொண்டு (௩) "ஐயனே அரங்கனே" என்னு ம்படியே பரமபந்துத்வம்தோற்றக்கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பெரிய பெருமாளுடைய திருவடிகளுக்குச் சாத்துமவராய், சேஷ த்வ காஷ்ட்டையிலே நிற்கையாலே சேஷத்வத்துக்கும்தமக்கு மேற் பட்டாரில்லை யென்னும்படியிருக்கிற ஸ்ரீதொண்டரடிப் பொடியாழ் வாருடைய திருவடிகளையொழிய விரும்பாத ஸத்யசீலரான எம் பெருமானாருடைய திருவடிகளே எனக்கு விசேஷித்து ப்ராப்யம். பெய்தல் - உண்டாக்குதல். பேராமை - நீங்காமை. கரு

கதிக்குப்பதறி வெங்கானமும் கல்லும் கடலுமெல்லாம்
கொதிக்கத் தவஞ்செய்யுங் கொள்கையற்றேன், கொல்லிகாவலன்சொல்
பதிக்குங் கலைக்கவிபாடும் பெரியவர் பாதங்களே
துதிக்கும் பரமன், இராமாநுசனென்னைச் சோர்விலனே.

---

(க) திருமொழி - சக - க - கூ. (உ) திருவாய் - ச - கO - உ.

(௩) திருமாலை - ௩௩.

ஸ்ரீகுலசேகரப் பெருமாளுடைய திவ்யஸூக்தியைப் பாடு மவர்களை ஏத்து மெம்பெருமானார் என்னைப் பிரியாமையாலே புருஷார்த்த லாபத்துக்காக துஸ்ஸகஸாதநங்களை யநுஷ்ட்டிக்கும் ஸ்வபாவம் போகப்பெற்றேனென்கிறார்.

ஸ்ரீகுலசேகரப் பெருமாள் ரத்நங்களைப் பதித்தாற்போலே சாஸ்த்ரச் சொற்களைப் பதித்தகவிகளை ப்ரீதிக்குப் போக்குவிட்டுப்பாடாநின்றுள்ள வைபவத்தை யுடையவர்களுடைய திருவடிகளையே ஏத்துமவராய், பாகவதவிஷயப்ரேமத்துக்குத் தமக்கு மேற்பட்டாரில்லாதபடியிருக்கும் எம்பெருமானார் என்னைவிட்டு நீங்குகிறிலர்; ஆதலால், ப்ராப்யலாபத்தைப்பற்ற த்வரித்து (க) "பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும் ஐந்து நெருப்பிடையே நிற்கவும்" என்கிறபடியே அத்யுஷ்ணமான காட்டோடு மலையோடு கடலோடுவாசியற எல்லாவிடத்திலும் ஸர்வாவயவங்களும் ஒக்கநின்று கொதிக்கும்படியாகத் தபஸ்ஸுக்களைப் பண்ணும் ஸ்வபாவம் போகப் பெற்றேன்.

அன்றிக்கே (வெம்கானமும் கல்லும் கடலும் எல்லாம் கொதிக்கத் தவஞ்செய்யும்கொள்கை) என்றதுக்கு - இவனுடைய தப:க்ரௌர்யத்தைக்கண்டு அவைதானும் நின்று பரிதபிக்க அவ்வவ ஸ்தலங்களிலே தபஸ்ஸுபண்ணுகிற்கும் ஸ்வபாவம் என்றுஞ் சொல்லுவர்கள். (கொல்லிகாவலன் சொல்பதிக்கும் கலைக்கவி) என்றதுக்கு - ஸ்ரீகுலசேகரப் பெருமாள் அநுபவபரீவாஹரூபமான ஸ்வோக்திகளை ரத்நங்களைப்பதித்து வைத்தாற்போலே நிரைத்துவைத்ததாய் சாஸ்த்ரரூபமாயிருந்துள்ள கவிகளென்னவுமாம். கொள்கை - ஸ்வபாவம். சோர்வு - பிரிவு. சோர்விலனென்றது - பிரிவிலனென்றபடி. (கச)

சோராதகாதல் பெருஞ்சுழிப்பால், தொல்லை மாலையொன்றும்
பாராதவனைப் பல்லாண்டென்று காப்பிடும், பான்மையன்றாள்
பேராதவுள்ளத் திராமாநுசன்றன் பிறங்கியசீர்
சாராமனிசரைச்சேரேன், எனக்கென்ன தாழ்வினியே.

பதினஞ்சாம்பாட்டு. பெரியாழ்வார் திருவடிகளிலே ப்ரவணசித்தரான எம்பெருமானார் குணங்களில் அநந்விதரைச்சேரேன், எனக்கென்னதாழ்வு உண்டென்கிறார்.

---

(க) ரூ - திருவ. எசு.

அவ்யபிசாரிணியான பக்தியினுடைய ப்ரவாஹத்தில் பெரிய சுழியில் அகப்படுகையாலே, நித்யனாய், ஸ்வேதரஸமஸ்தவஸ்துக்க ளுக்கும் ரக்ஷகனுகையாலே வந்தபெருமையையுடையவனை ஏகதேச மும் நிரூபியாதே, அநித்யராய் ரக்ஷ்யபூதராயிருப்பார்க்கு ஆயுரர்த் தமாக மங்களாசாஸநம் பண்ணுவாரைப்போலே அவனைக்குறித்து, (க) "பல்லாண்டு பல்லாண்டு" என்று காலத்தைப்பெருக்கி (க) "உன் சேவடி செவ்விதிருக்காப்பு" என்று மங்களாசாஸநம் பண்ணுகின்று ள்ள இத்தையே தமக்கு ஸ்வபாவமாக வுடையரான பெரியாழ்வாரு டைய திருவடிகளைவிட்டு. நீங்காத திருவுள்ளத்தை யுடையரான எம்பெருமானருடைய நிரவதிககுணங்களைத் தங்களுக்கபாஶ்ரயமா கப்பற்றியிராத மநுஷ்யரைச்சேரேன்; இந்நினைவு பிறந்தபின்பு எனக்கு என்ன குறையுண்டு?

பிறங்குதல் - மிகுதி; ப்ரகாசமுமாம். சோராதகாதலென்றது - அஸங்குசிதமான காதலென்னவுமாம்; அப்போதைக்கு சோர்தல் - வாடுதல்; அதாவது ஸங்கோசம்; சேராமை-அஸங்குசிதமாயிருக் கை. இத்தால் பரிபூர்ண பக்தியென்றபடி. (கரு)

தாழ்வொன்றில்லா மறைதாழ்ந்து, தலமுழுதுங்கலியே
யாள்கின்றநாள் வந்தளித்தவன் காண்மின், அரங்கர்மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்தவள் தொல்லருளால்
வாழ்கின்றவள்ளல், இராமாநுசனென்னும் மாமுனியே.

பதினாறும்பாட்டு. இப்படி ஸ்வலாபாநுஸந்தாநத்தாலே ஹ்ரு ஷ்டரானவர், எல்லாருந் தம்மைப்போலே தத்விஷய ப்ரவணராகை க்கு உறுப்பாக, பகவத்வல்லபையான ஆண்டாளுடைய ப்ரஸாத பாத்ரமான எம்பெருமானர் லோகத்துக்குச் செய்த உபகாரத்தை யருளிச்செய்கிறார்.

பெரிய பெருமாளுடைய திருமுடியைச் சூழாநின்றுள்ள திரு மாலையைத் தன்னுடைய திருக்குழலிலேசூடி வாஸிதமாக்கிக் கொடு த்த வைபவத்தையுடையளான ஆண்டாளுடைய ஸ்வாபாவிகமான க்ருபையே விளைநீராக வாழாநிற்பாராய் பரமோதாரராய் முனிஶ் ரேஷ்ட்டரான எம்பெருமானர், நித்யத்வாபௌருஷேயத்வ யுக்த மாய் ப்ரத்யக்ஷாதி ப்ரமாண விலக்ஷணமாய் யதாபூதவாதியாயிருக் கையாலே ஸ்வப்ராமாண்யத்தில் ஒருகுறைவற்றிருக்கிற வேதமா

(க) திருப்பல்லாண்டு - க.

னது பாஹ்யகுத்ருஷ்டிகளாலே அபிபூதமாய்க்கொண்டு இழிவுபட்டு தீபஸங்கோசத்தில் திமிரவ்யாப்திபோலே பூமியெங்கும் கலியுகமானது தனிக்கோல் செலுத்துகிறகாலத்திலே அபேக்ஷாநிரபேக்ஷமாகவந்து அந்தவேதத்தை ‡உத்தரிப்பித்து லோகத்தை ரக்ஷித்தருளினவர்காணுங்கோள்; ஆதலால், நீங்களும் என்னைப்போலே அவரையல்லதறியோமென்று இருக்கையன்றோ அடுப்பதென்று கருத்து. (கசு)

முனியார்துயரங்கள் முந்திலும், இன்பங்கள் மொய்த்திடினும்
கனியார் மனம் கண்ணமங்கைநின்றானைக், கலைபரவும்
தனியானையைத் தண்டமிழ்செய்த நீலன்றனக்குலகி
லினியானை, எங்களிராமாநுசனை வந்தெய்தினரே.

பதினேழாம்பாட்டு. இப்படி எம்பெருமானார் செய்த உபகாரத்தைக்கேட்டு தத்ஸமாஶ்ரயணருசி பிறந்தவர்கள், இவ்விஷயத்தையாஶ்ரயித்தாலும் ஸுகதுःக நிபந்தநமான கலக்கம்வரில் செய்வதென்னென்ன; திருமங்கையாழ்வார்பக்கல் ஸ்நேஹயுக்தராய் எங்கள் நாதராயிருக்கிற எம்பெருமானாரை ஆஶ்ரயித்தவர்கள் அவை மேலிட்டாலும் கலங்காரென்கிறார்.

ஸகலசாஸ்த்ரங்களாலும் ஸ்துதிக்கப்படுவானாய் அத்விதீயமான மத்தகஜம்போலே அத்தால்வந்த செருக்கையுடையனாய்க்கொண்டு திருக்கண்ணமங்கையிலே நின்றருளினவனை (க)"நின்றனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின்பொருள்" என்னும்படி ப்ரதிபாத்யார்த்தகௌரவத்தாலே ஸாம்ஸாரிக ஸகலதாபஹரமான தமிழைச் செய்தருளின திருமங்கையாழ்வாருக்கு லோகத்திலே ஸ்நேஹியாயிருப்பாராய் எங்களுக்கு நாதரான எம்பெருமானாரைவந்து ப்ராபித்தவர்கள், துःகங்களானவை அஹமஹமிகயாவந்தாலும் இது வந்ததே என்று வெறார்கள். ஸுகங்களானவை ஏகோத்யோகேநவந்து திரண்டாலும் பக்வபலம்போலே மநஸ்ஸு §இளையார்கள். ஆனபின்பு, நீங்களும் இவற்றால்வரும் ஹ்ருதயகாலுஷ்யத்தை நினைத்து அஞ்சவேண்டாவென்று கருத்து.

முனிவு - வெறுப்பு. மொய்த்தல் - திரளுதல். கஎ

எய்தற்கரியமறைகளை, ஆயிரமின்றமிழால்
செய்தற்குலகில் வரும் சடகோபனைச், சிந்தையுள்ளே

‡ (பா) உல்பணிப்பித்து. (க) திருமொழி. § (பா) இளகார்கள்.

பெய்தற்கிசையும் பெரியவர் சீரை யுயிர்களெல்லா
முய்தற்குதவும், இராமாநுச னெம்முறு துணையே.

பதினெட்டாம்பாட்டு. நம்மாழ்வாரைத் திருவுள்ளத்திலேவைக்கைக்கநுரூபவைபவரான ஸ்ரீமதுரகவியாழ்வார் குணங்களை ஸகலாத்மாக்களும் உஜ்ஜீவிக்கைக்காக உபகரிக்கும் எம்பெருமானார் எனக்கு ஆனதுணையென்கிறார்.

துஷ்ப்ராபங்களான வேதங்களை, ப்ரணவம்போலே சுருங்கியிருத்தல் வேதம்போலே பரந்திருத்தல் செய்கையன்றிக்கே ஆயிரம் பாட்டாகவும், அதுதான் ஸரஸமாகவும், ஸ்த்ரீபாலர்களுக்கும் கற்கலாம்படியான பாஷையிலேசெய்தருளுகைக்கு லோகத்திலே வந்தவதரித்தருளினவராய் பாஹ்யகுத்ருஷ்டிகளாகிற சடர்க்கு ப்ரதிபடராயிருக்கையாலே சடகோபரென்னும் திருநாமத்தையுடையவரான ஆழ்வாரைத் தம்திருவுள்ளத்திலே வைக்கைக்குத் தகுதியாயிருந்துள்ள ப்ரபாவத்தையுடையரான ஸ்ரீமதுரகவிகளுடைய ஜ்ஞாநாதி குணங்களை ஸகலாத்மாக்களுடையவும் உஜ்ஜீவநார்த்தமாக உபகரித்தருளாநிற்கும் எம்பெருமானார் எனக்குச் சீரியதுணை.

அதவா, சடகோபனைச் சிந்தையுள்ளே பெய்தற்கிசையும் பெரியவர் என்று - ஆழ்வாரையல்லதறியோம் என்றிருக்குமவரெல்லாரையும் சொல்லவுமாம். கஅ

உறுபெருஞ் செல்வமும் தந்தையும்தாயு முயர் குருவும்,
வெறிதரு பூமகள்நாதனும், மாறன் விளங்கியசீர்
நெறிதருஞ் செந்தமிழாரணமே யென்றிந் நீணிலத்தோ
ரறிதரநின்ற, இராமாநுசனெனக் காரமுதே.

பத்தொன்பதாம்பாட்டு. ஐஶ்வர்யாதிபரதேவதாபர்யந்தமான அபேக்ஷிதவஸ்துக்களெல்லாம் திருவாய்மொழியே என்று ஜகத்ப்ரஸித்தமாகநின்ற எம்பெருமானார் எனக்கு நிரதிசயபோக்யரென்கிறார்.

ஸ்வஸம்பந்தத்தையுடையவர்களுக்கு இன்னாரென்னும் மதிப்பைக்கொடுக்குமதாய் ஹிதபரமுமாய் ப்ரியகரமுமாய் அஜ்ஞாதஜ்ஞாபகமுமாய் ப்ராப்யப்ராபகங்களுமாயிருக்கையாலே சீரியதாய் நிரவதிகமான ஸம்பத்தும் பிதாவும் மாதாவும் ஸதாசார்யனும் பரிமளிதமானபுஷ்பத்தைப்§பிறப்பிடமாகவுடைய பெரியபிராட்டியாருக்கு வல்லபனான ஸர்வேஶ்வரனும்,ஆழ்வார் பகவத் ப்ரஸாதத்தாலே

§ (பா) இருப்பிடமாக.

தமக்குப்ரகாசித்த பரபக்த்யாதி ஸ்வபாவங்களினுடைய அடைவி லேஉபகரித்தருளின த்ராவிடவேதமான திருவாய்மொழியே என்று இம்மஹாப்ருதிவியிலுள்ளாரறியும்படிநின்ற எம்பெருமானார் என க்கு நிரதிசயபோக்யர்.

அதவா, (விளங்கியசீர் நெறிதரும்) என்றது - (௧) "சீர்த்தொ டையாயிரம்" என்னும்படி தமக்கு ப்ரகாசித்த பகவத்குணங்களை யடைவே உபகரித்தருளினவென்னவுமாம். (௧௯)

ஆரப்பொழில் தென் குருகைப்பிரான், அமுதத்திருவா
யீரத்தமிழினிசை யுணர்ந்தோர்கட்கு, இனியவர்தம்
சீரைப்பயின்றுய்யும் சீலங்கொள் நாதமுனியை நெஞ்சால்
வாரிப்பருகும், இராமாநுசனென்றன் மாநிதியே.

இருபதாம்பாட்டு. நாதமுனிகளைத் தம் திருவுள்ளத்திலே அபி நிவேசித்தநுபவிக்குமெம்பெருமானார் எனக்குப்பரமதநமென்கிறார்.

சந்தநச்சோலைகளை யுடைத்தாய் தர்சநீயமான திருநகரிக்கு நாதபூதரான ஆழ்வாருடைய பரமபோக்யமான திருப்பவளத்தில் பிறந்த ஈரப்பாட்டை யுடைத்தான திருவாய்மொழியின் இசையை அறிந்தவர்களுக்கு ஸ்நிக்த்தராயிருக்கு மவர்களுடைய குணங்களி லே செறிந்து தன் ஸத்தை பெறுகிற்கும் ஸ்வபாவத்தை யுடையரான நாதமுனிகளைப் பெருவிடாயர் மடுவிலேபுகுந்து வாரிப்பருகுமா போலே தம் திருவுள்ளத்தாலே அபிநிவிஷ்டராய்க்கொண்டு அநுப விக்கும் எம்பெருமானார் எனக்கு அக்ஷயமானநிதி.

ஆரம் - சந்தநம். (௨௦)

நிதியைப்பொழியும் முகிலென்ன, நீசர்தம்வாசல்பற்றித்
துதிகற்றுலகில்துவள்கின்றிலேன், இனித்தூய்நெறிசேர்
எதிகட்கிறைவன் யமுனைத்துறைவ னிணையடியாம்
கதிபெற்றுடைய, இராமாநுச னென்னைக் காத்தனனே.

இருபத்தோராம்பாட்டு. ஆளவந்தாருடைய திருவடிகளாகிற ப்ராப்யத்தைப் பெற்றுடைய எம்பெருமானார் என்னை ரக்ஷித்தரு ளினார்; ஆகையால் க்ஷுத்ரருடைய வாசல்களிலேநின்று அவர்கள் ஔதார்யாதிகளைச் சொல்லி ஸ்துதியேனென்கிறார்.

பரிசுத்தாநுஷ்டாநயுக்தரான யதிகளுக்கு நாதரான ஆளவந் தாருடைய பரஸ்பர ஸத்ருசமான திருவடிகளாகிற ப்ராப்யத்தைப்

(௧) திருவாய் - ௧ - ௨ - ௧௧.

பெற்றுடையரா யிருக்கும் எம்பெருமானார் என்னை ரக்ஷித்தருளினார்; ஆனபின்பு, நிதியைவர்ஷியாநிற்கும் மேகமென்று அவர்களுடைய ஔதார்ய கதநத்துக்குறுப்பான ஸ்தோத்ரங்களைக்கற்று லோகத்தில் அஹங்காராதி தூஷிதரான தண்ணியர்களுடைய வாசலைப் பற்றிநின்று என்னுடைய ரக்ஷணார்த்தமாக அவர்கள் அவஸரம் பார்த்துத் துவளக்கடவனல்லேன்.

(தூய்நெறிசேர் எதிகட்கிறைவன்) என்கிறவிது ஆளவந்தாருக்கு விசேஷணமாகவுமாம். நெறி - ஒழுக்கம். கதி-கதி, அதாவது-ப்ராப்யம். உக

கார்த்திகையானும் கரிமுகத்தானும், கனலும்முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும்முதுகிட்டு, மூவுலகும்
பூத்தவனேயென்று போற்றிட வாணன் பிழைபொறுத்த
தீர்த்தனையேத்தும், இராமாநுசனென்றன் சேமவைப்பே.

இருபத்திரண்டாம்பாட்டு. முன்பு தன்னோடெதிரிட்ட தேவஜாதிபின்பு தன் வைபவத்தை யறிந்து ஸ்தோத்ரம் பண்ண, அவர்களுக்காக வாணன் அபராதத்தைப் பொறுத்த ஸர்வேஸ்வரனை ஏத்தும் எம்பெருமானார் எனக்கு ஆபத்தநமென்கிறார்.

க்ருத்திகா நக்ஷத்ரஸம்பந்தத்தாலே கார்த்திகேயனென்று சொல்லப்படுகிற ஸுப்ரஹ்மண்யனும் கஜமுகனான கணபதியும் அவர்களுக்குஸஹாயமாய்வந்தஅக்நியும் த்ரிணேத்ரயுக்தமான வடிவையுடைய ருத்ரனும் துர்க்கையும் ஜ்வரமும் (க) "முண்ட நீறன்மக்கள் வெப்புமோடியங்கி யோடிட" என்கிறபடியேபுறங்காட்டியோடி, (உ) "కృష్ణకృష్ణమహాబాహో జానేత్వాం పురుషోత్తమమ్. க்ருஷ்ணக்ருஷ்ண § மஹாபாஹோஜாநேத்வாம் புருஷோத்தமம்" என்கிறபடியே, ஸர்வேஶ்வரனென்றறிந்தபின்பு, க்ருதகம் அக்ருதகம் க்ருதகாக்ருதகம் என்று மூன்றுவகைப்பட்டிருக்கிற இந்த அண்டத்தை உன்னுடைய திருநாபிகமலத்திலே ஜநிப்பித்தவனே என்று அவனுடைய ஜகத்காரணத்வ கதநத்தாலே அவனுக்கும் தங்களுக்குமுண்டான பித்ருபுத்ர ஸம்பந்தாதிகளை ஸூசிப்பித்துநின்று தங்களை ஆஶ்ரயித்தவாணனுடைய ரக்ஷணார்த்தமாக ஸ்தோத்ரம்பண்ண, அவர்களுக்

(க) திருச்சந்தவி-எக. (உ) விஷ்ணுபு - ரு ரு-ஙங-சக.

§ "ஜகந்நாத" என்று முத்ரிதவிஷ்ணு புராணத்தில்பாடம்.

காக பாஞ்ஜஸுரனுடைய அபராதத்தை க்ஷமித்த குணசுத்தியையு டைய ஸர்வேஶ்வரனை அந்த குணவித்தராய்க் கொண்டு ஏத்துகிற எம்பெருமானார் எனக்கு ஆபத்துத்துணையாக சேமித்துவைத்த தநம்.

போற்றுதல் - புகழ்தல். வைப்பு - நிக்ஷேபம். உ௨

வைப்பாயவான்பொருளென்று, நல்லன்பர்மனத்தகத்தே
எப்போதும் வைக்குமிராமாநுசனை, இருநிலத்தில்
ஒப்பாரிலாத வுறுவினையேன் வஞ்ச நெஞ்சில்வைத்து
முப்போதும் வாழ்த்துவன்,என்னாமிதுவவன் மொய்புகழ்க்கே.

இருபத்துமூன்றாம்பாட்டு. நிர்த்தோஷரான ப்ரேமயுக்தர் பரம தநமாகத்தங்கள்நெஞ்சிலேவைத்துக்கொண்டிருக்கும் விஷயத்தைப் பாபிஷ்டனான நான் ஹேயமான மநஸ்ஸிலே வைத்து ஏத்தாநின் றேன்; இது அவ்விஷயத்தினுடைய குணத்துக்கென்னாமென்கிறார்.

(க) "வைத்தமாநிதி" என்னுமாபோலே ஆபத்ரக்ஷகமாக வை க்கப்பட்ட அக்ஷயமான தநமென்று நிர்த்தோஷராய் ப்ரேமயுக்தரா யிருக்குமவர்கள் சிரிய நிதிகளைச் செப்புக்குள்ளேவைப்பாரைப்போ லேமநஸ்ஸுக்குள்ளே திவாராத்ரவிபாகமற ஸர்வகாலத்திலும் வைக் கும்விஷயமான எம்பெருமானாரை, மஹாப்ருதிவியில் பாபம்பண்ணி னவர்களில் இவனைப்போலொருபாபிகள் இல்லையென்னும்படி பாபி ஷ்டனாயிருக்கிற நான் நிஸ்நேஹனாயிருக்க ஸ்நேஹிகளைப்போலே பாவித்து, (உ) "உன்னையும் வஞ்சிக்கும் கள்ளமனம்" என்கிறபடி யே ஸர்வஜ்ஞனையும் மருட்டவற்றான க்ருத்ரிமயுக்தமான மநஸ்ஸிலே வைத்து த்ரிஸந்த்யமும் ஏத்தாநின்றேன். இது அவருடைய ஶ்லா க்யமான புகழுக்கு என்னாய்விளையுமோ?

வான் - பெருமை. "நல்லன்பர்" என்றவிடத்தில் நன்மை அன்புக்கு விசேஷணமாய் அநந்ய ப்ரயோஜநதயா விலக்ஷணபக்தி யென்னவுமாம். மொய் - அழகு.

மொய்த்தவெந் தீவினையால்பல்லுடல்தொறும்மூத்து,அதனால்
எய்த்தொழிந்தேன் முனநாள்களெல்லாம், இன்று கண்டுயர்ந்
[தேன்

(க) திருவாய் - ௯ - எ - கக. (உ) திருவாய் ௫ - க - ரு.

பொய்த்தவம் போற்றும் புலைச்சமயங்கள் நிலத்தவியக் [யே.
கைத்த மெய்ஞ்ஞானத்து, இராமாநுசனென்னும் கார்தன்னை

இருபத்துநாலாம்பாட்டு. "ஒப்பாரிலாத உறுவினையேன்" என்றீர், இப்படியிருக்கிற உமக்கு இவ்விஷயத்தை முப்போதும் வாழ்த்துகை கூடினபடியென்னென்ன; தாம் முன்புநின்ற நிலையையும் இன்று தமக்கு இவ்வுத்கர்ஷம் வந்தவழியையும் சொல்லுகிறார்.

தேன்கூட்டை ஈமொய்த்தாற்போலே ஆத்மாவை மொய்த்துக்கொண்டிருப்பதாய், அநுபவ விநாஶ்யமாதல், ப்ராயஶ்சித்த விநாஶ்யமாதல் செய்யாத அதிக்ரூரமான கர்மத்தாலே அநேக சரீரங்கள்தோறும் ஜராவதியாகவஸித்து அத்தாலே அவஸந்நனாய்விட்டேன் அநாதியானகாலமெல்லாம்; அவைதிகங்களாகையாலே அயதாபூதங்களாயிருக்கிற விஷயவிரக்தி பரஹிம்ஸாநிவ்ருத்தி ஸத்குரு ஸேவாதிகளான தபஸ்ஸுக்களை நோக்கிக்கொண்டுபோரும் நீசஸமயங்கள் பூமியிலே விளக்குப் பிணம்போலே நசிக்கும்படியாக நிரஸித்த யதாஜ்ஞாநயுக்தரான எம்பெருமானாராகிற பரமோதாரரைத் தம்முடைய ஔதார்யத்தாலேகாட்டக்கண்டு இன்று உத்க்ருஷ்டனானேன்.

"மொய்த்தவெம் தீவினையார் பல்லுடல்" என்று பாடமானபோது-திரண்ட க்ரூரகர்மங்களாலே நிறைந்துள்ள அநேக தேஹங்களென்கை. மொய்த்தல்-திரளுதல். கைத்தல்-கடிதல். கார்தன்னையென்றது - முற்றுவமை. உச

காரேய் கருணையிராமாநுச, இக்கடலிடத்தில்
ஆரேயறிபவர் நின்னருளின்தன்மை, அல்லலுக்கு
நேரே யுறைவிடம் நான்வந்து நீயென்னை யுய்த்தபின்னுன்
சீரேயுயிர்க் குயிராய், அடியேற் கின்றுதித்திக்குமே.

இருபத்தஞ்சாம்பாட்டு. எம்பெருமானார் தம்பக்கல் பண்ணின உபகாரத்தை அநுஸந்தித்து அத்தாலே அவர் திருமுகத்தைப்பார்த்து, தேவரீருடைய க்ருபாஸ்வபாவம் இந்த லோகத்தில் ஆர்தானறிவாரென்கிறார்.

ஜலஸ்தலவிபாகம் பாராதே வர்ஷிக்கும் மேகம்போலே ஸர்வ விஷயமாக உபகரிக்கும் க்ருபையையுடைய §(உடைய)வரே! து:கத்துக்கு நேரே ஆவாஸபூமியாயிருப்பானொருவன் நான்; இப்படியிருக்

§ குண்டலிதம் க்வாசித்கம்.

கிற வென்னை தேவரீர் தாமே வந்து ப்ராபித்தருளினபின்பு தேவரீருடைய கல்யாணகுணங்களே ஆத்மாவுக்கு தாரகமாய் அடியேனுக்கு இன்று ரஸியாநின்றது; தேவரீருடைய க்ருபையின் ஸ்வபாவத்தை இக்கடல்சூழ்ந்த பூமியில் ஆர்தான் அறிவார்?

காரேய் கருணையென்றது-காரேய்ந்த கருணையென்றபடி. ஏய்கை - ஒப்பு. உரு

திக்குற்ற கீர்த்தி யிராமாநுசனை, என்செய்வினையாம்
மெய்க்குற்றம் நீக்கி விளங்கிய மேகத்தை, மேவும்நல்லோர்
எக்குற்றவாள ரெது பிறப்பேதியல்வாக நின்றோர்
அக்குற்ற மப்பிறப்பு,அவ்வியல்வே நம்மையாட்கொள்ளுமே.

இருபத்தாறும்பாட்டு. எம்பெருமானார் விஷயீகரித்தருளினபின்பு அவருடைய குணங்களே தமக்குதாரகபோஷக போக்யங்களாயிற்றென்றார்கீழ்; அவ்வளவன்றிக்கே அவர் திருவடிகளுக்கு அநந்யார்ஹராயிருக்கும் மஹாப்ரபாவரான ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய பூர்வாவஸ்த்தைகளில் ஓரொன்றே யென்னை எழுதிக்கொள்ளாநின்றதென்கிறார்.

(க) "த்விஷந்தஃ பாபக்ருத்யாம்-த்விஷந்தஃ பாபக்ருத்யாம்" என்கிறபடிபிறரதாய் அசல்பிளந்து ஏறிடவந்ததன்றிக்கே என்னாலே செய்யப்பட்ட கர்மமாகிற நிலைநின்ற தோஷத்தைப்போக்கி, "இவன் விரோதியைப் போக்கப்பெற்றோம்" என்னும் ப்ரீதியாலே தாம் உஜ்வலரானபரமோதாரராய், திக்குக்கள்தோறும் வ்யாப்தையான குணவத்தாப்ரதையையுடையராயிருக்கிறஎம்பெருமானாரை,(உ)"ராமாநுஜ பதச்சாயா-ராமாநுஜபதச்சாயா"என்கிறபடியே பாதச்சாயாதிகள்போலே அப்ருதக்ஸித்தமாம்படி பொருந்தியிருக்கும் விலக்ஷணரானவர்கள் யாதொரு குற்றத்தையுடையராகவும் யாதொரு வ்ருத்தத்தையுடையராகவும்முன்புநின்றார்கள், அந்தக்குற்றமும்அந்தப் பிறப்பும் அந்த இயல்வுமே (ங) "சிறுமாமனிசர்" என்னலாம்படி மஹாப்ரபாவரானவிவர்கள் நிக்ருஷ்ட ஜந்மாதிகளைப் பரிக்ரஹித்து, தாத்ருசரான நம்போல்வாரும் இவ்விஷயஸமாஶ்ரயணார்ஹர் என்னுமத்தை தர்சிப்பிக்கைக்காகவென்று நினைத்திருக்கிற நம்மைம

(க) (உ) ஸ்ரீரங்கரா - ஸ்த - க-உ.
(ங) திருவாய் - அ - கo - ங.

அநுஸந்திக்குந்தோறு மெழுதிக்கொள்ளாநின்றது; இவ்வளவான ப்ரதிபத்திபிறந்தாலிறே ஸ்ரீவைஷ்ணவர்கள் பக்கல் ஸஜாதீய ப்ரதிபத்தி குலைந்ததாவது.

அதவா-அவர்கள் விஷயத்தில் அதிமாத்ரப்ரவணரான நம்மை யென்னவுமாம். அப்படியிருக்குமிறே ப்ராவண்யாதிசயம். அன்றிக்கே, "எக்குற்றவாளர் எதுபிறப்பேதியல்வாகநின்றோர்" என்றது, "அஹங்கார ஹேதுவான ஜந்மவ்ருத்தஜ்ஞாநங்கள் ஹேயம்" என்கிற ஜ்ஞாநம்பிறந்தபின்பு அந்த ஜந்மவ்ருத்தஜ்ஞாநங்களாலுண்டான ஸ்வநிகர்ஷத்தை யநுஸந்தித்து நின்றநிலையாய் அவ்வவ ஸ்வபாவங்களை என்னை எழுதிக்கொள்ளாநின்றதென்கிறார் என்னவுமாம். மெய்யாவது-நிலைநிற்குமது; நிலைநிற்கையாவது - அநுபவவிநாஶ்யமாதல், ப்ராயஶ்சித்தவிநாஶ்ய மாதலன்றிக்கேயிருக்கை. என் செய்வினையாம்மெய்க் குற்றம்நீக்கியென்றது - மத்க்ருதகர்மமடியாக உண்டான தேஹஸம்பந்த ப்ரயுக்தாஹங்காராதிதோஷங்களைப் போக்கியென்னவுமாம். அப்போதைக்கு வினையாமென்றது - வினையாலேயுண்டான வென்றபடி. ஜந்மவ்ருத்தங்களோடே ஸஹபடிக்கையாலே "எக்குற்றவாளர்" என்கிறவிடத்தில், குற்றமென்றது - ஜ்ஞாநத்தில் குறையாகக்கடவது. இயல்வு - வ்ருத்தம். உ௬

கொள்ளக் குறைவற்றிலங்கிக், கொழுந்துவிட் டோங்கியவுன்
வள்ளல்தனத்தினால் வல்வினையேன் மனம்நீபுகுந்தாய்,
வெள்ளைச் சுடர்விடுமுன் பெருமேன்மைக் கிழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கும், இராமாநுச வென்தனிநெஞ்சமே.

இருபத்தேழாம்பாட்டு. இப்படி இவர் தமக்கு அநந்யார்ஹராவிலே ஊன்றினவாறே, எம்பெருமானார் இவர் நெஞ்சுக்குத் தம்மை ஸர்வகாலமும் விஷயமாக்கிக்கொடுக்க, பாபிஷ்டனான வென்னெஞ்சிலே புகுந்தருளினவிது தேவரீர் ப்ரபாவத்துக்கு அவத்யமன்றோவென்று என்னெஞ்சு தளராநின்றதென்கிறார்.

§ (உடையவரே!) வேண்டுவார்க்கு வேண்டுவதெல்லாம் கொள்ளலாம்படி ஒருகுறைவு அற்றிருப்பதாய் கொடுக்கப்பெற்றால் உஜ்வலமாய் மேன்மேலும் இளகிப்பதித்து வளர்ந்திருப்பதான தேவரீருடைய ஔதார்யத்தாலே மஹாபாபியான வென்னுடைய மநஸ்ஸிலே தேவரீருடைய பெருமைபாராதே வந்துபுகுந்தருளிற்று; வஸிஷ்டன் சண்டாளஶ்ரேணியிலே புகுந்தாற்போலே இப்படி

§ குண்டலிதம் க்வாஸிதம்,

புகுந்தவிது பரிசுத்தமாக விளங்காநின்றுள்ள தேவரீருடைய நிரவதிக ப்ரபாவத்துக்கு அவத்யமென்று ஒரு துணையின்றிக்கே தனிப்பட்டிருக்கிற என்னுடைய நெஞ்சானது தளர்ந்து ஈடுபடாநின்றது.

தள்ளுதல் - தளர்தல், இரக்கம் - ஈடுபாடு.

நெஞ்சில் கறைகொண்ட கஞ்சனைக்காய்ந்த நிமலன், நங்கள்
பஞ்சித்திருவடிப் பின்னைதன் காதலன், பாதம்நண்ணு
வஞ்சர்க்கரிய விராமாநுசன் புகழன்றி யென்வாய்
கொஞ்சிப்பரவ கில்லாது, என்ன வாழ்வின்று கூடியதே.

இருபத்தெட்டாம்பாட்டு. (க)"మనఃపూర్వో వాగుత్తరః-மந꞉பூர்வோவாகுத்தர꞉" என்னும் மநஸ்ஸுக்கநந்தரமான வாக்குக்கு அவர்விஷயத்திலுண்டான ப்ராவண்யத்தைக் கண்டு ப்ரீதராகிறார்.

(உ)"தீயபுந்திக்கஞ்சனுன்மேல் சினமுடையன்"என்கிறபடியே ஹ்ருதயத்திலே சீற்றத்தையுடையனான கம்ஸனைச் சீறின ஹேயப்ரத்யநீகனாய் ஆஶ்ரிதஜநாபிமாநியாய் (ங) "பஞ்சியமெல்லடிப்பின்னை" என்கிறபடியே பஞ்சுபோலே ம்ருதுவான திருவடிகளையுடையளான நப்பின்னைப் பிராட்டிக்கு ஸ்நிக்த்தனானவனுடைய திருவடிகளை யாஶ்ரயியாத ஆத்மாபஹாரிகளுக்குதுர்லபரான எம்பெருமானாருடைய குணங்களையொழிய என்னுடைய வாக்கானது முக்த்தஜல்பிதமாகக் கொண்டு அடைவுகெடவேத்தாது; இன்று எனக்குக் கூடினதொரு வாழ்வு இருந்தபடியென்.!

நிமலன் என்று - (ச) "దేవానాం దానవానాంచ సామాన్యమధిదైవతమ్-தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்" என்கிற பொதுவான ஸம்பந்தமும் கிடக்கச்செய்தே ஆஶ்ரிதவிரோதியென்னுமாகாரத்தாலே அவனை நிரஸிக்கையால் வந்த நைர்மல்யத்தைச் சொல்லுகிறது. கறை - கறுப்பாய், சீற்றத்தைச் சொல்லுகிறது. அன்றிக்கே, கறையென்று - தோஷமாய், மநஸ்ஸிலே தோஷத்தையுடையனானவென்னவுமாம். பஞ்சி - பஞ்சு, கொஞ்சுதல் - அபூர்ணோக்தியாகச் சொல்லுதல். உஅ

கூட்டும்விதியின்று கூடுங்கொலோ, தென்குருகைப்பிரான்
பாட்டென்னும் வேதப்பசுந்தமிழ்தன்னைத், தன்பத்தியென்னும்

(க) யஜு - கா-எ-ரு-ந. (உ) பெரியா-திரு-உ-உ-ரு.
(ங) திருமொழி - ந - கூ-ச. (ச) ஜி - ஸ்தோ - உ.

வீட்டின்கண்வைத்த விராமாநுசன் புகழ்மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள்தன்னை, என்னாட்டங்கள் கண்டின்ப மெய்திடவே.

இருபத்தொன்பதாம்பாட்டு. எம்பெருமானார் திவ்யகுணங்களை உள்ளபடி அறிந்திருக்குமவர்கள் திரள்களை என்கண்கள் கண்டுகளிக்கும்படி கூட்டக்கடவ ஸுக்ருதம் இன்று கூடுமோவென்கிறார்.

தர்சநீயமான திருநகரிக்கு நாதரான ஆழ்வாருடைய பாட்டென்றுகொண்டு ப்ரஸித்தமாய் வேதரூபமாய் செந்தமிழாயிருக்கிற திருவாய்மொழியைத் தம்முடையபக்தியாகிற வாஸஸ்தாநத்திலே வைத்த எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களை யதாவாக அறிந்திருக்குமவர்களுடைய ஸமூஹங்கள் தன்னைஎன்னுடைய த்ருஷ்டிகளானவை கண்டு ஸுகத்தை ப்ராபிக்கும்படியாக என்றுகூடியுமிப்பேற்றை நமக்குச் சேர்விப்பதான அவருடையக்ருபை இன்று கூடவற்றோ?

விதி-ஸுக்ருதம். இவர்தமக்குப் பேற்றுக்கடியானஸுக்ருதமாகநினைத்திருப்பது அத்தலையில் க்ருபையையிறே. இராமாநுசன் புகழ்மெய்யுணர்ந்தோரீட்டங்கள் தன்னைத் தத்காலத்திலே காணுகிற்கச்செய்தே இங்ஙன்சொல்லுவானென்னென்னில்;காண்கிறதிலன்று இவர்க்கு இப்போது அபேக்ஷை; கண்டால் கண்கள் அவிக்ருதமாயிருக்கையன்றிக்கே இன்பமெய்துகை; அதுக்கடியான ப்ரேமம் எம்பெருமானாருளாலேவிளையவேணுமிறே.அத்தாலே சொல்லுகிறார். (௧) "உன்தொண்டர்கட்கே அன்புற்றிருக்கும்படி யென்னையாக்கியங்காட்படுத்து" என்றிறேமேலும் இவர் ப்ரார்த்தனை. ஈட்டம் - திரள். நாட்டம்-த்ருஷ்டி. ௨௯

இன்பந்தரு பெருவீடுவந்தெய்திலென், எண்ணிறந்த
துன்பந்தருநிரயம் பலசூழிலென், தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட் கிறையவன்மாயனென மொழிந்த
அன்பனனகன், இராமாநுசனென்னையாண்டனனே.

முப்பதாம்பாட்டு. இப்படி இவர் ப்ரார்த்தித்தவித்தைக் கேட்டவர்கள், இவ்வளவேயோ அபேக்ஷை உமக்கு, இனி பரமபத ப்ராப்திமுதலானவையும் அபேக்ஷிதங்களன்றோவென்ன; எம்பெருமானார் என்னை அடிமைகொண்டருளப்பெற்ற பின்பு ஸுகாவஹமான

(௧) ௪௦௭.

மோக்ஷம்வந்து ஸித்திக்கிலென்? து:காவஹமான நரகங்கள்வந்து சூழிலென்? என்கிறார்.

ப்ரவாஹரூபேண பழையதாய்ப் போருகிற ஜகத்திலே நித்யராய் அஸங்க்யாதரான ஆத்மாக்களுக்கு சேஷியானவன்-ஸ்வரூபரூப குணங்களால் ஆஸ்சர்யபூதனான ஸர்வேஸ்வரனென்று ஸ்ரீபாஷ்யாதிமுகேந அருளிச்செய்த ஸ்நேஹந்தையுடையராய், இப்படி ஸ்நேஹரூபமாக உபதேசிக்குமதொழிய க்யாதிலாபாதிகளில் விருப்பத்துக்கடியான பாபஸம்பந்தமின்றிக்கே யிருக்கிற எம்பெருமானார் என்னை அடிமைகொண்டருளினார்; ஆனபின்பு, ஆநந்தாவஹமாய் ஆத்மாநுபவமாத்ரமன்றிக்கே பரமபுருஷார்த்த லக்ஷணமான மோக்ஷமானது வந்து ஸித்திக்கிலென்? அஸங்க்யேயது:காவஹமான நரகங்கள் பலவும்வந்து தப்பவொண்ணாதபடி வளைத்துக்கொள்ளிலென்? இவற்றை யொன்றாக நினைத்திரேன் என்று கருத்து. ௩௦

ஆண்டுகள் நாள் திங்களாய், நிகழ்காலமெல்லாம்மனமே [யே
ஈண்டுபல்யோனிகள் தோறுழல்வோம், இன்றோரெண்ணின்றி
காண்டகு தோளண்ணல் தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப்
பூண்டவன்பாளன், இராமாநுசனைப் பொருந்தினமே.

முப்பத்தோராம்பாட்டு. அநாதிகாலம் அஸங்க்யாதமான யோநிகள்தோறும் தட்டித்திரிந்த நாம் இன்று நிர்ஹேதுகமாக எம்பெருமானாரைச் சேரப்பெற்றோமென்று ப்ரீதிப்ரகர்ஷத்தாலே திருவுள்ளத்தைக்குறித்தருளிச்செய்கிறார்.

பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாயிருக்கையாலே இரண்டு தசையிலும் கூடிநிற்கிறநெஞ்சே! திநமாய் மாஸமாய் ஸம்வத்ஸரங்களாய்க்கொண்டு வர்த்தியாநின்றுள்ள காலமெல்லாம்,தேவாதிபேதத்தாலும் அதிலவாந்தரபேதத்தாலும் பரிகணிக்கவொண்ணாதபடி திரண்டு பலவகைப்பட்ட யோநிகள்தோறும் ஒருகால் நுழைந்தவிடத்தே ஒன்பதின்கால் நுழைந்து தட்டித்திரிந்த நாம், இன்று ஒருநினைவின்றிக்கேயிருக்கச்செய்தே, காணத் தகுதியாயிருந்துள்ள திருத்தோள்களையுடையராகையாலே ரூபகுணத்தாலும் உத்தேஸ்யராய் நமக்கு வகுத்த சேஷிகளாய் தர்சநீயமான் திருவத்தியூரிலே நித்யவாஸம்பண்ணுகையாலே அவ்வூரைத் தமக்கு நிரூபகமாகவுடைய பேரருளாளப் பெருமாளுடைய பரஸ்பர ஸத்ருசமான

திருவடிகளின் கீழே பிணிப்புண்ட ஸ்நேஹத்தையுடையரான எம்பெருமானாரைச் சேர்ந்துகொண்டு நிற்கப்பெற்றோம்.

நிகழ்தல் - வர்த்தித்தல். ஈண்டுதல் - திரளுதல். யோநி - ஜாதி. ௩௧

பொருந்திய தேசும் பொறையுந் திறலும் புகழும், நல்ல
திருந்திய ஞானமும் செல்வமும் சேரும், செறுகலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்தெடுத்தளித்த
அருந்தவன், எங்களி ராமாநுசனை யடைபவர்க்கே.

முப்பத்திரண்டாம்பட்டு. "இராமாநுசனைப் பொருந்தினம்" என்று இவர் ஹ்ருஷ்டராகிற வித்தைக் கண்டவர்கள் நாங்களுமிவ் விஷயத்தை லபிக்கப்பார்க்குமளவில் எங்களுக்கு உம்மைப்போலே ஆத்மகுணங்களொன்றுமில்லையே யென்ன; எம்பெருமானாரைச் சேருமவர்களுக்கு ஆத்மகுணாதிகளெல்லாம் தன்னடையேவந்து சேருமென்கிறார்.

அபிபவியாநின்றுள்ள கலிதோஷத்தாலே துஃகப்பட்ட பூமியை இந்நிலையில்* ஆர்த்தித்வாதிநிரபேக்ஷமாகத் தம்முடைய ஔதார்யத்தாலே வந்து நிமக்நோத்தாரணம்பண்ணி ரக்ஷித்தவராய்ப் ப்ரபந்ந ஜநகூடஸ்த்தராகையாலே (க) "𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌮𑍇𑌷𑌾𑌂𑌤𑌪𑌸𑌾𑌮𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌮𑌾𑌹𑍁𑌃। தஸ்மாந்ந்யாஸ மேஷாம்தபஸாமதிரிக்தமாஹு:" என்கிறபடியே ஸர்வதபஸ்ஸுக்களிலும் மேலாய்க்கொண்டு துர்லபமாயிருக்கிற சரணாகதிரூப தபஸ்ஸையுடையராய் எங்களுக்குத் தம்மை முற்றூட்டாகத் தந்த எம்பெருமானாரைச் சேருமவர்களுக்கு ஸ்வரூபாநுரூபமான மதிப்பும் வ்யஸந ஸங்கங்களில் அநவஸாதாநுத்தர்ஷ ஹேதுவான க்ஷமாகுணமும் ஜிதேந்த்ரியத்வரூபமான பராபிபவந ஸாமர்த்யமும் குணவத்தாப்ரதையும் தத்வஹித புருஷார்த்தங்களை விஷயமாகவுடைத்தாகையாலும் அவைதன்னை யதாவஸ்த்திதமாக தர்சிக்கையாலும் விலக்ஷணமாய்க் கட்டளைப்பட்டிருந்துள்ள ஜ்ஞாநமும் தத்கார்யமான பக்திரூபஸம்பத்தும் (உ) "𑌶𑍍𑌰𑍀𑌃 𑌶𑍍𑌰𑍀𑌃-ரதிர்மதி:" இத்யாதி ஶ்லோகத்தின்படியே பிராட்டி கடாக்ஷலக்ஷ்யமாமவர்களுக்கு அவைதானே வந்து மேல்விழுமென்றாற்போலே இங்கும் இவர்கள் அபேக்ஷியாதிருக்கத் தானே வந்து சேரும்.

---

* (பா) அபேக்ஷா. (க) தைத்தி - நாரா.

(உ) ஸ்ரீகுணரத்நகோசம் - ௧௭.

பொருந்துதல் - சேருதல்; அதாவது - ஸ்வரூபாநுரூபத்வம். தேசு - மதிப்பு. ௩௨

அடையார்கமலத் தலர்மகள்கேள்வன், கையாழியென்னும்
படையோடு நாந்தகமும் படர்தண்டும், ஒண்சார்ங்க வில்லும்
புடையார் புரிசங்கமு மிந்தப் பூதலம் காப்பதற்கென்று
இடையே யிராமாநுச முநியாயின விந்நிலத்தே.

முப்பத்துமூன்றும்பாட்டு. அஸ்த்ரபூஷணாத்யாயத்தில் சொல்லுகிறபடியே மநஸ்தத்வாதிகளுக்கு அபிமாநிகளாயிருக்கிற திருவாழிமுதலான திவ்யாயுதங்களினுடைய ப்ரஸாதத்தாலே இந்த்ரியஜயாதிகள் உண்டாகவேண்டியிருக்க எம்பெருமானாரை ஆஶ்ரயிக்கவே இவையெல்லா முண்டாமென்கிறது என்கொண்டென்ன; அந்த ஶ்ரீபஞ்சாயுதங்களும் லோகரக்ஷணார்த்தமாக எம்பெருமானார் பக்கலிலே யாயின வென்கிறார். அதவா-அவையெல்லாம் லோகரக்ஷணார்த்தமாக எம்பெருமானாராய் வந்து திருவவதரித்தன வென்னவுமாம்.

இலைநெருக்கத்தையுடைத்தான தாமரையினுடைய பூவை ஜந்மபவநமாக வுடையளான பிராட்டிக்கு வல்லபனானவனுடைய திருக்கையிலே வர்த்திப்பதாய் (௧)"చలస్వరూప మత్యన్తజవేనాన్తరితానిలమ్ । చక్రస్వరూపంచ మనోధత్తే విష్ణుః కరేస్థితమ్ - சலஸ்வரூபமத்யந்தஜவேநாந்தரிதாநிலம்। சக்ரஸ்வரூபஞ்சமநோ தத்தே விஷ்ணுः கரேஸ்த்திதம்" என்கிறபடியே மநஸ்தத்வாபிமாநியாயிருக்கிற திருவாழியென்று ப்ரஸித்தமான திவ்யாயுத்த்தோடே (௨)"బిభర్తి యచ్చాసిరత్నమచ్యుతోత్యన్తనిర్మలమ్ । విద్యామయంతు యద్జ్ఞానమ్- பிபர்த்தியச்சாஸிரந்தமச்யுதோத்யந்த நிர்மலம்।வித்யாமயந்து யத்ஜ்ஞாநம்" என்கிறபடியே ஜ்ஞாநாபிமாநியான திருவாளும், (௩) "బుద్ధిరధ్యాస్తే గదారూపేణ మాధవే - புத்திரத்யாஸ்தே கதாரூபேணமாதவே" என்கிறபடியே புத்யபிமாநியாய் ரக்ஷணத்திலே பரந்திருக்கும் ஶ்ரீகதையும், (௪) "భూతాదిమిన్ద్రియాదించ ద్విధాహఙ్కారమీశ్వరః । బిభర్తి శఙ్ఖరూపేణ శార్ఙ్గరూపేణచ స్థితమ్ - பூதாதிமிந்த்ரியாதிஞ்ச

(௧) வி - பு - ௧ - ௨௨ - ௭௧. (௨) வி - பு - ௧ - ௨௨ - ௭௨.
(௩) வி - பு - ௧ - ௨௨ - ௬௯. (௪) வி - பு - ௧ - ௨௨ - ௭0.

த்விதாஹங்காரமீஸ்வர:। பிபர்த்திசங்கரூபேண சார்ங்கரூபேணசஸ்த்திதம்'' என்கிறபடியே இந்த்ரியகாரணமான ஸாத்விகாஹங்காராபிமாநியாயிருக்கிற விலக்ஷணமான ஸ்ரீசார்ங்கமென்னும் திருநாமத்தையுடைய திருவில்லும், பூதகாரணமான தாமஸாஹங்காராபிமாநியாய் மிகமுழங்குகைக்குறுப்பாம்படி புடைபெருத்து தர்சநீயமான ஸந்நிவேசத்தையுடைய ஸ்ரீபாஞ்சஜந்யமும், இந்தப்பூதலத்தை ரக்ஷிக்கைக்காக வென்று இந்தப் பூதலத்திலே எம்பெருமானார் பக்கலிலே ஆயின.

இவர்பக்கலிலேயாகையாவது - இவர் நினைவைக்கடாக்ஷித்து நின்று இவர் அதிகரித்தகார்யத்துக்கு ஸஹகரிக்கை. ''அடையார்கமலம்'' என்று தொடங்கி ''புடையார் புரிசங்கமும் இந்தப் பூதலங்காப்பதற்கு'' என்று இந்நிலத்தே - இராமாநுசமுனி இடையே ஆயின'' என்றந்வயம். மற்றைப்பக்ஷத்தில் ''அடையார்கமலம்'' என்று தொடங்கி, புடையார்புரி சங்கமும் இந்த பூமியை ரக்ஷிக்க வேணுமென்று இந்த பூமி தன்னிலே நடுவே எம்பெருமானாராய்வந்து அவதரித்தனவென்கை. இத்தால், இவருடைய விரோதிநிரஸந ஸாமர்த்யத்தைப்பற்ற ஸ்ரீபஞ்சாயுதாவேசாவதாரமென்று ப்ரபாவகதநம்பண்ணினாராயிற்று.

அடை - இலை. படை - ஆயுதம். படர்தல் - பரம்புதல். ௩௩

நிலத்தைச் செறுத்துண்ணும் நீசக்கலியை, நினைப்பரிய
பலத்தைச் செறுத்தும் பிறங்கிய தில்லை, என்மெய்வினைநோய்
புலத்தில் பொறித்தவப்புத்தகச்சும்மை பொறுக்கியபின்
நலத்தைப் பொறுத்தது, இராமாநுசன்றன் நயப்புகழே.

முப்பத்துநாலாம்பாட்டு. கலிதோஷாபிபூதமான ஜகத்தை ரக்ஷித்தமையைச் சொல்லி, இவரை யாஸ்ரயிப்பார்க்கு ஆத்மகுணாதிகள் தானே வந்து சேருமென்னுமத்தையும், இவருடைய ஆத்மகுணத்பாதகத்வ ஹேதுவான ஸஹாயபலத்தையும் அருளிச்செய்தார் கீழிரண்டுபாட்டாலே; இப்பாட்டில், இப்படி கலிதோஷத்தைப்போக்கி லோகத்தை ரக்ஷித்தவளவிலும் எம்பெருமானார் குணங்கள் ப்ரகாசித்ததில்லை; என் கர்மத்தைக்கழித்தபின்பு வைலக்ஷண்யத்தைத் தரித்ததென்கிறார்.

எம்பெருமானாருடைய ஸ்ப்ருஹணீயமான குணஜாதம், லோகத்தை அபிபவித்து ஹிம்ஸியாநின்றுள்ள ஹேயமான கலியை। மஹஸ்

ஸாலேபரிச்சேதிக்க வரிதாயிருந்துள்ள பலத்தை, தேஜஸ்ஸகாசத்தில் திமிரம்போலே அபிபூதமாம்படி பண்ணின வளவிலும் ப்ரகாசித்ததில்லை; என்னாலே உண்டாக்கப்பட்ட பாபங்களை யமலோகத்திலே எழுதிவைத்த அந்த புஸ்தகபாரத்தை (ஜ)தஹித்த பின்பு ஔஜ்வல்யரூபமான வைலக்ஷண்யத்தைத் தரித்தது.

பிறங்குதல் - ப்ரகாசித்தல். தென்புலம் - யமபுரம். சும்மை - சுமை, பொறுத்தல் - தஹித்தல். நயம் - விருப்பம்.　　　　௩௪

நயவேனொரு தெய்வம் நானிலத்தே, சிலமானிடத்தைப்
புயலே யெனக் கவி போற்றிசெய்யேன், பொன்னரங்கமென்
மயலேபெருகு மிராமாநுசன் மன்னுமாமலர்த்தா [ளில்
ளயரேன், அருவினை யென்னை யெவ்வாறின்றடர்ப்பதுவே.

முப்பத்தஞ்சாம்பாட்டு. எம்பெருமானார் உம்மளவில் செய்த விஷயீகாரத்தைப் பார்த்துக் கர்மமெல்லாம் கழிந்ததென் றீரேயாகிலும் ப்ரக்ருதியோடேயிருக்கையாலே இன்னமும் அவை வந்து ஆக்ரமிக்கிலோவென்ன; இனி அவற்றுக்குவந்து என்னை அடருகைக்கு வழியில்லையென்கிறார்.

புறம்பொரு தெய்வத்தைவிரும்பேன்; இந்தலோகத்திலே சில க்ஷுத்ரமநுஷ்யரை "புயலே" என்று அவர்களுடைய ஔதார்யத்துக்கு மேகத்தையொப்பாகக் கவிசொல்லி ஸ்துதியேன்; ஸ்ப்ருஹணீயமான கோயிலென்னும் ப்ரஸங்கத்திலே காதல்மையல் அபிவ்ருத்த மாகாநிற்கு மெம்பெருமானாருடைய பரஸ்பரம் பொருந்திய பரமபூஜ்யமாய் போக்யமான திருவடிகளை விஸ்மரியேன்; ஆதலால், அறுக்கவரிதான கர்மங்கள் எவ்வழியாலே என்னை இன்று அடர்ப்பது? அப்ராப்த தேவதாப்ராவண்யமும் அஸேவ்யஸேவையும் அப்ராப்தவிஷய ஸ்ம்ருதியுமாயிற்று கர்மமடருகைக்குவழி; இவையொன்றுமெனக் கில்லாமையால் கர்மத்துக்கு என்னை யொருவழியாலும் அடர்க்கப்போகாதென்று கருத்து. "கவிபோற்றிசெய்யேன்" என்றவிது - "கவிசெய்யேன்" "போற்றிசெய்யேன்" என்று பிரித்து யோஜிக்கவுமாம். அப்போதைக்குக் கவிசெய்கையாவது - அவர்களைக் கவிபாடுகை. போற்றுகையாவது - கேவலம்புகழுகை. "நயவேன்" என்றது - விரும்பேனென்றபடி. புயல் - மேகம். மயல் - ப்ராந்தி. அயர்வு - மறப்பு.　　　　௩௫

அடல்கொண்ட நேமிய னாருயிர்நாதன், அன்றாரணச்சொல்
கடல் கொண்ட வொண்பொருள் கண்டளிப்பப், பின்னும் கா
[சினியோர்
இடரின்கண் வீழ்ந்திடத்தானு மவ்வொண்பொருள் கொண்ட
[வர்பின்
படருங்குணன், எம்மிராமாநுசன்றன் படியிதுவே.

முப்பத்தாறும்பாட்டு. "இராமாநுசன் மன்னுமாமலர்த்தாளய ரேன்" என்றீர்; நாங்களும் இவரை ஆஶ்ரயிக்கும்படி இவர் தம்முடைய ஸ்வபாவமிருக்கும்படி சொல்லீரென்ன; அதையருளிச்செய்கிறார்.

விரோதிநிரஸந சக்தியையுடைத்தான திருவாழியையுடையனாய் ஸகலாத்மாக்களுக்கும் சேஷியானவன், (க) * அஸ்த்தாநஸ்நேஹகாருண்ய தர்மாதர்மதியாகுலனாய்க்கொண்டு அர்ஜுநன் சோகாவிஷ்டனானவன்று அவனை வ்யாஜீகரித்து, பெருங்கடலிலே மறைந்து கிடக்கும் பெருவிலையனான ரத்நங்கள்போலே வேதசப்தமாகிற ஸமுத்ரத்துக்குள்ளே ஒருவர்க்கும் தெரியாதபடி மறைந்துகிடக்கிற விலக்ஷணமான அர்த்தங்களை தர்சித்து ஸகல சேதநருடைய உஜ்ஜீவநார்த்தமாக ஸ்ரீகீதாமுகேந உபகரித்தருள, பின்னையும் பூமியிலுள்ளவர்கள் ஸம்ஸார துஃகத்திலே அழுந்தி தரைப்பட, தாமும் முன்பு ஸர்வேஶ்வர னருளிச்செய்த அந்த விலக்ஷணமான அர்த்தத்தைக்கொண்டு இதுகைக்கொள்ளுமளவும் அவர்களைப் பின்தொடரா நின்ற குணத்தையுடையரா யிருப்பாராய் எங்களுக்குத் தம்மை முற்றாட்டாகத் தந்த எம்பெருமானாருடைய ஸ்வபாவம் இது.

"ஆருயிர்நாதனென்றாரணச் சொல் கடல் கொண்டவொண்பொருள் கண்டளிப்ப" என்று பாடமானபோது, அடல் கொண்ட நேமியனான ஸர்வேஶ்வரனே ஆத்மாக்களுக்கு சேஷியென்று கொண்டு வேதத்தில் மறைந்து கிடக்கிற அர்த்தத்தை தர்சித்து ஸ்ரீகீதாமுகேந அருளிச்செய்ய என்று பொருளாகக்கடவது. அடல் - மிடுக்கு. காசினி - பூமி. இடரின்கண் என்றது - இடரினிடத்திலே என்கை. படி - ஸ்வபாவம்.

௩௭

படிகொண்ட கீர்த்தி யிராமாயணமென்னும் பத்திவெள்ளம்,
குடிகொண்ட கோயிலிராமாநுசன் குணங்கூறும், அன்பர்

(க) கீதார்த்தஸங்க்ரஹம்.

கடிகொண்ட மாமலர்த்தாள் கலந்துள்ளம் கனியும் நல்லோர்
அடிகண்டு கொண்டுகந்து, என்னையு மாளவர்க் காக்கினரே.

முப்பத்தேழாம்பாட்டு. இப்படி யிருக்கிற இவர் தம்மை நீர் தாம் அறிந்து பற்றினபடி யென்னென்ன; நானறிந்து பற்றினேனல்லேன், அவர் திருவடிகளிலே ஸம்பந்தமுடையவர்களே உத்தேஶ்யரென்றிருக்குமவர்கள் என்னையுமங்குத்தைக்கு சேஷமாக்கினார்களென்கிறார்.

பூமியையடங்கக் கொண்டிருக்கும் கீர்த்தியையுடைத்தான ஸ்ரீராமாயணமாகிற(பூ)பக்திஸாகரம்நித்யவாஸம்பண்ணுவதொருதிவ்யஸ்தாநமாயிருக்கிற எம்பெருமானாருடைய குணங்களைப் பேசாநின்றுள்ள ப்ரேமயுக்தருடைய, பரிமளத்தையுடையதாய் ஶ்லாக்யமாய் போக்யமாயிருக்கிற திருவடிகளிலே நெஞ்சுகலந்து ஸ்நேஹித்திருக்கும் விலக்ஷணரானவர்கள், இவ்வாத்மவஸ்துவும் அங்குத்தைக்கு சேஷமன்றோவென்றுகொண்டு இதினுடையபடியை தர்சித்து அந்தஸம்பந்தமே ஹேதுவாகவிரும்பி அங்கீகரித்துத் தங்களைப்போலே என்னையும் அவர்க்கு சேஷமாம்படி பண்ணினார்கள்; ஆகையாலே நானறிந்து இவ்விஷயத்தைப்பற்றினேனல்லேன். ஸ்ரீவைஷ்ணவர்கள் சேர்க்கச்சேர்ந்தேனித்தனை யென்று கருத்து.

ஸ்ரீராமாயணத்தை பக்திஸாகரமென்றது. நிரவதிக பக்திஜநகத்வத்தாலே. கடி - மணம். ௩௭

ஆக்கியடிமை நிலைப்பித்தனை, என்னையின்றவமே
போக்கிப்புறத்திட்ட தென்பொருளா முன்பு, புண்ணியர்தம்
வாக்கிற்பிரியா விராமாநுச நின்னருளின் வண்ணம்
நோக்கில் தெரிவரிதால், உரையாயிந்த நுண்பொருளே.

முப்பத்தெட்டாம்பாட்டு. இப்படி ஸ்ரீவைஷ்ணவர்கள் சேர்க்கும்போதும் அத்வேஷாதிகள் வேண்டுகையாலே, தத்ப்ரவர்த்தகனான ஈஶ்வரனிறே இப்பேற்றுக்கடியென்று நினைத்து (௧)"𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋 𑌦𑍇𑌵𑌃- ஸாக்ஷாந்நாராயணோதேவ:" இத்யாதிப்படியே எம்பெருமானார் தம்மை ஈஶ்வரனாகப்ரதிபத்திபண்ணி, (௨)"இன்றென்னைப் பொருளாக்கி" என்கிறபாட்டிலே ஆழ்வாரருளிச்செய்தாற்

---

(௧)  (௨) திருவாய் - ௧௦ - ௮ - ௯.

போலே இவருமருளிச்செய்கிறார். அன்றிக்கே, இவர்களைமுன்னிட்டுத் தம்மை யங்கீகரித்தருளின ரெம்பெருமானாராகையாலே, இவர் திருமுகத்தைப்பார்த்து, இத்தனைநாள் இவ்வூரிலே நான் வர்த்திக்கச்செய்தே என்னை அங்கீகரியாதிருக்கைக்கும் இப்போது அங்கீகரிக்கைக்கும் ஹேதுவென்னென்று கேட்கிறாராகவுமாம்.

அநாதிகாலம்(௧)"ஈஶ்வரோஹம்-ஈஶ்வரோஹம்' என்றிருந்தவென்னைசேஷத்வத்துக்கிசையும்படியாக்கிஅது தன்னைத் ததீயசேஷத்வ காஷ்ட்டையளவும் செலுத்தி ஸ்த்திதிப்பித்தருளினீர்; இன்று இப்படி செய்யலாயிருக்கச்செய்தே பூர்வகாலமெல்லாம் வ்யர்த்தமே போக்கி பாஹ்ய விஷயங்களிலே தள்ளிவிட்டுவைத்தது என்ன நிமித்தமாக? தேவரீரை உள்ளபடியறிகைக்கீடான பாக்யாதிகருடையவாக்குக்கு நித்யவிஷயமாயிருக்குமவரே! தேவரீருடைய க்ருபாப்ரகாரம் தர்சிக்குமளவில் தூர்ஜ்ஞேயமாயிராநின்றது; இந்த ஸூக்ஷ்மார்த்தத்தை தேவரீர் தாமே அருளிச்செய்யவேணும். தெரிவரிதென்றது - விவேகிக்க வரிதென்றபடி. ௩௮

பொருளும் புதல்வரும் பூமியும், பூங்குழலாருமென்றே
மருள்கொண்டிளைக்கும் நமக்கு நெஞ்சே, மற்றுளார்தரமோ
இருள்கொண்ட வெந்துயர் மாற்றித் தன்னீறில் பெரும்புகழே
தெருளும் தெருள்தந்து, இராமாநுசன்செய்யும் சேமங்களே.

முப்பத்தொன்பதாம்பாட்டு. இப்படிகேட்டவிடத்திலும் ஒருமறுமாற்றமு மருளிச்செய்யக் காணாமையாலே அத்தைவிட்டு, செய்த உபகாரங்களை அநுஸந்தித்து ப்ரீதியாலே தந்திருவுள்ளத்தைப் பார்த்து, நமக்கெம்பெருமானார் செய்யும் ரக்ஷைகள் வேறுசிலர் செய்யுமள்வோ? என்கிறார்.

அர்த்தமும் புத்ரர்களும் க்ஷேத்ரமும் தாரங்களும் என்றிவற்றையே விரும்பி அறிவுகெட்டு அவஸந்நராய்ப்போருகிற நமக்கு அஜ்ஞாநயுக்தமான க்ரூரதுঃகங்களை நீக்கித் தம்முடைய நித்யமாய் நிரவதிகமான கல்யாணகுணங்களையே அறியும்படியான அறிவைத் தந்து எம்பெருமானார் செய்யும் ரக்ஷைகள், நெஞ்சே! மற்றுண்டானவர்கள் செய்யுமளவோ?

---

(௩) கீதை - ௧௬ - ௧௪.

பூங்குழல் - அழகியகுழல்; பூவையுடைத்தான குழலென்னவு மாம். மருள் - அறிவுகேடு. சேமம் - ரக்ஷை. தரம் - ஒப்பு. மற்று ளார்தரமோ" என்றது-மற்றுள்ளாரோ டொப்பாமோ வென்றபடி.

சேமநல்வீடும் பொருளும் தருமமும், சீரியநற்
காமமு மென்றிவை நான்கென்பர், நான்கினும் கண்ணனுக்கே
யாமதுகாம மறம்பொருள்வீடிதற்கென் றுரைத்தான்
வாமநன் சீலன், இராமாநுசனிந்த மண்மிசையே.

நாற்பதாம் பாட்டு. எம்பெருமானார் தமக்குச் செய்த உபகாரங் களை யருளிச்செய்தார் கீழ்ப்பாட்டில்; இப்பாட்டில் லோகத்துக்குச் செய்த உபகாரத்தை அநுஸந்தித்து வி(ஸ்)த்தராகிறார்.

இத்தலையில் அர்த்தித்வாதி நிரபேக்ஷமாகத் தாமேவந்துபகரிக் கைக்குஸ்ரீவாமநதுல்யசீலரானஎம்பெருமானார்,(க)"ధర్మార్థకామమోక్షాఖ్యః పురుషార్థ ఉదాహృతః - தர்மார்த்த காம மோக்ஷாக்யஃ புருஷார்த்த உதாஹ்ருதஃ" என்கிறபடியே க்ஷேமரூபமாய் விலக்ஷணமாயிருந்துள்ள மோக்ஷமும் அர்த்தமும் தர்மமும், இவைபோ லே அங்கதயா புருஷார்த்தமாயிருக்கையன்றிக்கே ஸ்வயம் புருஷா ர்த்த மாகையாலே சீரியதாய் விலக்ஷணமாயிருந்துள்ள காமமும் என்றுகொண்டு இவை நாலும் புருஷார்த்தமாக ப்ராமாணிகர் சொ ல்லுவர்கள் ; இவைநாலிலும், காமமாவது-ஸர்வேஸ்வரன் விஷயத் திலே உண்டாமது;தர்மமும் அர்த்தமும் மோக்ஷமுமாகிற இவற்றில் தர்மமானது(உ)"ధర్మేణ పాపమపనుదతి-தர்மேணபாபமபநுததி" என் கிறபடியே ஏதத்விரோதிபாபக்ஷய ஹேதுவாகையாலும், அர்த்தம் தாநாதிமுகத்தாலே அதுக்குபகாரகமாகையாலும்,மோக்ஷம் ததபிவ் ரு(த்)த்தி ஹேதுவாகையாலும், அவை மூன்றும் காமசப்தவாச்ய மான பகவத்ஸம்ஸ்லேஷத்துக்கு சேஷமாயிருக்கு மத்தனையென்று இந்தப் பூமியிலே அருளிச்செய்தார்; அபேக்ஷாநிரபேக்ஷமாக இவ் வர்த்தத்தை இப்படி உபகரித்தருளுவதே! என்று கருத்து.

"வாமநன்சீரை" என்று பாடமானபோது, பூர்வோக்தப்ரக்ரி யையாலே புருஷார்த்தத்தை நிர்ணயித்து,இப்புருஷார்த்தத்தை லபி

---

(க) (உ)

க்கவேண்டுமிடத்தில் வருந்தவேண்டுவதில்லை, எளிதாகப் பெறலா மென்னுமிடத்தைத் தர்சிப்பிக்கைக்காக இத்தலையில் அபேக்ஷாநிர பேக்ஷமாக வந்து கலக்குமவன் காணுங்கோளென்று ஸ்ரீவாமநனு டைய ஸ்வபாவத்தை யருளிச்செய்தாரென்கை. இதிலுங்காட்டில் பூர்வயோஜனைக்கு சப்தஸ்வாரஸ்யமும் அர்த்த கௌரவமுமுண்டு.

மண்மிசை யோநிகள்தோறும் பிறந்து, எங்கள் மாதவனே
கண்ணுற நிற்கிலும் காணகில்லா, உலகோர்களெல்லாம்
அண்ண லிராமாநுசன் வந்து தோன்றிய வப்பொழுதே
நண்ணரு ஞானம் தலைக்கொண்டு, நாரணற் காயினரே.

நாற்பத்தோராம்பாட்டு. இப்பாட்டில் எம்பெருமானாரு பதேசத்தாலே லோகந்திருந்தினபடியைக்கண்டு, ஸர்வேஶ்வரன் அநேகாவதாரங்கள் பண்ணித் தன்னைக் கண்ணுக்கிலக் காக்கினவளவி லும் காணமாட்டாத லௌகிகரெல்லாம் எம்பெருமானார் காலத்தி லே யதாஜ்ஞாநம்பிறந்து பகவதீயரானார்களென்கிறார்.

(க)"எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" என்கிறபடியே பூமி யிலே மநுஷ்யதிர்யகாதியோநிகள்தோறும் அவதரித்து நமக்கு நாத னான ஶ்ரியஃபதியே(உ)"నమాంసచక్షురభివీక్షతే తమ్-நமாம்ஸசக்ஷுர பிவீக்ஷதேதம்" என்கிற தன்னைக் கண்ணுக்குவிஷயமாக்கிக்கொண்டு நிற்கிலும் இவன் நமக்கு சேஷியென்று தர்சிக்கமாட்டாத லௌ கிகரெல்லாரும், ஆஶ்ரிதருடைய இழவுபேறுகள் தம்மதாம்படியான ஸ்வாமித்வப்ராப்தியையுடையரான எம்பெருமானார்வந்து பாஷ்யக ரணாதிகளாலே ப்ரகாசரான அக்காலத்திலே ஸ்வயத்நத்தாலே துஷ் ப்ராபமான ஜ்ஞாநமானது அதிசயித்து, ஸகல சேதநாசேதநங்களும் ப்ரகாரமாகத் தான் ப்ரகாரியாயிருக்கையாலே நாராயணனென்னும் திருநாமத்தையுடையவனுக்கு சேஷமானார்கள்.

தோன்றல்-ப்ரகாசித்தல். அதவா-"தோன்றியவப்பொழுதே" என்றது-ஆவிர்ப்பவித்தவப்பொழுதே யென்னவுமாம். அந்தப்பக்ஷத் திலும் அப்பொழுதே என்றது-அவதரித்தருளினஅக்காலத்திலேயெ ன்றபடி; அல்லது தக்ஷணத்திலே யென்னவொண்ணாதிறே. கண் ணுறநிற்கையாவது-சக்ஷுர்விஷயமாக நிற்கை. ஞானந்தலைக்கொள் ளுகையாவது-ஜ்ஞாநமதிசயிக்கை. சக

(க) திருவிருத்தம் - க. (உ)

ஆயிழையார் கொங்கைதங்கு மக்காத லளற்றழுந்தி,
மாயுமென்னுவியை வந்தெடுத்தானின்று, மாமலராள்
நாயக னெல்லாவுயிர்கட்கும் நாத னரங்கனென்னும்
தூயவன், தீதிலிராமாநுசன் தொல்லருள் சுரந்தே.

நாற்பத்திரண்டாம்பாட்டு. பகவதவதாரங்களில் திருந்தாதவர்களெல்லாரும் எம்பெருமானுருடைய அவதாரத்தாலே திருந்தினர்களென்றார் கீழ்; விஷயப்ரவணனாய் நசித்துப் போகிறவென்னைத் தம்முடைய பரமக்ருபையாலே வந்து எடுத்தருளினரென்று தம்மை விஷயீகரித்தபடியை யநுஸந்தித்துத்தலை சிய்க்கிறாரிதில்.

ஸ்ரக்வஸ்த்ராபரணங்கராகங்களாலே தேஹதோஷம் புறந்தோற்றாதபடி மறைத்து சேதநரைமோஹிப்பிக்கு மவர்களாகையாலே தங்களுக்கு அநுரூபமாகத்தெரிந்து பூணப்பட்ட ஆபரணங்களையுடையராய் அதுவே நிரூபகமாக விருக்கும் ஸ்த்ரீகளுடைய ஸ்தநத்துக்கு அவ்வருகு ஒன்றில் போகாததாய் வாக்குக்கு நிலமல்லாதபடி கைகழிந்திருக்கிற ப்ராவண்யமாகிற அளற்றிலே அழுந்தி நசித்துப்போகிற என்னுத்மாவை, அளறுபாய்ந்து முடியத்தேடுகிறவர்களை விரகறியும் தார்மிகர்வந்தெடுக்குமாபோலே ஶ்ரிய:பதியான பெரியபெருமாளே ஸர்வாத்மாக்களுக்கும் சேஷியென்று உபதேசியாநின்றுள்ள ஜ்ஞாநசுத்தியையுடையராய்,இப்படி உபதேசிக்குமிடத்தில் க்யாதிலாபாத்யபோக்ஷரூப தோஷரஹிதரான எம்பெருமானுர், தம்முடைய ஸ்வாபாவிகக்ருபை கிளர்ந்து அந்த க்ருபாப்ரேரிதராய்வந்து இன்று எடுத்தருளினர். இப்படிசெய்தருளுவதே! என்று கருத்து.

ஆய்தல்-தெரிதல். இழை-ஆபரணம். அக்காதலென்று-அதினுடைய ஹேயதையைச் சொல்லிற்றாகவுமாம். மாய்தல்-நசித்தல்.

சுரக்கும் திருவுமுணர்வும், சொலப்புகில் வாயமுதம்
பரக்கு மிருவினை பற்றறவோடும், படியிலுள்ளீர்
உரைக்கின்றன னுமக்கியானறஞ்சீறு முறுகலியைத்
துரக்கும் பெருமை, இராமாநுசனென்று சொல்லுமினோ.

நாற்பத்துமூன்றும் பாட்டு, இப்படி தம்மை விஷயீகரிக்கையால் வந்த ப்ரீதியாலே லௌகிகரைப் பார்த்து, எல்லாரும் எம்பெருமானுர் திருநாமத்தைச் சொல்லுங்கோள், உங்களுக்கெல்லா நன்மையுமுண்டாமென்கிறார்.

எம்பெருமானுர் திருவவதரித்தருளுகையாலே (க)“विश्वम्भरा पुण्यवती - விஶ்வம்பராபுண்யவதீ” என்கிறபடியே, பாக்யவதியாயிருக்கிற பூமிக்குட்பட்டவர்களே! *நிஶ்சிதமாக அநுபவத்தாலே கைகண்டநான், இதில் வாசியறியாமல் இழந்திருக்கிற உங்களுக்குச் சொல்லுகிறேன். தர்மமென்பதொன்று நடையாடஸஹியாதே ப்ரபலமாயுறைத்து நிற்கிற கலியை, தம்முடைய ஸம்பந்தமுள்ள விடத்திலே நில்லாதபடி ஓட்டிவிடும் ப்ரபாவத்தையுடையரான எம்பெருமானுருடைய திருநாமோச்சாரணத்தைப் பண்ணுங்கோள். பக்தியாகிற ஸம்பத்தும் ஜ்ஞாநமும் மேன்மேலும் வர்த்திக்கும்; (உ)“என்றக் காலண்ணிக்குமமுதூறும்” என்னுமளவன்றிக்கே சொல்லத்துடங்கினபோதே வாக்கிலே ரஸம்பிறக்கும்; அநுபவவிநாஶ்யமாதல் ப்ராயஶ்சித்த விநாஶ்யமாதல் செய்யாத மஹாபாபங்கள் தானேயஞ்சி ஸவாஸநமாக விட்டு ஓடும்.

(ங) “தளைசீர்வண்ணம் தாம் கெடவரினே குறுகிய விகரமும் குற்றியலுகரமும் அளபெடையாவையும்அலகியல்பிலவே” என்கிற ந்யாயத்தாலே “உரைக்கின்றன னுமக்கியான் அறம் சீறுமுறுகலியை” என்கிற பாதத்தில் “உமக்கியான்” என்கிறவிடத்தில் ககரத்தின்மேலேறின இகரம் குற்றியலிகரமாகையாலே வண்ணம் கெடாமைக்குக் கழித்து உடலெழுத்தான ககரத்தைக் கீழோடே யொன்றுவித்துப் பூர்வோத்தரபாதங்களுக்கு ஒக்கப் பதினேழெழுத்தாக்கியெண்ணக்கடவது. (ச)“என் முடியாதெனக் கியாதேயரியது” என்று ஆழ்வார் நூற்றந்தாதியிலும் இப்படி ப்ரயோகிக்கப்பட்டதிறே. ஆகையாலே மஹாகவி ப்ரயோகங்கள் இப்படி வரக்கடவதாயிருக்கும். சரு

சொல்லார் தமிழொரு மூன்றும், சுருதிகள்நான்குமெல்லை
யில்லா வறநெறி யாவும் தெரிந்தவன், எண்ணரும்சீர்
நல்லார்பரவு மிராமாநுசன் திருநாமம்நம்பிக்
கல்லாரகலிடத்தோர், எது பேறென்று காமிப்பரே.

நாற்பத்துநாலாம்பாட்டு. இப்படி உபதேசித்த விடத்திலும் ஒருவரும் இதில் மூளாமையாலே அவர்களுடையபடியை அநுஸந்தித்து இன்னுதாகிறுர்.

---

(க) * (பா) சரதமாக.

(உ) கண்ணிநுண் - க. (ங) (ச)

விஸ்தீர்ணையான பூமியிலுள்ளார் புருஷார்த்தம் எதென்று இச்சியாநிற்பர்கள்; சொல்நிரப்பத்தையுடைத்தாய் அத்விதீயமாய் இயலிசைநாடக ஸம்பந்தத்தாலே மூன்றுவகைப்பட்டிருந்துள்ள தமிழும் ருகாதி சதுர்வேதங்களும் அஸங்க்யேயமான தர்மமார்க்கங்களான ஸகலமும் அலகலகாக ஆராய்ந்திருக்குமவராய், எண்ணப்புக்கால் எண்ணித்தலைக்கட்டவரிதான கல்யாணகுணங்களையுடையராய், ஸத்துக்களுடைய ப்ரீதிப்ரகர்ஷத்தாலே அடைவுகெட ஏத்தும்படியாயிருக்கிற எம்பெருமானருடைய திருநாமத்தை, நான் சொன்ன வார்த்தையை விஸ்வஸித்துக் கற்கிலர்கள். ஐயோ! இவர்களளவிருந்தபடி யென்னென்று கருத்து.

எண்ணருஞ்சீரென்கிறவிது நல்லார்க்கு விசேஷணமாகவுமாம். நம்புதல் - விருப்பமுமாம். சச

பேறொன்று மற்றில்லை நின்சரணன்றி, அப்பேறளித்தற்
காறொன்றுமில்லை மற்றச்சரணன்றி, என்றிப்பொருளைத்
தேறுமவர்க்கு மெனக்கு முனைத்தந்த செம்மை சொல்லாற்
கூறும்பரமன்று, இராமாநுச மெய்ம்மை கூறிடிலே.

நாற்பத்தஞ்சாம்பாட்டு. இப்படி விமுகராயிருந்த சேதநரிலே அந்யதமராயிருந்த தம்மைநிர்ஹேதுகமாக விஷயீகரித்துத் தம்திருவடிகளேப்ராப்யமும் ப்ராபகமுமென்று விஸ்வஸித்திருக்கும்படி பண்ணின உபகாரத்தை யநுஸந்தித்து, தேவரீர் செய்தருளின உபகாரம் வாசகமிட்டுச் சொல்லவொண்ணு தென்கிறுர்.

தேவரீர் திருவடிகளை யொழிய வேறு ப்ராப்யமொன்றுமில்லை; அந்த ப்ராப்யத்தைத் தருகைக்கும் அத்திருவடிகளையொழிய வேறு உபாயம் ஒன்றுமில்லை என்று இவ்வர்த்ததத்வத்தை தத்வயாதாத்ம்யஜ்ஞாநத்தாலே விஸ்வஸித்திருக்குமவர்களுக்கும் அதில் விஸ்வாஸஹீநனன வெனக்கும் ஒரு வாசிபாராதே தேவரீரை உபகரித்தருளின நேர்சொல்லால் உண்மை சொல்லில் வாசா வ்யவஹரிக்கைக்கு சக்யமாகிறதில்லை. அநுஸந்தித்துக் குமிழ்நீருண்டுபோமித்தனையென்று கருத்து.

"சொல்லால்கூறும் பரமன்று" என்றது வாசகமிட்டுச் சொல்லும்படி (ப்) பரிக்கத்தக்க தன்றென்கை. செம்மை-செவ்வை. தேறுதல் - விஸ்வஸித்தல். சரு

கூறும் சமயங்களாறும் குலையக், குவலயத்தே
மாறன் பணித்த மறை யுணர்ந்தோனை, மதியிலியேன்
தேறும்படி யென் மனம் புகுந்தானைத் திசையனைத்து
மேறுங் குணனை, இராமாநுசனை யிறைஞ்சினமே.

நாற்பத்தாறும்பாட்டு. எம்பெருமானார் செய்தருளின உபகாரத்தை யநுஸந்தித்து அதுக்குத் தோற்றுத் திருவடிகளிலே வணங்குகிறார்.

(க)"விளம்புமாறுசமயமும்"என்கிறபடியே சிலவற்றைச் சொல்லாநின்றால் தாங்களும் சில தர்க்கங்களைச் சொல்லாநிற்கு மத்தனை போக்கி ப்ரமாணாநுகூல தர்க்கமல்லாமையாலே கேவலம் உக்தி ஸாரமேயாயிருக்கிற பாஹ்யஸமயங்கள் ஆறும் சிதிலமாய்ப்போம்படியாக, அவ்வவஸமயங்கள் தன்னரசாக நடத்தின இத்தேசத்திலே ஆழ்வார் அருளிச்செய்த த்ராவிட வேதமான திருவாய்மொழியை ஸாக்ஷாத்கரித்தருளினவராய், ப்ரமாணகதிகளாலே தர்சித்து விஶ்வஸிக்கைக் குறுப்பான ஜ்ஞாநமில்லாத நான் கீழ்ப்பாட்டில் சொன்னபடியே ப்ராப்ய ப்ராபகங்களிரண்டும் தாமே யென்று விஶ்வஸித்திருக்கும்படி என்னுடைய ஹ்ருதயத்திலே வந்துபுகுந்தருளினவராய், இப்படிகளாலே ஸர்வதிக்குக்களிலும் ப்ரஸித்தமான கல்யாண குணங்களையுடையரான எம்பெருமானாரை இவ்வுபகாரத்துக்குத் தோற்று வணங்கினோம். சசு

இறைஞ்சப்படும் பர னீச னரங்கனென்று, இவ்வுலகத்
தறம்செப்பு மண்ண லிராமாநுசன், என் னருவினையின்
திறம்செற் றிரவும் பகலும் விடாதென்றன் சிந்தையுள்ளே
நிறைந்தொப்பறவிருந்தான், எனக் காரும் நிகரில்லையே.

நாற்பத்தேழாம்பாட்டு."மதியிலியேன் தேறும்படி யென்மனம் புகுந்தான்" என்றார் கீழ்;லோகத்திலுள்ளவர்களுக்கு தத்வஸ்த்திதியையருளிச்செய்து பகவத்ஸமாஶ்ரயணருசியை ஜநிப்பிக்குமவர் தம்மளவில்பண்ணின விசேஷவிஷயீகாரத்தை யநுஸந்தித்து இப்படி விஷயீகரிக்கப்பெற்ற வெனக்கு ஸத்ருசரில்லையென்கிறாரிதில்.

ஸர்வஸமாஶ்ரயணீயனாக வேதாந்த ப்ரஸித்தனான ஸர்வஸ்மாத் பரன் அநந்தசாயித்வாதிகளாலே ஈஶ்வரத்வம் தோற்றவந்து கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளென்று அதர்மாநு

(க) திருவாய் - ச - கO - கூ-

ஸாரியான இந்த லோகத்திலே ஸாக்ஷாத்தர்மத்தை அருளிச்செய்யு மவராய், ஆஸ்ரிதரிழவுபேறுகள் தம்மதாம்படியான ஸம்பந்தத்தை யுடையராயிருக்கிற எம்பெருமானார், என்னுடைய அநுபவத்தா லும் ப்ராயஸ்சித்தத்தாலும் போக்கவரிய கர்மஸமூஹத்தை நிரஸி த்து (க) "அல்லு நன்பகலு மிடைவீடின்றி" என்கிறபடியே திவா ராத்ர விபாகமற இடைவிடாதே என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளே பூர்ணராய்க்கொண்டு இவ்விருப்புக்கு ஸத்ருசமில்லையென்னும்படி எழுந்தருளியிருந்தார். ஈத்ருசவிஷயீகார பாத்ரமான வெனக்கு ஒருவரும் ஸத்ருசரில்லை. திறம்-ஸமூஹம் நிகர்-ஒப்பு. சஎ

நிகரின்றிநின்ற வென்நீசதைக்கு, நின்னருளின்கணன்றிப்
புகலொன்று மில்லை யருட்கு மஃதேபுகல், புன்மையிலோர்
பகரும் பெருமை யிராமாநுச இனி நாம் பழுதே
யகலும் பொருளென், பயனிருவோ முக்குமானபின்னே.

நாற்பத்தெட்டாம்பாட்டு. "எனக்காரும் நிகரில்லை" என்று இவர் சொன்னவாறே எம்பெருமானாரிவரைப் பார்த்து, நீர் நம்மைவிட்டு வேறொருவிஷயத்தை அவலம்பித்தல், நாம் உம்மைவிட்டு வேறொரு விஷயத்தை விரும்புதல் செய்யில் இந்த ஹர்ஷம் உமக்கு நிலைநிற்க மாட்டாதேயென்ன; என்னுடைய நைச்யத்துக்கு தேவரீர்க்ருபை யும் அந்த க்ருபைக்கு என்னுடைய நைச்யமுமொழியப்புகலில்லையா யிருக்க வ்யர்த்தமே நாம் இனி அகலுகைக்குக் காரணமென்னென் கிறார்.

இந்தப் பூமியில் ஆத்மகுண ராஹித்யத்தாலும் அநாத்மகுண (உ) பாஹுள்யத்தாலும் வந்ததண்மையையுடையவர்களைத் தனித் தனியே ஆராய்ந்து பார்த்தால் என்னைப்போல் ஆத்மகுண லவலேச ரஹிதராய் அநாத்மகுண பரிபூர்ணரா யிருப்பார் ஒருவருமில்லா மையாலே உபமாநரஹிதமாய்க் கொண்டுநின்ற என்னுடைய நீச தைக்கு, அந்நீசதைதானே பச்சையாகவங்கீகரிக்கும் தேவரீருடைய க்ருபையினிடத்திலொழிய ஒதுங்கநிழல் ஒன்றுமில்லை; அந்த க்ருபை தனக்கும், எத்தனையேனும் தண்ணியரே அநுத்தமபாத்ர மாகை யாலே என்னுடைய நீசதையொழியப் புகலில்லை; அஸ்ப்ருஷ்டதோ ஷகந்தரானவர்கள்பேச்சுக்குவிஷயமான ப்ரபாவத்தையுடையவரே!

(க) திருவாய் - க - கO - அ.

எனக்கு ஸ்வரூபலாபமாய் தேவரீருக்கு குணலாபமாய் இப்படி நமக்கிருவர்க்கும் ப்ரயோஜநமான பின்பு இது அறிந்திருக்கிற நாம் மேலுள்ளகாலம் வ்யர்த்தமே அகலுகைக்குக் காரணமென்? அகலுகைக்கு ஹேதுவில்லையென்று கருத்து. சஅ

ஆனது செம்மை யற நெறிபொய்ம்மை, அறுசமயம்
போனது பொன்றி யிறந்தது வெங்கலி, பூங்கமலத்
தேனதிபாய் வயல்தென்னரங்கன் கழல் சென்னிவைத்துத்
தானதில் மன்னும், இராமாநுச னித்தலத்துதித்தே.

நாற்பத்தொன்பதாம்பாட்டு. எம்பெருமானார் விரோதிகளை நிரஸித்துக்கொண்டு தம்திருவுள்ளத்தினுள்ளே நிரந்தரவாஸம்பண்ணியருளுகிற மஹோபகாராநுஸந்தாநத்தால் வந்த ப்ரீதியையும் அந்த ப்ரீதியினுடைய அஸ்த்தைர்யஹேதுவில்லாமையையும் அருளிச்செய்தார் கீழிரண்டுபாட்டாலே; இதில், அவர் திருவவதரித்தருளின பின்பு லோகத்துக்குண்டான ஸம்ருத்தியை யநுஸந்தித்து இனியராகிறார்.

அழகிய தாமரைப்பூக்களிலுண்டானதேனாகிற ஆறு விளை நீராகப் பாயாநின்றுள்ள வயல்களையுடைத்தாய், திருச்சோலைகளும் திருமதிள்களும் திருக்கோபுரங்களும் திருமாளிகைகளுமான ஸமுதாய சோபையாலே தர்சநீயமாயிருக்கிற கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பெரிய பெருமாளுடைய திருவடிகளை சிரஸாவஹித்துக்கொண்டு தாம் அதிலே நித்யஸம்ஶ்லேஷம்பண்ணாநின்றுள்ள எம்பெருமானார் இந்த ஸ்த்தலத்திலே அவதரித்தருளி, வைதிகமாகையாலே செவ்விதாயிருந்துள்ள தர்மமார்க்கம் முன்பு அழிந்துகிடந்தது மீண்டுமுண்டானது; வேதபாஹ்யமாகையாலே அயதாவான ஷட்ஸமயமும் முடிந்துபோயிற்று; வைதிக தர்மம் தலைசாய்ந்து பாஹ்யஸமயம் மேலிடுகைக்குடலான க்ரூரமான கலியுகமானது (க) "கலியுங்கெடும்" என்கிறபடியே நசித்தது; இவர் அவதரித்தருளினபின் லோகத்துக்குண்டான ஸம்ருத்தியிருந்தபடியென்! என்று கருத்து.

பொன்றுதல்-முடிதல். "பொன்மையறுசமயம்" என்று பாடமானபோது, வேதபாஹ்யத்வேந பொல்லாதாயிருக்கிற ஷட்ஸமயமென்றபடி. சகூ

(க) திருவாய் - ரு - உ - க.

உதிப்பன வுத்தமர்சிந்தையுள், ஒன்றலர் நெஞ்சமஞ்சிக்
கொதித்திட மாறி நடப்பன, கொள்ளைவன் குற்றமெல்லாம்
பதித்த வென் புன்கவிப்பாவினம்பூண்டன பாவுதொல்சீர்
எதித்தலை நாதன், இராமாநுசன் றன்னிணையடியே.

ஐம்பதாம்பாட்டு. "தென்னரங்கன்கழல் சென்னிவைத்துத் தா னதில்மன்னும்" என்று எம்பெருமானாருக்குப் பெரியபெருமாள் திருவடிகளிலுண்டான ப்ராவண்யாதிசயத்தை அநுஸந்தித்தார் கீழ்; அந்த ப்ரஸங்கத்திலே தமக்கு உத்தேஶ்யமான எம்பெருமானார் திருவடிகளை அநுஸந்தித்து தத்ஸ்வபாவாநுஸந்தாநத்தாலே வி(ஸ்மி)த்தராகிறார் இதில்.

(க) "திசையனைத்து மேறுங்குணன்" என்கிறபடியே ஸர்வ திக்கிலும் பரவியிருப்பதாய் ஸ்வரூபாநுபந்தியாகையாலே பழைய தாயிருந்துள்ள கல்யாணகுணங்களையுடையராய், யதிகளுக்குத் தலைவராய், நாதபூதராயிருக்கும் எம்பெருமானாருடைய சேர்த்தியழகை யுடைத்தாயிருந்துள்ள திருவடிகளானவை, அநந்யப்ரயோஜநராய் அநந்யஸாதநராயிருக்கும் உத்தமாதிகாரிகளுடைய திருவுள்ளங்களிலே (உ) "எல்லையில் சீரிளநாயிறிரண்டுபோல்" என்கிறபடியே ஆதித்யனுதித்தாற்போலே ப்ரகாசியாநிற்கும் தன்மையையுடையன; பாஹ்யகுத்ருஷ்டிகளான ப்ரதிபக்ஷபூதருடைய ஹ்ருதயமானது (பீ)பீதமாய் அந்த பயாக்நியாலே பரிதபிக்கும்படி பரஸ்பரம் மாறியிட்டு நடவாநிற்கும் தன்மையையுடையன; ஸம்ருத்தமாய் ப்ரபலமாயிருந்துள்ள தோஷங்களெல்லாம் சேர அழுத்திவைக்கப்பட்ட என்னுடைய புல்லிய கவிகளாகிற(ப்)சந்தஸ்ஸமூஹத்தை அணிந்துகொண்டன. இவற்றினுடைய தன்மையிருக்கும்படி யென்னென்று கருத்து.

இனத்தின்வகையான கலித்துறையாகையாலே "பாவினம்" என்கிறாராகவுமாம். ஒன்றலர்-சத்ருக்கள். பாவுதல்-பரம்புதல். டுo

அடியைத்தொடர்ந்தெழு மைவர்கட்காய்,அன்றுபாரதப்போர்
முடியப் பரிநெடும் தேர்விடுங்கோனை, முழுதுணர்ந்த
அடியர்க்கமுத மிராமாநுச னென்னையாளவந்திப்
படியில் பிறந்தது, மற்றில்லை காரணம் பார்த்திடிலே.

(க) சக. (உ) திருவாய் - அ - டு - ரு.

ஐம்பத்தோராம்பாட்டு. எம்பெருமானார் இந்த லோகத்தில் அவதரித்தருளிற்று என்னை யடிமைகொள்ளுகைக்காக, வேறொரு ஹேதுவுமில்லை யென்கிறார்.

(க) "కృష్ణాశ్రయాః కృష్ణబలాః కృష్ణనాథాశ్చ పాండవాః - க்ருஷ்ணாஸ்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாஸ்ச பாண்டவா:" என்கிறபடியே திருவடிகளைப் பின்சென்று சர்வோத்தரரா யிருக்கிற பாண்டவர்களுக்காகத் துர்வர்க்கமடைய அங்கே திரண்டு இவர்கள் தனிமைப்பட்டுத் தன்னையொழிய வேறுதுணையற்றிருக்கிறவன்று, (ஜ) பாரதஸமரத்திலே அவர்கள் ப்ரதிபக்ஷம் முடியும்படி (உ) "ஆடிப மாநெடுந்தேர்" என்கிறபடியே குதிரைபூண்ட நெடியதேரை நடத்தின ஸர்வேஸ்வரனை ஆஸ்ரிதபக்ஷபாதம், ஆஸ்ரிதபாரதந்த்ர்யம், ஆஸ்ரிதவிரோதிநிரஸநம் முதலான ஸர்வஸ்வபாவங்களையும் அறிந்து அவ்வவ ஸ்வபாவங்களுக்குத் தோற்று எழுதிக்கொடுத்திருக்குமவர்களுக்கு போக்யபூதராயிருக்கும் எம்பெருமானார் இந்தப்பூமியிலே வந்து அவதரித்தது என்னை ஆளுகைக்காக; ஆராயில் வேறொருகாரணமில்லை.

எழுச்சி - கிளப்பம். அதாவது - "நாம் க்ருஷ்ணாஸ்ரயர்" என்கிற ஔத்தத்யம். படி - பூமி. ருக

பார்த்தா னறுசமயங்கள் பதைப்ப, இப்பார் முழுதும்
போர்த்தான் புகழ்கொண்டு புன்மையினே னிடைத்தான் புகுந்து,
தீர்த்தா னிருவினை தீர்த்தரங்கன் செய்ய தாளிணையோ
டார்த்தான், இவை யெம் மிராமாநுசன் செய்யு மற்புதமே.

ஐம்பத்திரண்டாம்பாட்டு. "என்னையாளவந்திப்படியிற்பிறந்தது" என்று ஒருவராலுமாளவரியனான வென்னை ஆளுகைக்காக வந்தவதரித்தாரென்றீர்; இவர்தாமிப்படி அகடிதகடநாஸமாத்தரோ வென்ன; அவர்செய்த அகடிதகடநங்களை யருளிச்செய்கிறார்.

வேதபாஹ்யங்களான ஷட்ஸமயங்களும் நடுங்கும்படியாகக் கண்டார்; இந்தப் பூமியெங்கும் தம்முடைய திவ்யகீர்த்தியாலே மூடிவிட்டார்; அநாத்மகுணங்களை நிரூபகமாகவுடையனாயிருக்கிற என்பக்கலிலே என்னுடைய அர்த்தித்வாதி நிரபேக்ஷமாகத் தாமே

(க) பாரதம். த்ரோண - கஅரு. (உ) திருவாய் - ரு - அ - ரு.

புகுந்து, (க) "యద్బ్రహ్మకల్పనియుతానుభవేప్యనాశ్యమ్- யத்ப்ரஹ்ம கல்ப நியுதா நுபவேப்யநாஶ்யம்" என்கிறபடியே காலதத்வமுள்ளத னையும் அநுபவித்தாலும் தொலையாதென்னும்படியான மஹாபாபங் களைப் போக்கினர்; இப்படி பாபங்களைப்போக்கிப் பெரிய பெருமா ளுடைய அழகிய திருவடிகளோடே ஸம்பந்தித்தார்; எங்களுக்கு நாதரான எம்பெருமானார் செய்தருளின ஆஶ்சர்யங்கள் இவை.

அற்புதம் - அத்புதம்; அதாவது - அகடிதகடநாப்ரயுக்தமான ஆஶ்சர்யம். பதைத்தல் - துடித்தல். போர்த்தல்-மூடுதல். இருமை-பெருமை. ஆர்த்தல்-பந்தித்தல். ருஉ

அற்புதன் செம்மை யிராமாநுசன், என்னை யாளவந்த
கற்பகம் கற்றவர் காமுறுசீலன், கருதரிய
பற்பல்உயிர்களும் பல்உலகியாவும் பரனதென்னும்
நற்பொருள்தன்னை, இந்நானிலத்தே வந்து நாட்டினனே.

ஐம்பத்துமூன்றும்பாட்டு. "பார்த்தானறுசமயங்கள் பதைப்ப" என்று பாஹ்யஸமயங்களைக் குலையப்பண்ணி இவ்விபூதியில் இவர் ஸ்தாபித்தவர்த்தமேதென்ன; ஸகலசேதநாசேதநங்களும் ஸர்வேஶ்வரனுக்கே சேஷமென்கிற விலக்ஷணமான அர்த்தத்தை ஸ்தாபித்தருளினரென்கிறார்.

என்னை அடிமைகொள்ளுகைக்காக நான் கிடந்தவிடம் தேடி வந்த பரமோதாரராய், அறிவுடையார் ஆசைப்படும்படியான ஸௌ சீல்யத்தையுடையராய், அதிமாநுஷமான செயல்களைச் செய்கையாலே ஆஶ்சர்யபூதராய்; ஆஶ்ரிதருடைய கௌடில்யத்தைப்பார்த்துக் கைவிடாதே நீரேறுமேடுகளிலே விரகாலே நீரேற்றுவாரைப்போலே தம்மை யவர்களுக்கீடாக அமைத்துப் பரிமாறும் ஆர்ஜவகுண யுக்தரான எம்பெருமானர், நினைக்கப்புக்கால் நினைத்துத் தலைக்கட்ட அரிதாம்படி அஸங்க்யாதரான ஆத்மாக்களும், அவர்களுக்கு வாஸஸ்தாநமாய் அஸங்க்யாதமாயிருக்கிற ஸகலலோகங்களும், ஸர்வஸ்மாத்பரனுக்கே சேஷம் என்கிற சீரிய அர்த்தத்தை, இந்தலோகத்திலே ஒருவர் அபேக்ஷியாதிருக்கத் தாமேவந்து ஸ்தாபித்தருளினர்.

கற்பகத்தைக்காட்டில் இவர்க்கு விசேஷம்-அடிமை கொள்ளுகையும், இருந்தவிடம் தேடிவருகையும். காமுறுதல் - விரும்புதல்,

(க) வைகுண்ட ஸ்த - ருகூ.

பற்பல்லுயிர்கள் - பலபலவானவுயிர்கள்; அஸங்க்யாதரான வுயிர்களென்றபடி. பல்லுலகில்யாவும்'' என்றும்பாடம் சொல்லுவர்கள்; எழுத்தேற்றம்வருகையால் அதுசேராது. ஆனல்''பல்லுலகியாவும்'' என்றால் எழுத்தேற்றம் வாராதோவென்னில்; (க)''உரைக்கின்றனனுமக்கியான்'' என்கிறவிடத்திற்போலவே ''பல்லுலகியாவும்'' என்கிறவிடத்தில் இகரமும் குற்றியலிகரமாய் வண்ணங்கெடாமைக்குக் கழிவுண்கையாலேஎழுத்தேற்றம்வாராது. நாட்டுதல்-ஸ்தாபித்தல்.

நாட்டிய நீசச்சமயங்கள் மாண்டன, நாரணனைக்
காட்டிய வேதம் களிப்புற்றது, தென்குருகை வள்ளல்
வாட்டமிலா வண்டமிழ் மறைவாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டியசீலத்து, இராமாநுசன் றன்னியல்வு கண்டே.

ஐம்பத்துநாலாம்பாட்டு. இப்படி எம்பெருமானார் யதார்த்த ஸ்தாபநம்பண்ணியருளின ஸ்வபாவத்தைக் கண்டு பாஹ்யஸமயங்களுக்கும் வேதத்துக்கும் திருவாய்மொழிக்குமுண்டான ஆகாரங்களை யருளிச்செய்கிறார்.

க்ஷுத்ரரான சேதநரோடே தம்பெருமையும் அவர்கள் சிறுமையும் பாராதே கலந்து பரிமாறி பூலோகத்திலே மேன்மேலும் திரட்டிக்கொண்ட சிலகுணத்தையுடையரான எம்பெருமானருடைய ஸ்வபாவத்தைக் கண்டு, ஆதித்யதர்சநத்தில் அந்தகாரம் நசித்து அம்புஜஜாதங்கள் முகமலருமாபோலே, ஸ்வயுக்திஸ்தாபிதங்களாய் வேதபாஹ்யங்களாகையாலே தண்ணிதான ஸமயங்கள் நசித்தன; பூர்வபாகம் ஆராதநஸ்வரூபத்தையும் உத்தரபாகம் ஆராத்யஸ்வரூபத்தையுஞ் சொல்லுகையாலே, (உ) ''वेदैश्च सर्वैरहमेव वेद्यः - வேதைஶ்சஸர்வைரஹமேவவேத்யஃ'' என்கிற உபயவிபூதியுக்தனை ஸர்வேஶ்வரனை ப்ரகாசிப்பித்த வேதமானது, நமக்கு இனியொருகுறையில்லையென்று (X) கர்வித்தது; ஸர்வப்ரகாரவிலக்ஷணமான திருநகரியைத் தமக்கு வாஸஸ்தாநமாக வுடையராய், பகவதநுபவபரீவாஹரூபமான ஸ்வோக்திகளை லோகத்துக்கு உபகரித்தருளின பரமோதாரரான ஆழ்வாரருளிச்செய்ததாய், பாஹ்யகுத்ருஷ்டிகளால் அவிசால்யமாகையாலே ஒருகுறையின்றிக்கேயிருப்பதாய், ஜ்ஞாநப்ரப்ருதி மோக்ஷாந்தமான ஸகலபலங்களையும்

(க) சுங. (உ) கீதை.

கொடுக்கும் ஔதார்யத்தையுடைத்தாயிருக்கிற த்ராவிடவேதமான திருவாய்மொழி ப்ராப்தைஸ்வர்யமாயிற்று.

களிப்புறுதல் - கர்வித்தல். வாட்டம்-ஸங்கோசம். ஈட்டுதல் - திரட்டுதல், இயல்வு - ஸ்வபாவம். ருச

கண்டவர் சிந்தை கவரும், கடிபொழில் தென்னரங்கன்
தொண்டர் குலாவு மிராமாநுசனைத், தொகையிறந்த
பண்டருவேதங்கள் பார்மேல் நிலவிடப் பார்த்தருளும்
கொண்டலைமேவித் தொழும், குடியா மெங்கள் கோக்குடியே.

ஐம்பத்தஞ்சாம்பாட்டு. எம்பெருமானார் ஸ்வபாவத்தைக்கண்டு வேதம்கர்வோத்தரமாயிற்றென்றார் கீழ்; இப்படி ஒருவர் அபேக்ஷியாதிருக்கத் தாமே ஸகல வேதங்களும் பூமியிலே நிஷ்கண்டகமாக நடக்கும்படிபண்ணின ஔதார்யத்திலே ஈடுபட்டு அவரையாஸ்ரயித்திருக்குங்குடி எங்களையாளஉரியகுடி யென்கிறாரிதில்.

(க)"అనన్తా వై వేదాః-அநந்தாவைவேதாஃ" என்கிறபடியே ஒரு தொகையில் * நில்லாதபடி அநந்தமாய் உதாத்தாதியான ஸ்வரங்களுக்கு ப்ரகாசகங்களாயிருக்கிற வேதங்களானவை பூமியிலே வர்த்திக்கும்படி பண்ணியருளின பரமோதாரராய், கண்டவர்கள் நெஞ்சை யபஹரியாநிற்பதாய் பரிமளத்தையுடைத்தான திருச்சோலைகளை யுடைத்தாய் தர்சநீயமான கோயிலிலே நித்யவாஸம் பண்ணுகிற பெரியபெருமாள் திருவடிகளுக்கு சேஷபூதரானவர்கள் அந்த ஸ்வபாவத்துக்குத்தோற்றுக் கொண்டாடும்படி யிருக்கிற எம்பெருமானாரை, தத்ஸ்வபாவத்திலே ஈடுபட்டு விஷயாந்தர விமுகராய் ஆஸ்ரயித்திருக்கும் குலம், தத்ஸம்பந்திகளே உத்தேஸ்ய ரென்றிருக்குமெங்களை ஆள உரியகுலமாயிருக்கும்.

எங்கள் கோக்குடியென்றது-எங்களுக்குக்கோவானகுடி யென்றபடி."கண்டவர் சிந்தைகவரும்"என்றவிதுபெரியபெருமாளுக்கு விசேஷணமாகவுமாம். கடி - மணம். குலாவுதல் - கொண்டாட்டம். நிலவுதல் - வர்த்தித்தல். "பண்டருவேதங்கள்" என்கிற விடத்தில், பண்டேயுள்ளதாய் அரிதாயிருந்துள்ள வேதங்களென்று வேதங்களினுடைய அநாதித்வத்தையும் அலப்யத்வத்தையும் சொல்லுகிறதானலோ வென்னில்; "பண்டையருவேதம்" என்று பாடமா

(க) * (பா) அடங்காத.

யிற்றாகில் அப்படி பொருள்சொல்லலாம்; பண்டு என்கிற சப்தம் பூர்வகாலத்துக்கு வாசகமாமித்தனை யல்லது பூர்வகாலீநமானத்துக்கு வாசகமாகாமையாலே அப்படி சொல்லப்போகாது. (௧)"பண்டைநான்மறை" (௨) "பண்டைக்குலம்" (௩) "பண்டையோமல்லோம்" என்றும், (௪) "பண்டுநூற்றுவர்" (௫) "பண்டுமின்றும்" (௬) "பண்டொருநாளாலினிலை வளர்ந்த" என்றும் இத்யாதிஸ்தலங்களிலே இந்த விபாகங்கண்டுகொள்வது. ௫௫

கோக்குல மன்னரை மூவெழுகால், ஒரு கூர்மழுவால்
போக்கிய தேவனைப் போற்றும் புனிதன், புவன மெங்கும்
ஆக்கிய கீர்த்தி யிராமாநுசனை யடைந்தபின்னென்
வாக்குரையாது, என்மனம் நினையாதினி மற்றொன்றையே.

ஐம்பத்தாறும்பாட்டு. "கொண்டலைமேவித்தொழூம்குடியாமெங்கள் கோக்குடி" என்று இவர் சொன்னவாறே, முன்பும் ஓரோ விஷயங்களில் நின்றால் இப்படியன்றோ நீர் சொல்லுவது, இதுவும் அப்படியன்றோ வென்ன; எம்பெருமானாரை ஆஶ்ரயித்த பின்பு என்வாங்மநஸ்ஸுக்கள் இனி வேறொரு விஷயமறியா தென்கிறார்.

ஐஶ்வர்யத்தாலே ராஜகுலத்தை ப்ராபிக்கை யன்றிக்கே க்ஷத்ரியகுலோத்பவரான ராஜாக்களை, (௭) "இருபத்தோர்கால் அரசுகளைகட்ட" என்கிறபடியே இருபத்தொருகால் அத்விதீயமாய்க் கூரியதாயிருக்கிற மழுவாலே நிரஸித்த விரோதி நிரஸநப்ரயுக்தமான ஔஜ்வல்யத்தையுடைய ஸர்வேஶ்வரனை அந்த குணஜ்ஞராய்க்கொண்டு ஏத்தாநிற்பாராய், ஸ்வஸம்பந்தத்தாலே அசுத்தரையும் சுத்தராக்கவல்ல பரமபாவநபூதராய், (௮) "இப்பார்முழுதும் போர்த்தான் புகழ்கொண்டு" என்கிறபடியே லோகமெங்கும் வ்யாபிக்கும்படிபண்ணின கீர்த்தியையுடைய எம்பெருமானாரை ஆஶ்ரயித்தபின்பு மேலுள்ளகாலம் வேறொருவிஷயத்தை என்னுடைய வாக்கானது கீர்த்தியாது; என்னுடைய மநஸ்ஸானது ஸ்மரியாது.

போற்றுதல்-புகழ்தல். புனிதன்-சுத்தன்-கரணங்களுக்கு இவ்விஷயத்தில் அநந்யார்ஹமாம்படி விளைந்த ப்ராவண்யத்தைக் கண்ட

(௧) திருமொழி - ௫ - ௭ - ௧. (௨)
(௩) பெருமாள்திரு - ௬ - ௭. (௪) ௬௭.
(௫) திருச்சந்த - ௨௨. (௬) பெரியாழ்வார்திரு - ௪ - ௫ - ௰.
(௭) திருவாய் - ௬ - ௨ - ௧௦. (௮) ௫௨.

ப்ரீத்யதிசயத்தாலே "என்வாக்கு, என்மனம்" என்று தனித்தனியே ஶ்லாகித்தருளிச்செய்கிறார். "அடைந்ததற்பின்வாக்குரையாது என் மனம் நினையாது" என்றும் பாடம்சொல்லுவர்கள். பரசுராமாவதாரம் அஹங்கார யுக்தஜீவனை அதிஷ்டித்து நிற்கையாலே முமுக்ஷுக்களுக்கநுபாஸ்யமன்றோ, "போக்கியதேவனைப்போற்றும் புனிதன்" என்பானென்னென்னில்; அதுக்குக்குறையில்லை; விரோதிநிரஸநம்பண்ணின உபகாரத்துக்குத்தோற்று ஸ்துதிக்கிறமாத்ரமொழிய ததுபாஸந மல்லாமையாலே. (க) "மன்னடங்க மழு வலங்கைக்கொண்ட விராமநம்பி" என்றும் (உ) "வென்றிமாமழு வேந்திமுன்மண்மிசை மன்னரை மூவெழுகால் கொன்றதேவா" என்றும் ஆழ்வார்களருளிச்செய்ததும் விரோதிநிரஸநஸ்வபாவத்துக்குத் தோற்றுத்துதித்த தித்தனையிறே. (ருசு)

மற்றொரு பேறு மதியாது, அரங்கன் மலரடிக்கா
ளுற்றவரே தனக்குற்றவராய்க் கொள்ளு முத்தமனை,
நற்றவர்போற்று மிராமாநுசனை யிந்நானிலத்தே
பெற்றனன், பெற்றபின் மற்றறியேனொரு பேதைமையே.

ஐம்பத்தேழாம்பாட்டு. "இனி - என்வாக்குரையாது, என்மனம்நினையாது" என்பானென், விபூதியிநுவாகையாலே அஜ்ஞாநம் வரிலோ வென்ன; எம்பெருமானாரை இந்தலோகத்திலே லபித்தபின்பு விவேகமின்றியே கண்டதொன்றை விரும்பக்கடவபேதைத் தனமொன்று மறியேனென்கிறார்.

வேறொரு ப்ரயோஜநங்களை ஒன்றாக நினையாதே பெரியபெருமாளுடைய நிரதிசய போக்யமான திருவடிகளுக்கு அடிமையாகையே பரமபுருஷார்த்தமென்று அதிலேயூன்றி யிருக்குமவர்களையே தமக்கு பந்துபூதராக அங்கீகரிக்கு முத்தமாதிகாரிகளாய், ஸுகரத்வஅவிளம்பபலப்ரதத்வ ஸ்வரூபாநுரூபத்வாதிகளாலே ஸர்வதபஸ்ஸுக்களிலும் வைத்துக்கொண்டு விலக்ஷணதபஸ்ஸான சரணாகதிதர்மத்திலே நிஷ்டரானவர்கள் தம்முடைய வைபவத்தையே சொல்லிப்புகழும்படியான எம்பெருமானாரை இந்த லோகத்திலே லபித்தேன்; லபித்ததற்குப் பின்பு இத்தையொழிய ப்ராப்தாப்ராப்த விவேகம் பண்ணாதே கண்டதொன்றிலே மேல்விழுகைக்குறுப்பான ஒரு அஜ்ஞாநங்கண்டிலேன்; ஆதலால் மேலும் உண்டாகக் கூடாதென்று கருத்து. (ருஎ)

(க) பெரியாழ் - திரு - ருி - ச - கூ. (உ) திருமொழி - ரு - ௩ - க.

பேதையர் வேதப்பொருளிதென் றுன்னிப், பிரமனன்றென்
றோதி மற்றெல்லா வுயிரு மஃதென்று, உயிர்கள் மெய்விட்
டாதிப்பரனோ டொன்றாமென்று சொல்லுமவ்வல்லலெல்லாம்
வாதில்வென்றான், எம்மிராமாநுசன் மெய்ம்மதிக்கடலே.

ஐம்பத்தெட்டாம்பாட்டு. கீழே பலவிடங்களிலும் எம்பெருமானார் பாஹ்யமத நிரஸநம்பண்ணின ஸ்வபாவத்தை அநுஸந்தித்து வி(ஃ)த்தரானார்; குத்ருஷ்டிநிரஸநம்பண்ணினபடியை அநுஸந்தித்து வி(ஃ)த்தராகிறாரிதில்.

வேதாப்ராமாண்யவாதிகளான பாஹ்யரைப்போலன்றிக்கே வேதத்தை ப்ரமாணமாக அங்கீகரித்துவைத்து ததர்த்ததர்சநத்தில் குத்ருஷ்டிகளாயிருக்கிற அஜ்ஞர், வேதத்தினுடைய அர்த்தம் இதுவென்று நிரூபித்து, ப்ரஹ்மமே விலக்ஷணமென்று வேதாந்தவாக்யங்களாலே ப்ரதிபாதித்து, தத்வ்யதிரிக்தஸமஸ்தஜீவர்களும் அந்த ப்ரஹ்மந்தானேயென்று இப்படி தத்வநிர்ணயத்தைப்பண்ணி மோக்ஷநிர்ணயம் பண்ணுகிறவளவிலும் ஜீவவர்க்கம் தேஹாத்யுபாதிவிநிர்முக்தமானவாறே காரணபூதனான ஸர்வஸ்மாத்பரனோடே ஏகீபவிக்குமென்று இப்படி சொல்லுகிற அந்த கோஷத்தையெல்லாம் தத்வஜ்ஞாநஸாகரமாய் நம்முடையநாதராயிருக்கிற எம்பெருமானார் லோகரக்ஷணார்த்தமாக வாதம்பண்ணி ஜயித்தருளினார். இப்படி செய்தருளுவதே! என்று கருத்து.

“ஆதிப்பரன்” என்றது-ஸ்வபக்ஷத்தாலே; அல்லாதவர்களிப்படிசொல்லார்களிறே. ப்ரஹ்மாம்சமான ஜீவவர்க்கம் தேஹாத்யுபாதிவிநிர்முக்தமானவாறே ப்ரஹ்மைக்யத்தை ப்ராபிக்குமென்றிறே அவர்கள்சொல்லுவது. அல்லல்-ஆரவாரம்; அதாவது-கோஷம்.

கடலளவாய திசை யெட்டினுள்ளும், கலியிருளே
மிடைதரு காலத்திராமாநுசன், மிக்கநான்மறையின்
சுடரொளியா லவ்விருளைத் துரந்திலனே லுயிரை
யுடையவன் நாரணனென்றறிவாரில்லை யுற்றுணர்ந்தே.

ஐம்பத்தொன்பதாம்பாட்டு. இவர் இப்படி வி(ஃ)த்தராகிற இத்தைக்கண்டவர்கள், இவர் இது செய்திலராகிலும் சேதநர் ப்ரமாணங்களைக் கொண்டு நிரூபித்து “ஈஶ்வரன் சேஷி” என்று அறியார்களோவென்ன; கலியுகப்ரயுக்தமான அஜ்ஞாநாந்தகாரத்தை எம்

பெருமானுர் போக்கிற்றிலராகில் ஆத்மாவுக்கு சேஷி ஈஸ்வரனே என்று நிரூபித்து ஒருவருமறிவாரில்லை யென்கிருர்.

சதுஸ்ஸாகரபர்யந்தமான ஸர்வதிக்குக்களிலும் கலிப்ரயுக்தமான அஜ்ஞாநரூபதமஸ்ஸே நெருங்கி வர்த்திக்கிற காலத்திலே எம்பெருமானுர், ஸர்வப்ரமாணேத்க்ருஷ்டமான சதுர்வேதத்தினுடைய நிரவதிக தேஜஸ்ஸாலே அந்த தமஸ்ஸை ஓட்டிற்றிலராகில் ஆத்மாவுக்கு சேஷியானவன், தன்னையொழிந்த தடங்கலும். தனக்கு ப்ரகாரமாகத் தான் ப்ரகாரியாயிருக்கையாலே நாராயண சப்தவாச்யனானவனென்று கொண்டு உற்று அநுஸந்தித்து அறியத்தக்கா ரில்லை.

மிடைதல் - நெருங்குதல். சுடரென்றும் ஒளியென்றும் பர்யாயமாய், மீமிசைச்சொல்லாய், மிக்க வொளியென்றபடி. துரத்தல் - ஓட்டுதல். ௫௯

உணர்ந்தமெய்ஞ் ஞானியர் யோகந்தொறும், திருவாய் மொழியின்
மணந்தரு மின்னிசை மன்னுமிடந்தொறும், மாமலராள்
புணர்ந்த பொன் மார்பன் பொருந்தும் பதிதொறும் புக்கு நிற்கும்
குணந்திகழ் கொண்டல், இராமாநுசனெங்குலக்கொழுந்தே.

அறுபதாம்பாட்டு. இப்படி எம்பெருமானுருடைய ஜ்ஞாநவைபவத்தை இவரருளிச்செய்யக் கேட்டவர்கள், அவர்தம்முடைய பக்தி வைபவமிருக்கும்படி யென்னென்ன; பகவத்பாகவதவிஷயங்களிலும் ததுபய வைபவ ப்ரதிபாதகமான திருவாய்மொழியிலும்அவர்க்குண்டான ப்ரேமமிருக்கும்படியையருளிச்செய்கிருர்.

ஆத்மகுணௌஜ்வல்யயுக்தராய்,ஆத்மகுணங்கள் தன்னை ஸர்வவிஷயமாக உபகரித்தருளும் பரமோதாரராய், எங்கள் குலத்துக்குத் தலைவரான எம்பெருமானுர், ஜ்ஞாதவ்யார்த்தங்களை யடங்கவறிந்திருக்கும் யதாஜ்ஞாநயுக்தரானவர்கள் கூட்டரவுதோறும், திருவாய்மொழியினுடைய பரிமளிதமாய் விலக்ஷணமான இசைநிரந்தரமாக நடக்கும் ஸ்த்தலங்கள்தோறும், பெரியபிராட்டியாராலே நித்யவாஸம்பண்ணப்பட்ட அழகிய திருமார்வையுடையவன் உகந்தருளிவர்த்திக்கும் திருப்பதிகள்தோறும், அவ்வவற்றை யநுபவிக்கையிலுண்டான ஆசையாலே புக்குஅவற்றிலே யாழங்கால்பட்டு நில்லாநிற்பர். இது அவருடைய பக்திவைபவமிருக்கும்படி யென்று கருத்து

அன்றிக்கே, எம்பெருமானாருடைய ஜ்ஞாந வைபவத்தைப் பேசினவநந்தரம் அவருடைய பக்திவைபவத்தைத் தாமே யநுஸந்தித்து, ஏவம்பூதகுணோஜ்வலராய் இந்த ப்ரேமத்தை எல்லார்க்குமுபகரிக்கும் பரமோதாரரான எம்பெருமானார் எம் குலக்கொழுந்தென்கிறாராகவுமாம். யோகம் - கூட்டரவு. இத்தால் கூட்டத்தைச் சொன்னபடி. கொழுந்து - தலை. அதவா, எம்குலக்கொழுந்தென்றது- எங்கள்குலம் வேராய் - தாம் கொழுந்தாய்க்கொண்டு, வேரிலே வெக்கைதட்டினால் கொழுந்து முற்பட வாடுமாபோலே இக்குலந்துக்கு ஒரு தீங்குவரில் முற்படத் தம் முகம் வாடியிருக்குமவரென்றுமாம். இசை மணம்தருகையாவது - செவ்விப்பாட்டையுடைத்தாயிருக்கை. சூ௦

கொழுந்துவிட் டோடிப்படரும் வெங்கோள் வினையால்,நிரயத்
தழுந்தியிட்டேனை வந்தாட்கொண்ட பின்னும், அருமுனிவர்
தொழுந்தவத்தோனெம்மிராமாநுசன்றன்புகழ் சுடர்மிக்
கெழுந்தது, அத்தால் நல்லதிசயங்கண்ட திருநிலமே.

அறுபத்தோராம்பாட்டு."குணந்திகழ்கொண்டல்" என்று இவருடைய குணத்தை ஶ்லாகித்தீர், இவர் தம்முடைய குணவைபவமிருக்கும்படி யென்னென்ன;அதிருக்கும் படியையருளிச்செய்கிறார்.

(க) "స మహాత్మా సుదుర్లభః-ஸமஹாத்மாஸுதுர்லப:" என்கிறபடியே எம்பெருமானுக்கும் பெறுதற்கரியவர்களாய், (க) "వాసుదేవస్సర్వమ్- வாஸுதேவஸ்ஸர்வம்" என்கிறபடியே அவனே நமக்கு ஸகலமுமென்று மநநம்பண்ணிக் கொண்டிருக்குமவர்கள் தம் திருவடிகளிலேவந்து வணங்கும்படி யிருப்பாராய், ப்ரபத்தியாகிற மஹாதபஸ்ஸையுடையராய், எனக்கு ஸ்வாமியான எம்பெருமானாருடைய கல்யாணகுணங்கள் மேன்மேலுந் தலைப்பெற்று சீக்ரகதியாய்க்கொண்டு விஸ்த்ருதமாகாநிற்பதாய், க்ரூரமாய் ப்ரபலமாயிருந்துள்ள கர்மங்களாலே (உ) "மற்றைநரகம்" என்னும்படி (உ) * வானுயரின்பத்துக் கெதிர்த்தட்டாய், அநந்தக்லேசபாஜநமான ஸம்ஸாரத்திலே நிமக்நனாய் விட்டவென்னை நான்கிடக்கிற ஸ்த்தலத்திலே வந்து அடிமையாக்கிக் கொண்டபின்பும் அவ்வளவில்பர்யவஸியாதே என்னை அங்கீகரிக்கையால் வந்த நிரவதிக தேஜஸ்ஸோடே

(க) கீதை - எ - கக. (உ) திருவாய் - அ - க - கூ.

இன்னமும் இப்படி நமக்கு விஷயீகரிக்கலாவாராரோவென்று மாத்ருசரைத்தேடிக் கிளர்ந்தது; அத்தாலே மஹாப்ருதிவியானது நல்லதோராஸ்சர்யம் கண்டது. இது எம்பெருமானாருடைய குணவைபவமிருக்கும்படியென்று கருத்து.

அன்றிக்கே, "இராமாநுசன்றன்புகழ் சுடர்மிக் கெழுந்தது" என்றதுக்கு-பாபிஷ்டனான வென்னை அடிமைகொண்ட பின்பும், தேஜஸ்ஸூ குன்றுதிருக்கிற மாத்ரமன்றிக்கே நிரதிசய தேஜஸ்ஸை யுடைத்தாய்த் தோற்றிற்றென்று பொருளாகவுமாம். அப்போதைக்கு, எழுதல்-தோற்றுதல். "இராமாநுசன் தொல்புகழ்" என்றுபாடமாகில், தொன்மை- பழமையாகையாலே, ஸ்வரூபாநுபந்தியாய்ப் பழையதாய்ப்போருகிறகுணங்கள் இப்படிசெய்ததென்கை. கொழுந்துவிடுகையாவது-வ(ர்)த்தித்துச்செல்லுகை. வெம்மை-க்ரௌர்யம். கோள்-மிடுக்கு. சுக

இருந்தே னிருவினைப்பாசங்கழற்றி, இன்றியானிறையும்
வருந்தேனினி யெம்மிராமாநுசன், மன்னுமா மலர்த்தாள்
பொருந்தாநிலையுடைப்புன்மையினோர்க்கொன்றும் நன்மைசெ
பெருந்தேவரைப் பரவும்,பெரியோர்தங்கழல்பிடித்தே. [ய்யாப்

அறுபத்திரண்டாம்பாட்டு. தம்முடைய கர்மஸம்பந்தமறப்பெறுகையால் வந்தகார்த்தார்த்யத்தை யருளிச்செய்கிறார்.

நமக்கு நாதரான எம்பெருமானாருடைய பரஸ்பரம் பொருந்தி, பரமபூஜ்யமாய் பரமபோக்யமாயிருந்துள்ள திருவடிகளில்சேராத ஸ்வபாவத்தையுடையரான துர்மாநிகளுக்கு ஏகதேசமும் அநுகூல வ்ருத்திபண்ணாத ஸஹிஷ்ணுவான ஸ்ரீவைஷ்ணவர்களை, அவர்கள் ஸ்வபாவத்துக்குத் தோற்று ஸ்தோத்ரம்பண்ணுகின்றுள்ள மஹாப்ரபாவரானவர்களுடைய திருவடிகளைப்பற்றி, இன்று புண்யபாபரூபத்தாலே உபயவிதமாயிருந்துள்ள கர்மபாசவிநிர்முக்தனாய், க்ருதக்ருத்யனாய் நிர்ப்பரனா யிருந்தேன்; இப்படி யிருந்த நான் இனி அத்யல்பமும் துக்கத்திலந்வயியேன். கர்மம்கிடக்கிலிறே துக்கம் வருவதென்று கருத்து.

அதவா, "பொருந்தா" இத்யாதிக்கு-எம்பெருமானார் திருவடிகளில் சேரோம் என்னும் துர்மாநிகளுக்கு ஆயிரம்பண்ணைபல் காட்டியும் ஒருநன்மையுஞ் செய்யோமென்றிருக்கும் பரதேவதை

யான பெரியபெருமாளை, அந்த ஸ்வபாவத்திலே தோற்று ஸ்தோத்ரங்களைச்செய்த (க)*மொழியைக்கடக்கும் பெரும்புகழானான கூரத்தாழ்வான் திருவடிகளைப்பற்றி "இன்று-இருவினைப்பாசம் கழற்றி-இருந்தேன்" என்று இங்ஙனேயோஜிக்கவுமாம். "பெரும்தேவனை" என்றும் பாடஞ்சொல்லுவர். "புன்மையினோர்க் கென்றும் நன்மைசெய்யா" என்று பாடமானபோது, ஒருகாலத்திலும் ஆநுகூல்யம்பண்ணாதவென்று பொருளாகக்கடவது. புன்மையினோரென்றது - புன்மையையுடையோரென்றபடி. புன்மை - பொல்லாங்கு. இன்றியானென்கிற விடத்தில், அகரத்தின்மேலேறின இகரம் குற்றிய லிகரமாகையாலே (உ) "உமக்கியான்" என்கிறவிடத்தைப் போலே வண்ணங்கெடாமைக்குக் கழித்துப் பதினேழெழுத்தாக எண்ணக்கடவது. கூஉ

பிடியைத் தொடரும் களிறென்ன, யானுன் பிறங்கியசீர்
அடியைத் தொடரும் படி நல்க வேண்டும், அறுசமயச்
செடியைத் தொடரும் மருள் செறிந்தோர் சிதைந்தோடவந்
படியைத் தொடரும், இராமாநுசா மிக்க பண்டிதனே. [திப்

அறுபத்துமூன்றாம்பாட்டு. அநிஷ்டமான கர்ம ஸம்பந்தம்கழிந்தபடி சொன்னார் கீழ்; இஷ்டமான கைங்கர்யத்துக்கு அபேக்ஷிதமான தேவரீர் திருவடிகளில் ப்ராவண்யாதிசயத்தை தேவரீர் தாமே தந்தருளவேணுமென்கிறார்.

தூறுமண்டிக்கிடக்கிற பாஹ்யஷட்ஸமயங்களை அநுவிதாநம் பண்ணுகைக்குறுப்பான அறிவுகேடு குடிகொண்டவர்கள் பக்நராய் வெருவியோடும்படியாக வந்து (௩)"அவர்பின் படருங்குணன்"என்கிறபடியே, இந்த விபூதியிலுள்ளாரை விஷயீகரிக்கைக் கவகாசம் பார்த்துத் துடர்ந்து திரியுமவராய், வஸ்துஸ்வபாவங்களறிந்து கார்யஞ்செய்கைக் குறுப்பாயிருந்துள்ள நிரவதிகமான ஜ்ஞாத்ருத்வத்தையுடையவரே! பிடியினளவில் ப்ராவண்யாதிசயத்தாலே ஒன்றாலும் நிவர்த்திப்பிக்கவொண்ணாதபடி அத்தையே பின்பற்றித் திரியாநின்றுள்ள களிறுபோலே நானும் தேவரீருடைய ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்யாதி குணங்களெல்லாம் ப்ரகாசித்திருந்துள்ள திருவடிகளைப் பின்தொடரும் ஸ்வபாவத்தைத் தந்தருள வேணும்.

(க) எ. (உ) சா௰. (௩) ௩௬.

"களிறென்ன" என்றது, களிறென்று சொல்லலாம்படியென்கை. இத்தால், களிறுபோலே என்றபடி. "களிறன்ன" என்று பாடமானாலோவென்னில், அப்போது பிடியைத் தொடருங்களிற்றை யொத்தயானென்று பூதார்த்தவாசியாய், யானென்கிற வதிகாரிக்கு விசேஷணமாமித்தனையல்லது, "அடியைத்தொடரும்படி நல்கவேண்டும்" என்கிற ப்ராப்யப்ராவண்ய ப்ரார்த்தனைக்கு த்ருஷ்டாந்தமாக மாட்டாமையாலே அது சேராது. பிறங்குதல்-ப்ரகாசம். பிறங்கிய சீரடியென்றது - மிகவுமழகியதான திருவடிகளென்னவுமாம். அப்போது பிறங்குதல் - மிகுதி. சீரென்று - அழகு. செடி - தூறு. மருள்செறிகையாவது-அறிவுகேடு திரளுகை. அடியைத் தொடரும்படியென்கிற விடத்தில், படியென்று-ஸ்வபாவம். நல்குதல்-கொடுத்தல். அடியைத் தொடரும்படியாகச் செய்யவேணுமென்னவுமாம்.

பண்டருமாறன் பசுந்தமிழ், ஆனந்தம் பாய் மதமாய்
விண்டிட எங்க ளிராமாநுசமுனி வேழம், மெய்ம்மை
கொண்டநல் வேதக் கொழுந்தண்ட மேந்திக் குவலயத்தே
மண்டிவந் தேன்றது, வாதியர்கா ளுங்கள் வாழ்வற்றதே.

அறுபத்துநாலாம்பாட்டு. "அறுசமயச் செடியைத் தொடரும் மருள் செறிந்தோர் சிதைந்தோடவந்து" என்று பாஹ்யமத நிரஸநார்த்தமாக எம்பெருமானாரெழுந்தருளின ப்ரகாரத்தை யநுஸந்தித்தார் கீழ்ப்பாட்டில்; அந்த ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே பாஹ்ய குத்ருஷ்டிகளாகிற வாதிகளைப் பார்த்து, இராமாநுசமுனியாகிற யானை உங்களை நாடிக்கொண்டு பூமியிலேவந்தெதிர்ந்தது, உங்கள் வாழ்வு இனிப் போயிற்றென்கிறார் இதில்.

எங்களுக்கு விதேயமாயிருக்கும் இராமாநுச முனியாகிற யானை, (க) "பண்ணார்பாடல்" என்னும்படி ஆழ்வார் பண்ணிலே உபகரித்தருளின செவ்வித்தமிழான திருவாய்மொழியால் விளைந்த ஆநந்தமானது ஒழுகாநின்றுள்ள மதமாய்க்கொண்டு விஸ்த்ருதமாக (உ) "வேதநூலோதுகின்றதுண்மை" என்னும்படி யதாபூதவாதித்வத்தால்வந்தமெய்ப்பாட்டையுடைய விலக்ஷணவேதமாகிற எழிற்றண்டையுமேந்திக்கொண்டு, நீங்கள் தன்னரசாக நடத்துகிற பூமியிலே ஒருவர்க்கும் நேர்நிற்கவொண்ணாதபடி தள்ளிக்கொண்டுவந்து

(க) திருவாய் - கo - எ - ௯. (உ)

உங்கள்மேலேயெதிர்ந்தது; வாதிகளாயுள்ளீர்! சிஷ்யர்களும் ப்ரசிஷ்யர்களுமாய்ப் பல்கிப் பணைத்திருந்த உங்களுடைய ஸம்பத்து முடிந்ததே. லோகம் பிழைத்ததேயென்று கருத்து.

ஏகாரம் ஈற்றசையாய், உங்கள் வாழ்வு முடிந்தது என்று தலைக்கட்டவுமாம். "பண்டருமாறன் பசுந்தமிழ்" என்றதுக்கு, பண்டேயுள்ளதாய்ப் பெறுதற்கு அரியதாயிருந்துள்ள மாறன் பசுந்தமிழ் என்று பொருளாகாதோவென்னில்; அது வொண்ணாது; பண்டு என்கிற சொல்லு பூர்வகால வாசி யித்தனையல்லது பூர்வகாலீந வஸ்துவாசியல்லாததினாலே. பசுமை - செவ்வி. விள்ளுதல் - விரிதலாய், விஸ்த்ருதியைச் சொல்லுகிறது. மண்டுதல் - தள்ளுதல், விரிதலுமாம்.

கூச

வாழ்வற்றது தொல்லைவாதியர்க்கு, என்றும் மறையவர்தம்
தாழ்வற்றது தவம் தாரணிபெற்றது, தத்துவநூல்
கூழற்றது குற்றமெல்லாம் பதித்த குணத்தினர்க்கந்
நாழற்றது, நம்மிராமாநுசன்தந்த ஞானத்திலே.

அறுபத்தஞ்சாம்பாட்டு. இப்படி யெழுந்தருளின எம்பெருமானார் பாஹ்யகுத்ருஷ்டி நிரஸநார்த்தமாக உபகரித்தருளின ஜ்ஞாநத்தால் பலிதங்களை யநுஸந்தித்து ப்ரீதராகிறார்.

நம்முடைய நாதரான எம்பெருமானார் உபகரித்தருளின ஜ்ஞாநத்தாலே, பயிருள்ளவன்றே களையுமுண்டாமாபோலே பழையதாய்ப் போருகிற வாதங்களையுடைய பாஹ்யகுத்ருஷ்டிகளுக்கு வாழ்வு போயிற்று; களை * மாய்ந்தவாறே பயிர் தலைப் பெறுமாபோலே அவை போகையாலே, ஸர்வகாலத்திலும் வைதிகரானவர்கள் தங்களுடைய குறைவு போயிற்று; (உ) "ஏத்தவல்லார் திரிதலால்தவமுடைத்தித் தரணிதானே" என்கிறபடியே பாஹ்யர் நிரஸ்தராய் வைதிகர் தலைப்பெற்று பாகவதஸஞ்சாரம் மிகுகையாலே பூமி பாக்யத்தை உடைத்தாயிற்று. தத்வபரமான சாஸ்த்ரங்களில் ஸம்சயங்களெல்லாம் தீர்ந்தது; ஸர்வதோஷ லக்ஷமான ஸ்வபாவத்தையுடையவர்களுக்கு அக்குற்றந் தீர்ந்தது. இதொரு ஜ்ஞாந வைபவமிருக்கும்படியே! என்று கருத்து.

* (பா) போனவாறே. (உ) பெருமாள்திரு-௯௦-ரு.

"ஞானத்திலே" என்றது - த்ருதீயார்த்தே ஸப்தமி. தாழ்வு - குறைவு. தவம்-பாக்யம். சூழ்ப்பு - ஸம்சயம். நாழ் - குற்றம். ௬௫

ஞானம்கனிந்த நலங்கொண்டு, நாடொறும் நைபவர்க்கு
வானம்கொடுப்பது மாதவன், வல்வினையேன் மனத்தில்
ஈனம்கடிந்த விராமாநுசன் றன்னையெய்தினர்க்கத்
தானங்கொடுப்பது, தன்தகவென்னும் சரண்கொடுத்தே.

அறுபத்தாரும்பாட்டு. "நம்மிராமாநுசன் தந்த ஞானத்திலே" என்று எம்பெருமானு ருபகரித்தருளின ஜ்ஞாநவைபவத்தை யருளிச்செய்தார் கீழ்; இதில், அவருடைய மோக்ஷப்ரதாந வைபவத்தை யருளிச்செய்கிறார்.

ஶ்ரியஃபதியான ஸர்வேஶ்வரன் மோக்ஷங்கொடுப்பது, ஜ்ஞாந விபாகரூபமான ப்ரேமத்தையுடையராய், அந்த ப்ரேமாநுரூபமாகத் தன்னைப்ராபித்து அநுபவித்து அவ்வநுபவஜநித ப்ரீதிகாரிதகைங் கர்யஞ் செய்வது எப்போதோ வென்கிற ப்ராப்யத்வரையாலே (க) *ஒருபகலாயிர மூழியாய்க்கொண்டு நாடோறும் சிதிலராமவர்க ளுக்கு; மஹாபாபியான வென்னுடைய மநஸ்ஸில் தோஷத்தைப் போ க்கியருளின எம்பெருமானார் தம்மை யடைந்தவர்களுக்கு "வானம்" என்று சொன்ன அந்த ஸ்த்தாநங்கொடுத்தருளுவது, தம்முடைய க்ருபையென்று சொல்லப்படுகிற ஸாதநத்தை அவர்களுக்குக் கைம் முதலாகக் கொடுத்து. இதொரு மோக்ஷப்தாநமிருக்கும்படியே! என்று கருத்து.

"ஞானங்கனிந்தநலம்" என்றது - ஜ்ஞாநத்தினுடைய பக்வ தசையான ப்ரேமமென்றபடி. நலம் - ஸ்நேஹம். ௬௬

சரணமடைந்த தருமனுக்காப், பண்டுநூற்றுவரை
மரணமடைவித்த மாயவன்றன்னை, வணங்கவைத்த
கரணமிவை யுமக்கன்றென்றிராமாநுசனுயிர்கட்
கரணங் கமைத்திலனேல், அரணார்மற்றிவ்வாருயிர்க்கே.

அறுபத்தேழாம்பாட்டு. எம்பெருமானாருடைய ஜ்ஞாநப்ரதத்வ மோக்ஷ ப்ரதத்வங்களையருளிச்செய்து நின்றார் கீழ்; பகவத்ஸமாஶ் ரயணத்துக் குறுப்பான கரணங்களைக்கொண்டு வ்யபிசரியாதபடி எம்பெருமானார் ஸ்வோபதேசத்தாலே நியமித்து ரக்ஷித்திலராகில்

(க) திருவாய் - ௧௦ - ௩ - ௧.

இவ்வாத்மாவுக்கு வேறுரக்ஷகராரென்று ஸ்வகதமாக வநுஸந்தித்து விஸ்(ஷ்)த்தராகிறாரிதில்.

தான்கொடுத்த கரணங்களைக்கொண்டு (க) "నన మేయమ్-நநமேயம்" என்னாதே திருவடிகளை ஆஶ்ரயித்த தர்மபுத்ரனுக்காக முற்காலத்திலே "தன்னைவணங்கோம்" என்று துர்மாநிகளாய் ஆஶ்ரிதரை நலிந்த துர்யோதநாதிகள் நூற்றுவரையும் மரணத்தை ப்ராபிப்பித்த ஆஶ்சர்யசக்தி யுக்தனான ஸர்வேஶ்வரன், தன்னை ஆஶ்ரயிக்கைக்கு உபகரணங்களாக வைத்த கரணங்களிவை, உங்களுக்கு சேஷமாயுள்ள தொன்றன்று; என்று இப்படி அந்வயவ்யதிரேகங்களிரண்டாலும் கரணங்களினுடைய பகவதநந்யார்ஹத்வத்தைப்ரகாசிப்பித்து, கரணங்களைக்கொண்டு வ்யபிசரிக்கிற ஸமயத்திலே எம்பெருமானார் ஆத்மாக்களுக்கு ரக்ஷையைக் கற்பித்திலராகில் இவ்வாத்மாவுக்கு வேறுரக்ஷகராவார் ஆர்? ஒருவருமில்லையென்று கருத்து.

அரண் - ரக்ஷை. அமைத்தல் - சமைத்தல். "மாயவன் றன்னை வணங்கவைத்த" என்று-ஸமஸ்தபதமாக யோஜிக்கவுமாம். ௬௭

ஆரெனக்கின்று நிகர்சொல்லில், மாயனன்றைவர் தெய்வத்
தேரினில் செப்பிய கீதையின் செம்மைப், பொருள்தெரியப்
பாரினில் சொன்ன விராமாநுசனைப் பணியும்நல்லோர்
சீரினிற் சென்று பணிந்தது, என்னாவியும் சிந்தையுமே.

அறுபத்தெட்டாம்பாட்டு. இப்படி பகவத்ஸமாஶ்ரயணத்துக்கு மடைத்தேற்றலாயும், ஆஶ்ரயித்தார்களாகில் அவ்வளவிலே சுவறிப் போரக்கடவதான வித்தேசத்திலே என்னாத்மாவும் மநஸ்ஸும், எம்பெருமானாரை ஆஶ்ரயித்திருக்குமவர்கள் குணங்களிலே சென்று ப்ரவணமாயிற்று, ஆனபின்பு, எனக்கு ஸத்ருசரில்லை என்கிறார்.

(௨) "పార్థం రథినమాత్మానం చ సారథిం సర్వలోకసాక్షికం చ కార-பார்த்தம் ரதிநம் ஆத்மாநம் ச ஸாரதிம் ஸர்வலோகஸாக்ஷிகம் சகார" என்கிறபடியே ஸாரத்யவ்ருத்தாந்தத்தாலே தன்னுடைய ஆஶ்ரிதபாரதந்த்ர்யத்தை ஜகத்ப்ரஸித்தமாக்கின ஆஶ்சர்யபூதன் (௩)

(க) ராமாய - யுத்த - ௩௬ - ௧௧.

(௨) (௩) கீதை - ௧ - ௨௭.

"విసృజ్యసశరంచాపంశోకసంవిగ్నమానసః- விஸ்ருஜ்யஸசரம் சாபம் சோகஸம்விக்நமாநஸ:" என்கிறபடியே (ரதி) ரதியானவர்ஜுநன் கையில் வில்லையும் பொகட்டு சோகாவிஷ்டனாய் (க) "శిష్యస్తేహం శాధిమాంత్వాంప్రపన్నమ్-சிஷ்யஸ்தேஹம் சாதிமாம் த்வாம் ப்ரபந்நம்" என்கிற அக்காலத்திலே பாண்டவர்களுடையதாய், தன்னுடைய திருவடிகளோட்டை ஸ்பர்சத்தாலே திவ்யமாயிருந்துள்ள திருத்தேர்த்தட்டிலே நின்று அருளிச்செய்த ஸ்ரீகீதையினுடைய ஸ்வரஸமான அர்த்தத்தை ஸுவ்யக்தமாம்படி தேரிலே அர்ஜுநைக விஷயமாக அவனருளிச்செய்தாற்போலன்றிக்கே, பாரிலே ஸர்வவிஷயமாக அருளிச்செய்த எம்பெருமானாரை ஆஶ்ரயித்திருக்கும் விலக்ஷணரானவர்களுடைய கல்யாண குணங்களிலே இவ்வருகு ஒன்றில் கால்தாழாதே சென்று என்னாத்மாவும் மநஸ்ஸும். "அத்தைவிடில் முடியும்" என்னும்படி ப்ரவணமாய்விட்டது. சொல்லுமளவில் யார்தான் எனக்கு இன்று ஸத்ருசர். செம்மை - செவ்வை. பணிதல் - தாழ்தல். சிந்தை - ஹ்ருதயம். சுஅ

சிந்தையினோடு கரணங்கள், யாவும் சிதைந்து முன்னாள்
அந்தமுற் றாழ்ந்தது கண்டு, அவை யென்றனக்கு அன்றருளால்
தந்தவரங்கனும் தன்சரண் தந்திலன் தானது தந்து,
எந்தை யிராமாநுசன் வந்தெடுத்தன னின்றென்னையே.

அறுபத்தொன்பதாம்பாட்டு. எம்பெருமானார் திருவடிகளில் ஸம்பந்தமுடையவர்கள் விஷயத்தில் தமக்குண்டான அதிப்ராவண்யத்தை அநுஸந்தித்து(த்ரு)த்ருப்தராகாநிற்கச்செய்தே, ஈஶ்வரனிலுங்காட்டில் இவர் ஸ்வவிஷயத்தில் பண்ணின உபகாரம் ஸ்ம்ருதி விஷயமாக, அத்தை யநுஸந்தித்து வி (ஸ்ம) த்தராகிறார்.

ஸ்ருஷ்டே: பூர்வகாலத்தில் ப்ரதாந கரணமான மநஸ்ஸோடேகூட ஸர்வகரணங்களும் அழிந்து நாசத்தையடைந்து அசித்விசேஷிதமாம்படி தரைப்பட்டபடி கண்டு, அந்தக் கரணங்களை அசித்கல்பனாய்க் கிடக்கிற வெனக்கு அக்காலத்திலே, (உ) "కరణకళేబరైర్ఘటయితుందయమానమనాః-கரணகளேபரைர் கடயிதும் தயமாந

(ரு) கீதை - உ - எ.

(க) ஸ்ரீரங்கராஜஸ்தவ - உ - சக.

மநா:'' என்கிறபடியே கேவலக்ருபையாலே உபகரித்தருளின பெரிய பெருமாளும், கரணங்களைத் தந்தவோபாதி தம்முடைய சரணங்களைத் தந்திலர்; எம்பெருமானார் எனக்கு ஜநகராய்க் கொண்டுவந்து (க) "அரங்கன் செய்யதாளிணை யோடார்த்தான்'' என்னும்படி தாம் அந்தத்திருவடிகளைத் தந்தருளி ஸம்ஸாரார்ணவ மக்நனனவென்னை இன்று எடுத்தருளினார். இதுவொரு உபகாரமே! என்று கருத்து. ௬௯

என்னையும் பார்த்தென்னியல் வையும்பார்த்து, எண்ணில் பல்கு[ணத்த
உன்னையும்பார்க்கிலருள் செய்வதே நலம், அன்றியென்பால்
பின்னையும் பார்க்கில் நலமுளதே யுன்பெருங் கருணை
தன்னை யென்பார்ப்பர், இராமாநுசா வுன்னைச் சார்ந்தவரே.

எழுபதாம்பாட்டு. எம்பெருமானார் செய்தருளின உபகாரத்தை யநுஸந்தித்து வி(ஹ்)த்தரானார்கீழ்; அநந்தரம்செய்தஅம்சத்திற்காட்டிலும் செய்யவேண்டுமம்சம் அதிசயித்திருக்கிறபடியை யநுஸந்தித்து அவருடைய திருமுகத்தைப் பார்த்து ஸ்வாபேக்ஷிதத்தை விண்ணப்பஞ்செய்கிறார்.

அநாதிகாலம் ஸம்ஸாரத்திலே சப்தாதி விஷயங்களிலே பழகி (உ) "రామానుజార్యవిషయీకృతమప్యహోమాం భూయః ప్రధర్షయతి వైషయికో విమోహః - ராமாநுஜார்யவிஷயீக்ருத மப்யஹோமாம் பூய:ப்ரதர்ஷயதிவைஷயிகோவிமோஹ:'' என்கிறபடியே தேவரீரங்கீகரித்தருளினபின்பும் துர்வாஸநாப்ராபல்யத்தாலே விபரீதருசிபூயிஷ்டனாயிருக்கிற என்னையும் பார்த்தருளி, அந்த ருச்யநுகுணமாக விஷயாந்தரங்களிலே மண்டித்திரிகிற என்னுடைய துர்வ்ருத்தத்தையும் பார்த்தருளி, தோஷமே பச்சையாக அங்கீகரிக்கைக்கீடாயிருந்துள்ள அஸங்க்யேயமான அநேககுணங்களையுடைய தேவரீர்தம்மையும் பார்த்தருளில், இதுக்குமுன்பு செய்த வோபாதி மேலுண்டான அம்சத்துக்கும் நிர்ஹேதுகமாக க்ருபைபண்ணியருளுகையே நல்லது; இதொழிய மீளவுமாராயுமளவில் என் பக்கல் ஒரு நன்மை யுண்டோ? நன்மையுண்டாயே கார்யம் செய்யவேணுமென்னில், தேவரீர் திருவடிகளை ஆஸ்ரயித்திருப்பார், தேவரீருடைய நிரவதிக க்ருபைதன்னை என்னாகக்காண்பர்கள்? குறையக்காணார்களோ? என்று கருத்து.

(உ) ௫௨. (க) வைகு - ஸ்த - ௮௮.

குறையக்காண்கையாவது-இதுவும் இத்தனையோவென்றுகினைக்கை. இயல்வு - வ்ருத்தம். என்பாலென்றது-என்னிடத்தென்றபடி.

சார்ந்ததென் சிந்தை யுன்தாளிணைக் கீழ், அன்புதான் மிகவும்
கூர்ந்தது அத்தாமரைதாள்களுக்கு, உன்றன் குணங்களுக்கே
தீர்ந்ததென் செய்கை முன்செய்வினை நீசெய்வினையதனால்
பேர்ந்தது, வண்மை யிராமாநுசா வெம்பெருந்தகையே.

எழுபத்தோராம்பாட்டு. இப்படி இவர் விண்ணப்பம்செய்தவாறே எம்பெருமானாரும் "ஒக்குமிறே" என்று இசைந்து தம்முடைய விசேஷகடாக்ஷத்தாலே இவருடைய ஜ்ஞாநத்தை ஸ்வவிஷயத்திலே யூன்றும்படி விசதமாக்கியருள; தாம் லபித்த அம்சங்களையநுஸந்தித்து க்ருதார்த்தராகிறார்.

கொள்ளுகிறவன் சிறுமையும் கொடுக்கிறதின் சீர்மையும் பாராதே கொடுக்கும் ஔதார்யகுணத்தையுடையராய், அந்த ஔதார்யத்தாலே என்னை யெழுதிக்கொண்ட பெருமையையுடையவரே! என்னுடைய (க) * நின்றவாகில்லாத நெஞ்சானது வகுத்தசேஷியான தேவரீருடைய பரஸ்பரஸத்ருசமான திருவடிகளின் கீழே (உ) * நிழலுமடிதாறும்போலே பிரிக்கவொண்ணாதபடி பொருந்திவிட்டது; அந்தப் பரமபோக்யமான திருவடிகளுக்கு ஸ்நேஹமானதுதான் நிரவதிகமாம்படி மிக்கது; என்னுடைய வ்ருத்தி தேவரீருடைய குணாநுபவஜநித ப்ரீதிகாரிதை யாகையாலே அந்தக் குணங்களுக்கே அற்றுத்தீர்ந்தது; பூர்வக்ருதகர்மம், அதுக்கு நிவர்த்தகரான தேவரீர் செய்த அந்தச் செயலாலே மலைபேர்ந்தாற்போலே விட்டு நீங்கிற்று; ஆனபின்பு எனக்கொரு குறையுமில்லையென்று கருத்து.

"நீசெய்வினை" என்றது-அவர்செய்தருளின விசேஷகடாக்ஷத்தை. "நீசெய்வனவதனால்" என்றுபாடமானபோது, மத்கர்மநிவ்ருத்யர்த்தமாக தேவரீர்செய்த க்ருஷிகளாலே யென்கை. கூர்தல்-மிகுதி.

கைத்தனன் தீய சமயக் கலகரைக், காசினிக்கே
உய்த்தனன் தூய மறைநெறி தன்னை, என்றுன்னியுள்ளம்
நெய்த்த வன்போடிருந்தேத்தும் நிறைபுகழோருடனே
வைத்தன னென்னை, இராமாநுசன் மிக்க வண்மைசெய்தே.

எழுபத்திரண்டாம்பாட்டு. எம்பெருமானாருடைய ஔதார்யத்தாலே தாம் லபித்தவற்றை யநுஸந்தித்து க்ருதார்த்தரானர்கீழ்;

(க) திருமொழி - க - க - சு. (உ)

இன்னமுமந்த ஔதார்யத்தாலே தமக்கு அவர் செய்ததொரு மஹோபகாரத்தை யநுஸந்தித்து வி(ஸ்ம)த்தராகிறார்.

எம்பெருமானார் நிரதிசயௌதார்யத்தைப்பண்ணி, வேதபாஹ்யங்களாகையாலே ஹேயங்களான ஸமயங்களைப்பற்றி நின்று கலகம் செய்கிறவர்களை நிரஸித்தருளினார்; பரிசுத்தமான வேதமார்க்கத்தைப் பூமியிலே நடத்தியருளினார்; என்று அநுஸந்தித்து ஹ்ருதயம் ஸ்நிக்த்தமாய் அந்த ஸ்நேஹத்தோடே யிருந்து ஸ்தோத்ரம் பண்ணுகின்றுள்ள பரிபூர்ணகுணரோடே இவனுமொருவனென்று பரிகணிக்கும்படி என்னை வைத்தருளினார். இப்படி செய்தருளுவதே! என்று கருத்து.

அதவா, "நிறைபுகழோருடனே வைத்தனன்" என்றது-அஸத்துக்கள் நடுவே வர்த்தித்துப் போந்தவென்னை (க) "அடியரோடிருந்தமை" என்கிறபடியே ஸ்ரீவைஷ்ணவர்கள் நடுவே வர்த்திக்கும்படி பண்ணினாரென்னவுமாம். கைத்தல் - கடிதல். உய்த்தல் - நடத்தல். அவ்வன்போடென்கிற விடத்தில் - வகரவொற்றுக்குறைந்து கிடக்கிறது. அன்றிக்கே, நெய்த்த அன்பென்று, ஒருபதமாக யோசிக்கவுமாம். அன்பு நெய்த்திருக்கையாவது - சுஷ்கஸ்நேஹமாயிருக்கை யன்றிக்கே தயவுண்டிருக்கை. உள்ளம் நெய்த்தவன் பென்றது - உள்ளத்தில் நெய்த்தவன்பென்றபடி. எஉ

வண்மையினாலும் தன் மாதகவாலும், மதிபுரையும்
தண்மையினாலு மித்தாரணியோர்கட்குத், தான்சரணாய்
உண்மை நன் ஞானமுரைத்த விராமாநுசனையுன்னும்
திண்மையல்லா லெனக்கில்லை, மற்றோர்நிலை தேர்ந்திடிலே.

எழுபத்துமூன்றாம்பாட்டு. இப்படி இவர்வி(ஸ்ம)த்தராகிறத்தைக் கண்டவர்கள், உமக்குஜ்ஜீவநஹேதுவான ஜ்ஞாநப்ரேமங்களுண்டாகையாலே தரித்திருக்கலாமே யென்ன; தம்முடைய ஔதார்யாதிகளாலே இந்த லோகத்திலுள்ளார்க்குத் தாமே ரக்ஷகராய் யதாஜ்ஞாநோபதேசத்தைப்பண்ணின வெம்பெருமானாரை அநுஸந்தித்திருக்கும் (உ) பலமொழிய எனக்கு வேறொரு தரிப்பில்லையென்கிறார்.

ஆர்த்தகௌரவம் பாராதே உபகரிக்கைக்குறுப்பான தம்முடைய ஔதார்யத்தாலும், ஆர்கதிகண்டு பொறுக்கமாட்டாத பரம

(க) திருவாய் - கo - கூ - கக

க்ருபையாலும், தாபஹரனுமாய் ஆஹ்லாதகரனுமான சந்த்ரனைப் போலேயிருக்கிற தண்ணளியாலும் (க)* அறிவினல் குறைவில்லாத இந்த விபூதியிலுள்ளவர்களுக்குத் தாமே ரக்ஷகராய்க்கொண்டு பாரமார்த்திகமாய் விலக்ஷணமான ஜ்ஞாநத்தை உபதேசித்த எம்பெருமானரை ரக்ஷகராக அநுஸந்தித்திருக்கும் பலமொழிய ஆராய்ந்து பார்க்கில் எனக்கு வேறொரு தரிப்பில்லை.

தண்மை - தட்பம்; அதாவது - குளிர்த்தி. திண்மை - திண்ணிமை; அதாவது - மிடுக்கு. எங

தேரார் மறையின்திற மென்று, மாயவன் தீயவரைக்
கூராழிகொண்டு குறைப்பது, கொண்டலனையவண்மை
ஏரார் குணத்தெம் மிராமாநுச னவ்வெழில் மறையில்
சேராதவரைச்சிதைப்பது, அப்போதொரு சிந்தைசெய்தே.

எழுபத்துநாலாம்பாட்டு. "உண்மை நன்ஞானம்" என்று கீழ்ப்பாட்டில் ப்ரஸ்துதமான யதாஜ்ஞாநத்துக்கு விரோதிகளான பாஹ்யகுத்ருஷ்டிகளை நிரஸித்தருளுகிறவளவில், ஸர்வேஶ்வரனிலுங்காட்டில் அநாயாஸேநசெய்தருளின ப்ரகாரத்தை யநுஸந்தித்து வி(ஸ்ம)த்தராகிறாரிதில்.

நித்யத்வாபௌருஷேயத்வயுக்தமாய், ப்ரத்யக்ஷாதி ப்ரமாணவிலக்ஷணமாய், அப்ததமமாய், ஸமஸ்தசேதநஹிதாஹிதஜ்ஞாபகமாய்த், தம்முடைய சாஸநரூபமாயிருந்துள்ள வேதத்தினுடைய ப்ரகாரத்தை நிரூபிக்கிறிலர்களென்று ஆஶ்சர்ய ஜ்ஞாநசக்திசனை ஸர்வேஶ்வரன் ஸ்வாஜ்ஞாதிலங்கந சீலரான துஷ்டரைச் சேதித்தருளுவது கூரியதிருவாழியாலே; ஸர்வவிஷயமாக உபகரிக்கும்படியாலே மேகத்தோடொக்கச் சொல்லலாம்படியான ஔதார்யத்தையுடையராய், அநுத்தமமான கல்யாணகுணங்களையுடையராய், நமக்குச் சேஷிகளாயிருக்கிற எம்பெருமானர், அந்த விலக்ஷணமான வேதத்தில் அப்ராமாண்ய புத்தியாலும் அயதார்த்த ப்ரதிபத்தியாலும் பொருந்தாத நிலையுடையவர்களை பங்கித்தருளுவது தாதாத்விகைகளான யுக்திகளாலே. ஈதொருவீர்யமிருக்கும்படியே! என்று கருத்து.

குறைக்கை - சேதிக்கை. சிதைக்கை - அழிக்கை. அப்போதொரு சிந்தை செய்கையாவது - அப்போதொரு விசாரத்தைப்பண்ணுகை. எச

(க) திருவாய் - ச - அ - சு.

செய்த்தலைச் சங்கம் செழுமுத்தமீனும், திருவரங்கர்
கைத்தலத் தாழியும் சங்கமுமேந்தி, நங்கண்முகப்பே
மெய்த்தலைத் துன்னைவிடே னென்றிருக்கிலும் நின்புகழே
மொய்த்தலைக்கும் வந்து,இராமாநுசா வென்னை முற்றுநின்றே.

எழுபத்தஞ்சாம்பாட்டு. இப்படி இவர், தம்குணத்திலே விஞ்சித்தராகிறபடி கண்டு, நீர் இதுசெய்வது பகவத் வைலக்ஷண்யத்தைக் காணுமளவுமிறே; கண்டவாறே நீரே யதிலே தோள்மாறுகிறீரென்று எம்பெருமானார்க்குக் கருத்தாக, எம்பெருமான் தன்னழகோடே ப்ரத்யக்ஷித்து "உன்னைவிடேன்" என்றிருந்தாலும் தேவரீருடைய குணங்களே வந்து என்னை மொய்த்து நின்று அலையாநிற்குமென்கிறார்.

வயல்தலைகளிலே சங்குகளானவை அழகியமுத்துக்களை ப்ரஸவியாநின்றுள்ள கோயிலிலே நித்யவாஸம்பண்ணுகிற பெரியபெருமாள், (க) "கையினார் சுரிசங்கனலாழியர்" என்கிறபடியே வெறும் புறத்திலே ஆலத்திவழிக்கும்படியான திருக்கையிலே (உ) * அணியாராழியும் சங்கமும் ஏந்திக்கொண்டு என் கண்வட்டத்திலே ஸாக்ஷாத்கரித்துத் தம்முடைய ஸௌந்தர்யாதிகளாலே தேவரீர் விஷயமாக வென்னுடைய நிலை குலைகைக்கீடான புத்திபேதத்தைப்பண்ணி "உன்னை நாம்விடோம்" என்று ப்ரதிஜ்ஞைபண்ணிக்கொண்டு ஸ்த்தாவர ப்ரதிஷ்ட்டையாகவிருக்கிலும், தேவரீருடைய கல்யாண குணங்களேவந்து என்னை எங்குமொக்க மொய்த்துக்கொண்டுநின்று அஹமஹமிகயா ஸ்வவைலக்ஷண்யத்தைக்காட்டி ஆகர்ஷியாநிற்கும். ஆகையால், பகவத்வைலக்ஷண்யங்கண்டாலும், அதில்தோள் மாறக் கூடாதென்று கருத்து.

மொய்த்தல் - திரளுதல். அலைத்தல் - நின்றவிடத்தில் நில்லாதபடி சலிப்பித்தல். "மெய்த்தலத்து" என்றுபாடமானபோது மெய்யானதலத்திலே - மெய்ந்நிலத்திலே என்றபடி; அதாவது - * நின்னைவிடே னென்றிருக்கிறவிருப்பு. இந்த்ரஜாலிகம்போலே மெய்போலும் பொய்யன்றிக்கே ஸத்யமேயாயிருக்கை; ஸத்யமாகவே யுன்னை விடேனென்று கண்முகப்பேயிருக்கிலு மென்றபடி. எ௬

நின்றவண் கீர்த்தியும் நீள்புனலும், நிறைவேங்கடப்பொற்
குன்றமும் வைகுந்தநாடும் குலவியபாற்கடலும்,

(க) அமலனாதிபிரான் - எ. (உ) திருவாய்-அ-௬-௬.

உன்றனக் கெத்தனை யின்பந்தருமுன்னிணை மலர்த்தாள்
என்றனக்கு மது, இராமாநுசா இவை யீந்தருளே.

எழுபத்தாறும்பாட்டு. பகவத்வைலக்ஷண்யம் காணுமையாலே தேவரீரை யொழிய அறியேனென்றிருக்கிறேனல்லேன், கண்டகாலத்திலும் நான் தேவரீரையொழிய வறியேனென்றார் கீழ்; இப்படி இவர் விண்ணப்பம் செய்தவாறே, எம்பெருமானார் மிகவு முகந்தருளி, இவர்க்கு எத்தைச் செய்வோமென்னு மிடந்தோற்ற எழுந்தருளியிருக்கிற படியைக்கண்டு, தம்முடைய ப்ராப்யத்தை நிஷ்கர்ஷித்து அபேக்ஷிக்கிறாரிதில்.

காதாசித்கமன்றிக்கே ஒருபடிப்பட்டு நின்ற அழகிய கீர்த்தியும் (க) "வார்புனலந்தணருவி" என்னுமாபோலே ஒழுகுடைய புனலும் நிறைந்திருப்பதாய், திருவேங்கடமென்னும் திருநாமத்தையுடைத்தாய், ஸ்ப்ருஹணீயமாயிருந்துள்ள திருமலையும், ஸ்ரீவைகுண்டமாகிற திருநாடும், ஆர்த்தரக்ஷணார்த்தமாய்வந்து கண்வளர்ந்தருளுகிற விடமென்று விசேஷஜ்ஞரெல்லாம் கொண்டாடும் திருப்பாற்கடலும், தேவரீருக்கு யாதோரளவு ஆநந்தத்தை விளைக்கும், தேவரீருடைய சேர்த்தியழகை யுடைத்தாய் போக்யமாயிருந்துள்ள திருவடிகள் எனக்கும் அவ்வளவான ஆநந்தத்தை யுண்டாக்கும்; ஆனபின்பு, தேவரீர் திருவடிகளை எனக்குத் தந்தருளவேணும்.

குலவுதல் - கொண்டாட்டம். ஈதல் - கொடுத்தல். எஎ

ஈந்தனனீயாத வின்னருள், எண்ணில் மறைக்குறும்பைப்
பாய்ந்தன னம்மறைப்பல்பொருளால், இப்படியனைத்தும்
ஏய்ந்தனன் கீர்த்தியினு லென்வினைகளை வேர்பறியக்
காய்ந்தனன், வண்மை இராமாநுசற்கென் கருத்தினியே.

எழுபத்தேழாம்பாட்டு. தாம் அபேக்ஷித்தபடியே திருவடிகளைக் கொடுத்தருளப்பெற்று க்ருதார்த்தராய் அவர்செய்த உபகாரங்களை யநுஸந்தித்து, இவையெல்லாம் செய்த பின்பு இனிச்செய்வதாக நினைத்தருளுவதேதோ? வென்கிறார்.

இதுக்கு முன்பு ஒருவர்க்கும் உபகரியாத விலக்ஷணமானஅருளை எனக்குபகரித்தார்; எண்ணிறந்த மறைக்குறும்புண்டு-வேதத்தை மூலையடியே நடத்துகிற குத்ருஷ்டிமதங்கள்;அவற்றை, அந்த வேத

(க) திருவாய் - ௩ - ௫ - அ.

ப்ரதிபாத்யமான அநேகார்த்தங்களைக்கொண்டு தள்ளிவிட்டார்; இந்தப் பூமியெல்லாம் கீர்த்தியாலே வ்யாப்தரானார்; என்னுடைய கர்மங்களை வாஸனையோடே போம்படி ஓட்டினார்; பரமோதாரரான எம்பெருமானார்க்கு இனித் தம் திருவுள்ளத்திலோடுகிறது ஏது? இன்னும் செய்யத்தக்கதுண்டோ? வென்று கருத்து.

"ஏய்ந்த வண் கீர்த்தியினால்" என்று பாடமானபோது, பூமியெங்கும் பொருந்தப்பட்டிருந்துள்ள தம்முடைய விலக்ஷணையான குணவத்தாப்ரதையாலே என்கர்மங்களைப் போக்கினாரென்கை; அதாவது - இவரோடு அந்வயமுடையவனன்றோ இவனென்று கர்மம் தானேவிட்டுப்போகை. பாய்தல் - உதைத்தல்; அதாவது - தள்ளுதல். ஏய்தல் - பொருந்துதல். காய்தல் - கடிதல். எஎ

கருத்தில் புகுந்துள்ளில் கள்ளம்கழற்றிக், கருதரிய
வருத்தத்தினல் மிகவஞ்சித்து, நீயிந்தமண்ணகத்தே
திருத்தித் திருமகள் கேள்வனுக்காக்கியபின் னென்னெஞ்சில்
பொருத்தப் படாது, எம்மிராமாநுச மற்றோர் பொய்ப்பொருளே.

எழுபத்தெட்டாம்பாட்டு. இப்படிசெய்த உபகாரங்களை யநுஸந்தித்த வநந்தரம் தம்மைத்திருத்துகைக்காக அவர்பட்ட வருத்தங்களைச்சொல்லி, இப்படி என்னைத்திருத்தி தேவரீர்க்கு உத்தேஶ்ய விஷயத்துக் குறுப்பாக்கின பின்பு வேறொரு அயதார்த்தம் என்னெஞ்சுக் கிசையாதென்கிறார்.

நெடுங்கை நீட்டாகவிருக்கில் இவன் நெஞ்சைத்திருத்தப்போகாதென்று நெஞ்சுதன்னிலே வந்து புகுந்து, குடியிருக்குமவர்கள் செடியறுக்குமாபோலே உள்ளுண்டான ஆத்மாபஹாரத்தைப் போக்கி, வேறு சிலர்க்கு நெஞ்சால் நினைக்கவுங்கூட அரிதாயிருந்துள்ள வருத்தத்தாலே, நானறியில் செய்த க்ருஷிதன்னையும் அழித்துக்கொள்வனென்று ஏனக்கொன்றுந் தெரியாதபடி மிகவும் மறைத்து, தேவரீர் தாம் அறிந்ததாக யத்நித்து தரிசுகிடந்ததரையைச் செய்காலாம்படி திருத்துவாரைப்போலே திருத்தி, இந்தலோகத்திலே தேவரீர்க்குத்தேஶ்யவிஷயமான ஶ்ரிய:பதிக்கு அந்த:புரவிநியோகத்துக்கு ஆளாம்படி பண்ணினபின்பு, இப்படி தேவரீர் திருத்தத்திருந்தின என் மநஸ்ஸிலே தேவரீர் அறிவித்த யதார்த்தமொழிய அதுக்குப் புறம்பாயிருப்பதொரு அயதார்த்தம் வலியப்பொருத்திலும் பொருந்ாது.

"இந்த மண்ணகத்தே" என்று (க)* இருள்தருமாஞாலமான இந்தலோகத்திலே திருத்துகையிலுண்டான அருமையைச் சொல்லிற்றாகவுமாம். கருத்தென்று - மநோவ்ருத்திவாசியான சப்தத்தாலே மநஸ்ஸைச்சொல்லுகிறது;"சிந்தை" என்னுமாபோலே. வருத்தம் - ஆயாஸம். பொருத்துதல் - இசைத்தல். எஅ

பொய்யைச் சுரக்கும் பொருளைத்துறந்து, இந்தப் பூதலத்தே
மெய்யைப்புரக்கு மிராமாநுசனிற்க, வேறுநம்மை
உய்யக் கொள்ளவல்ல தெய்வ மிங்கியா தென்றுலர்ந்தவமே
ஐயப்படாநிற்பர், வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே.

எழுபத்தொன்பதாம்பாட்டு. எம்பெருமானார் யதார்த்தஜ்ஞாநத்தைக் கொடுக்கையாலே அயதார்த்தங்கள் தமக்குப் பொருந்தாதபடி யாயிற்றென்று ஸ்வநிஷ்டையை யருளிச்செய்தார் கீழ்; உஜ்ஜீவநருசியுமுண்டாயிருக்க அருமந்தஜ்ஞாநத்தை இழந்து இவ்விஷயத்துக்கு அசலாய்ப்போருகிற லௌகிகர்படியை யநுஸந்தித்து இன்னாதாகிறார் இதில்.

ஆத்மாவினுடைய தேஹபரிமாணத்வ க்ஷணிகஜ்ஞாநரூபத்வ ஜடத்வாதிகளென்ன, ப்ரஹ்மத்தினுடைய மாயாசபளிதத்வோபாதி மிஶ்ரத்வவிகாரித்வாதிகளென்ன, சுத்தாஸத்யமாயிருப்பதொன்றை மேன்மேலும் உபபாதியாநிற்கும் பாஹ்யகுத்ருஷ்டிமதார்த்தத்தை ஒட்டி இந்த பூமியிலே யதார்த்தத்தைப் பரிபாலித்தருளும் எம்பெருமானார், ஆரொருவர் வருவாரென்று வழிபார்த்து நிற்கச்செய்தே, ஸஜாதீயபுத்தியாலே இவரை யுபேக்ஷித்து வேறுநம்மை உஜ்ஜீவிப்பிக்க வல்லதேவதை இங்கே ஏதென்று தேடிமநஃக்லேசத்தாலே உடம்புலர்ந்து இவ்விஷயமே நமக்கு உத்தேஶ்யமென்று பற்றி உஜ்ஜீவித்துப் போருகைக்குறுப்பான யதார்த்தஜ்ஞாநத்தை லபிக்கப்பெறாதே, உங்களுக்குஜ்ஜீவநகரம் இவ்விஷயமென்றாலும் பூமியிலுள்ளார் வ்யர்த்தமே ஸம்சயப்படாநின்றார்கள். ஐயோ! இவர்கள் நிலையிருந்தபடி என்! என்று கருத்து.

"பொய்யைச்சுரக்கும்" இத்யாதிக்கு - உத்பத்தி விநாசாதியோகத்தாலே அஸத்யசப்தவாச்யமான தேஹத்தை ஜந்மபரம்பரையாலே மேன்மேலுண்டாக்கும் தேஹாத்மாபிமாந ஸ்வாதந்த்ர்யாத்ய

(க) திருவாய் - கய - சு - க.

ர்த்தங்களை ஸ்வோபதேசத்தாலே யோட்டிவிட்டு இந்த பூதலத்திலே (க)* ஸதைகரூபதயா ஸத்ய சப்தவாச்யமான ஆத்மாவை ரக்ஷித்தருளுமெம்பெருமானார் நிற்கவென்று பொருளாகவுமாம். துரத்தல்-ஓட்டுதல். புரத்தல் - காத்தல். ஐயம் - ஸம்சயம். "தெய்வமிங்கியாது" என்றவிடத்தில் இகரமும் குற்றியலிகரமாகையாலே (உ) "உமக்கியான்" என்கிறவிடத்தில் சொன்ன ந்யாயத்தாலே கழித்து பூர்வாபர பாதங்களுக்கு ஒக்கப் பதினேழெழுத்தாக எண்ணக்கடவது. எசு

நல்லார்பரவு மிராமாநுசன், திருநாமம்நம்ப
வல்லார் திறத்தை மறவாதவர்கள் யவர், அவர்க்கே
எல்லாவிடத்திலு மென்று மெப்போதிலு மெத்தொழும்பும்,
சொல்லால் மனத்தால்,கருமத்தினால் செய்வன் சோர்வின்றியே.

எண்பதாம்பாட்டு. இவ்விஷயத்தை யாஸ்ரயிக்கவிசையாத ஸம்ஸாரிகள் நிலையைக்கண்டு இழவுபட்டார் கீழ்; உம்முடைய நிஷ்டைதானிருக்கும்படி யென்னென்ன; இவ்விஷயமே உத்தேஸ்யமென்றிருப்பாரை உத்தேஸ்யமென்றிருக்கு மவர்களுக்கே (ங) * ஒழிவில்காலத்திற்படியே நான் அடிமைசெய்வேனென்கிறார்.

(ச) "நல்லார் நவில்குருகூர் நகரான்" என்னுமாபோலே ஸத்துக்களடங்கலும் இருந்தவிடங்களிலே ப்ரேமபரவசரா யேத்தும்படியான எம்பெருமானாருடைய திருநாமத்தை, (ரு) "నచేద్రామానుజేత్యేషా చతురా చతురక్షరీ। కామవస్థాం ప్రపద్యన్తే జన్తవో హన్త మాదృశః-நசேத்ராமாநுஜேத்யேஷா சதுராசதுரக்ஷரீ। காமவஸ்த்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோஹந்தமாத்ருசஃ" என்கிறபடியே தங்களுக்குத் தஞ்சமாக விஸ்வஸித்திருக்கவல்லவர்களுடைய ப்ரகாரத்தை அநவரதாநுஸந்தாநம்பண்ணி யிருக்குமவர்கள் யாவர் சிலர், அவர்களுக்கே ஸர்வதேசத்திலும் ஸர்வகாலத்திலும் ஸர்வாவஸ்த்தைகளிலும் ஸர்வசேஷவ்ருத்திகளும் வாக்காலும் மநஸ்ஸாலும் காயத்தாலும் (சு) "தனக்கேயாக" என்கிறபடியே ப்ருதக்ரஸமறச் செய்வன்.

---

(க) விஷ்ணுபு - க - உ - க.
(உ) சரு.
(ங) திருவாய் - ங - ங.
(ச) திருவிரு - ச௦௦.
(ரு) ஆழ்வான் முக்தகம்.
(சு) திருவாய் - உ - கூ - ச.

"வல்லார் திறத்தைமதியாதவர்கள்" என்று பாடமானபோது, மதித்தல் - அளவிடுதலாய், அவர்கள்படியைப் பரிச்சேதியாதவர்களென்று பொருளாகக்கடவது. நம்புதல் - விஸ்வஸித்தல்; விரும்புதலுமாம். திறம் - ப்ரகாரம். தொழும்பு-அடிமை. "சொல்-கருமம்" என்கிறவற்றால் - தத்தத்காரணங்களான வாக்காயங்களை லக்ஷிக்கிறது. சோர்வு - பிரிவு. அ0

சோர்வின்றியுன்றன் துணையடிக் கீழ்த்தொண்டு பட்டவர்பால்,
சார்வின்றி நின்றவெனக்கு, அரங்கன்செய்ய தாளிணைகள்
பேர்வின்றியின்று பெறுத்து மிராமாநுச வினியுன்
சீரொன்றியகருணைக்கு, இல்லைமாறு தெரிவுறிலே.

எண்பத்தோராம்பாட்டு. எம்பெருமானார் திருவடிகளில் ஸம்பந்திஸம்பந்திகளுக்கே ஸர்வசேஷ வ்ருத்திகளும் பண்ணுவேனென்றார்கீழ்; இந்நிலைக்குமுன்பு இசையாத தமக்கு இந்த ருசியுண்டாயிற்றது எம்பெருமானார் ப்ரஸாதத்தாலே யாகையாலே, தமக்கு அவர் செய்த உபகாரத்தை அவர் தம்மைக்குறித்து விண்ணப்பஞ்செய்து, தேவரீருடைய க்ருபைக்கு ஒப்பில்லையென்கிறார்.

வேறொருவிஷயத்தில் மநஸ்ஸு பிரிவின்றிக்கே தேவரீருடைய சேர்த்தியழகையுடைத்தான திருவடிகளின்கீழே (க) *நிழலுமடிதாறும்போலே சேஷமாயிருக்குமவர்கள்பக்கல் ஒரு பொருத்தமின்றிக்கே நின்ற எனக்கு, அவர்களுக்கே அநந்யார்ஹசேஷமென்னும் நினைவைப் பிறப்பிக்கையாலே, (உ) "அடியார்க்கென்னையாட்படுத்த விமலன்" என்றும், (ங) "அடியார்க்காட்படுத்தாய்" என்றும் சொல்லுகிறபடியே தாமுகந்தாரை ஸ்வகீயரளவிலே சேர்க்கும் ஸ்வபாவராய் பாகவத சேஷத்வ நிஷ்டர்க்கொழியத் தம்திருவடிகளை விட்டுப் போராத நிலையில்லையாம்படி யிருக்கும் பெரிய பெருமாளுடைய திருமேனி நிறத்துக்குப் பரபாகமான சிவப்பையும் சேர்த்தியழகையுமுடைய திருவடிகளை ஒருகாலமும்விட்டு நீங்காதபடியாக இன்று பெறுவித்தருளினவரே! இப்படியானபின்பு தேவரீருடைய கௌரவயுக்தையாயிருந்துள்ள க்ருபைக்கு ஆராயுமளவில் ஒப்பு இல்லை.

---

(க)

(உ) அமலனாதிபிரான் - க. (ங) திருப்பள்ளியெழுச்சி - க0.

அதவா, "சோர்வின்றி;" இத்யாதிக்கு - "அரங்கன்செய்ய தாளிணைகள் பேர்வின்றி-உன்றன் துணையடிக் கீழ்த்தொண்டு பட்டவர்பால் சார்வின்றிநின்ற வெனக்கு - இன்று பெறுத்து மிராமாநுச" என்றந்வயித்து, பகவத்சேஷத்வத்துக்கிசைகையாலே பெரிய பெருமாள் திருவடிகளை விடாமலுறைக்கப்பற்றி, துர்மாநத்தாலே பாகவத சேஷத்வத்துக்கிசையாமையால், தேவரீர் திருவடிகளுக்கு சேஷமாயிருப்பார் பக்கல் சேராமல் நின்ற வெனக்கு, அத்தை இன்று லபிப்பித்தருளின தேவரீர் க்ருபைக்கொப்பில்லை யென்னவுமாம். பேர்தல் - நீங்குதல். சீர் - கனம்; அழகாகவுமாம். ஒன்றுதல் - கூடுதல். மாறு - ஒப்பு. தெரிவுறுதல் - ஆராய்தல். அக

தெரிவுற்ற ஞானம் செறியப் பெறாது, வெந்தீவினையால்
உருவற்ற ஞானத் துழல்கின்றவென்னை, ஒருபொழுதில்
பொருவற்ற கேள்விய னாக்கி நின்றானென்ன புண்ணியனோ
தெரிவுற்ற கீர்த்தி, இராமாநுசனென்னும் சீர்முகிலே.

எண்பத்திரண்டாம்பாட்டு. "அரங்கன்செய்ய தாளிணைகள் பேர்வின்றியின்று பெறுத்தும்" என்று கீழ்ச்சொன்ன பேற்றுக்குடலாகத் தமக்குப் பண்ணின உபதேசத்தை அநுஸந்தித்து வித்தராய், எம்பெருமானார் என்னதார்மிகரோ! வென்கிறார்.

ஸதஸத்விவேகத்தில் ஊற்றத்தையுடைத்தாயிருக்கும் ஜ்ஞாநத்தைச் சேரப்பெறாதே அதிக்ரூரமான கர்மத்தாலே ஒருவஸ்து பூதமாய்க்கொண்டு வடிவுபட்டிராத ஜ்ஞாநத்தைப்பற்றி ஒன்றிலும் ஒருநிலையற்றுத் தட்டித்திரிகிற என்னை சிரகாலங்கூடியன்றிக்கே ஒருக்ஷணகாலத்திலே உபமாநரஹிதமான ஶ்ருதத்தையுடையேனும்படி பண்ணி ஒருபடி திருவடிகள் பூமியிலே நற்றரித்துத் தரித்து நின்றார். (க) "திக்குற்றகீர்த்தி" என்கிறபடியே, விசேஷஜ்ஞர் அவிசேஷஜ்ஞரென்னும் விபாகமற எல்லார்க்கும் ப்ரகாசித்திருந்துள்ள ஔதார்யத்தையுடையராய் (உ) "குணந்திகழ் கொண்டல்" என்னும்படியே பரமோதாரரான எம்பெருமானார் என்ன தார்மிகரோ!

"உருவற்றஞானத்து" என்றுபாடமானபோது, உருவென்று - அழகாய், அதாவது-நன்மையாய், அது அறுகையாவது-இன்றிக்கே

(க) உகூ. (உ) கூ௦.

யொழிகையாய்,நன்மையென்பதொன்றில்லாத ஜகத்திலேயென்கை. அப்போது "தெரிவுற்றஞானம்" இத்யாதிக்கு ஸதஸத்விவேகத்தில் ஊற்றமுடைய ஜ்ஞாநத்தை ப்ராபிக்கப்பெறுதே ப்ரபலகர்மத்தாலே ஒருநன்மையின்றிக்கே க்ஷேபமாயிருந்துள்ள ஜகத்திலே (க) "ஈண்டுபல்யோனிகள் தோறுழல்வோம்" என்கிறபடியே நாநாவித யோநிகளிலே ஜநிப்பது மரிப்பதாய்த்தட்டித்திரிகிற வென்னையென்று பொருளாகக்கடவது. தெரிவு-விவேகம். உறுதல் - ஊற்றம். அன்றிக்கே, "தெரிவுற்ற ஞானம்" என்று-ப்ரகாசயுக்தமானஜ்ஞாநமென்றாய், தத்வஸ்த்திதியை யதாதர்சநம் பண்ணுகைக்குறுப்பான விசதஜ்ஞாநமென்னவுமாம். தெரிவுற்ற கீர்த்தி-ப்ரகாசயுக்தையான கீர்த்தி. சீர்முகில்-சீரியமுகில்; அழகியமுகிலென்னவுமாம். அஉ

சீர்கொண்டுபேரறம் செய்து, நல்வீடுசெறிது மென்னும்
பார்கொண்ட மேன்மையர் கூட்டனல்லேன், உன்பதயுகமாம்
ஏர்கொண்ட வீட்டைஎளிதினிலெய்துவ னுன்னுடைய
கார்கொண்டவண்மை, இராமாநுசா இதுகண்டுகொள்ளே.

எண்பத்துமூன்றாம்பாட்டு. "பொருவற்றகேள்வியனாக்கி நின்றான்" என்ன; உம்முடைய ஸ்ருதத்துக்கு வ்யாவ்ருத்தியேது, எல்லார்க்கு மொவ்வாதோ சரணாகதியென்ன; நான் ப்ரபத்திபண்ணிப் பரமபதம் பெறுவார் கோடியிலன்று, தேவரீர் திருவடிகளாகிற மோக்ஷத்தை தேவரீர் ஔதார்யத்தாலே பெறுமவனென்கிறார்.

சமதமாதிகள் ஆகிஞ்சந்யாநந்யகதித்வங்கள் ருசிவிஶ்வாஸங்களாகிற ஸ்வபாவ விசேஷங்களை யுடையராய், பரமதர்மமாகிற ப்ரபத்தியைப்பண்ணி ஆத்மாநுபவமாத்ரமான கைவல்யம் போலன்றிக்கே பரமபுருஷார்த்தலக்ஷண மோக்ஷத்தை ப்ராபிப்போமென்னும் பூமியெங்கும் வ்யாப்தமான ப்ரபாவத்தையுடைய பகவத்ப்ரபந்நருடைய திரளுக்குட்பட்டவனல்லேன்; தேவரீருடைய திருவடிகளிரண்டுமாகிற ஸர்வவிலக்ஷணமான மோக்ஷத்தை அநாயாஸேந ப்ராபிப்பன்; அதுக்கு ஹேது, ஸர்வவிஷயமாக ஸர்வகாலத்திலு முபகரிக்கையாலே மேகத்தை ஜயித்திருக்கும் தேவரீருடைய ஔதார்யம்; இது நான் சொல்ல வேணுமோ? அநுஷ்டாநத்தால் கண்டு கொள்ளமாட்டீரோ?

(க) ௩௯௧.

"நல்வீடுபெறுதும்" என்றுப்பாடஞ் சொல்லுவர்கள். "பார்கொண்டமேன்மை" விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற பூமியிலுள்ளா ரெல்லாராலும் கைக்கொள்ளப்பட்ட உத்கர்ஷமென்னவுமாம். "ஏர்கொண்டவீட்டில்" என்றுபாடமானபோது; தேவரீர் திருவடிகளிரண்டுமாகிற விலக்ஷணமோக்ஷத்திலே அநாயாஸேந சேர்வனென்றபடி. ஏர் - அழகு. கொள்கை - உடைத்தாகை. திருவடிகளை மோக்ஷமாகச்சொல்லுகிறது - ஆநந்தாவஹத்வத்தாலே.

(௧) "ముక్తిర్మోక్షో మహానన్దః- முக்திர்மோக்ஷோ மஹாநந்தஃ" என்னக்கடவதிறே. ௮௫

கண்டுகொண்டே னெம்மிராமாநுசன் தன்னைக், காண்டலுமே
தொண்டுகொண்டே னவன்தொண்டர் பொற்றாளில், என்தொல்லை வெந்நோய்
விண்டுகொண்டே னவன்சீர் வெள்ளவாரியை வாய்மடுத்தின்
றுண்டுகொண்டேன், இன்னமுற்றனவோதி லுலப்பில்லையே.

௭ண்பத்துநாலாம்பாட்டு. மேல் பெறு மம்சம் கிடக்கச்செய்தே இதுக்கு முன்பு நான் பெற்றவைதனக்கு ஒரு அவதியுண்டோ வென்கிறார்.

இவர் நம்மோடு ஸஜாதீயரல்லர், நம்மையுத்தரிப்பிக்கவந்தவரென்று அஸ்மத்ஸ்வாமியான எம்பெருமானாரை உள்ளபடிகண்டு கொண்டேன்; இப்படி தர்சித்தவளவிலே அவர்தம்மளவிலே நின்றுவிடாதே அவர்க் கநந்யார்ஹரானவர்களுடைய அழகிய திருவடிகளிலே அடிமைப்பட்டேன்; என்னுடைய அநாதியாய் அதிக்ரூரமான கர்மங்களை நீக்கிக்கொண்டேன்; அவருடைய குணபூரமாகிற ஸமுத்ரத்தைப் பெருவிடாயர்மடுவிலே வாய்மடுத்துப் பருகுமாபோலே பெரியவபிநிவேசத்தோடே இன்றுபுஜித்துக்கொண்டேன்; இன்னமும் நான்பெற்றவற்றைச் சொல்லில் அதுக்கொருமுடிவில்லை.

"காண்டலுமே" என்றது - கண்டவளவிலே என்றபடி. "தொண்டுபட்டேன்" என்று ஒருமுழுச்சொல்லு; அடிமையைக்கைக் கொண்டேனென்னுதல். விள்ளுதல் - நீங்குதல். வாரி - ஸமுத்ரம்; உலப்பு - முடிவு.

(௧)

ஓதிய வேதத்தி னுட்பொருளாய், அதனுச்சிமிக்க
சோதியை நாதனென வறியாதுழல் கின்றதொண்டர்,
பேதைமை தீர்த்த விராமாநுசனைத் தொழும்பெரியோர்
பாதமல்லாலென்றன் னாருயிர்க்கியாதொன்றும் பற்றில்லையே.

எண்பத்தஞ்சாம்பாட்டு. "இராமாநுசன் றன்னைக்கண்டு கொண்டேன் - அவன்தொண்டர் பொற்றாளில் தொண்டுகொண்டேன்" என்றீர், இரண்டில் உமக்கு ஊற்றமெதிலே யென்ன; எம்பெருமானார்க்கு அநந்யார்ஹராயிருப்பார் திருவடிகளொழிய என்னாத்மாவுக்கு வேறொரு பற்றில்லை யென்கிறார்.

தாங்களதிகரித்திருக்கிற வேதத்தினுடைய ஆந்தரப்ரமேயமாய் (க) "[Grantha]-ஶ்ருதிசிரஸிவிதீப்தே" என்கிறபடியே அந்த வேதசிரஸ்ஸிலே நிரவதிகமாக ப்ரகாசித்திருக்கிறவனை நமக்கு நாதன் என்று அறியாதே வ்யதிரிக்தவிஷயங்களிலே தொண்டுபட்டுழன்று திரிகிறவர்களுடைய அப்ராப்தவிஷய பஜநத்துக்கடியான அஜ்ஞாநத்தைப்போக்கியருளின எம்பெருமானாரைத் தொழுகையே நிரூபகமாம்படியான பெருமையையுடையவர்களுடைய திருவடிகளையொழிய என்னாத்மாவுக்கு வேறு ஏதேனுமொரு அபாஶ்ரயமில்லை.

"பேதைமைதீர்க்கும்" என்றும் பாடம்சொல்லுவர்கள். "ஆருயிர்க்கியாதொன்றும்"என்கிறவிடத்தில், ககரத்தின்மேலேறின இகரமும் குற்றியலிகரமாகையாலே (உ) "பல்லுலகியாவும்" என்றவிடத்திற்போலே வண்ணம் கெடாமைக்குக் கழித்து, பூர்வபரபாதங்களுக்கு ஒக்கப்பதினாறெழுத்தாக வெண்ணக்கடவது. அ௬

பற்றுமனிசரைப்பற்றி, அப்பற்றுவிடாதவரே
உற்றாரென வுழன்றோடிநையேனினி, ஒள்ளியநூல்
கற்றார்பரவு மிராமாநுசனைக் கருதுமுள்ளம்
பெற்றார்யவர், அவரெம்மை நின்றாளும் பெரியவரே.

எண்பத்தாறும்பாட்டு. "இராமாநுசனைத்தொழும் பெரியோர் பாதமல்லாலென்ற னாருயிர்க்கியாதொன்றும் பற்றில்லை" என்றவநந்தரம், முன்பு அப்ராப்தவிஷயங்களைப்பற்றியிருப்பாரை பந்துக்க

(க) ஸ்ரீபாஷ்யம். (உ) ௫௯.

ளாக நினைத்து அவர்களளவிலே தாம் ப்ரவணராய்ப் போந்தபடி களையநுஸந்தித்து, இனி அதுசெய்யேன், எம்பெருமானுரைச் சிந்திக்கும் மநஸ்ஸுடையாராரேனுமாகிலும் அவர்கள் என்னையாள உரியவரென்கிறுர்.

ஒன்றுக்கும் பற்றாத க்ஷுத்ர மநுஷ்யரை ஆஸ்ரயித்து அந்த ஆஸ்ரயணம்விடாதே நிற்கிறவர்களையே பந்துக்களென்று அநுஸந்தித்து, அவர்கள் பின்னே திரிந்துழன்று, அவர்கள் விஷயமான ப்ராவண்யத்தாலே அவர்கள் முகத்திலே விழிக்கப்பெறுவது எப்போதென்றுஓடி, அவர்களுடைய ஸம்ஸ்லேஷவிஸ்லேஷங்களிலுண்டான ஹர்ஷசோகங்களாலே இனி சிதிலனுகேன்; தத்வஹிதபுருஷார்த்தங்களை ஸுவ்யக்தமாக ப்ரகாசிப்பிக்கும் சாஸ்த்ரங்களை அதிகரித்திருக்குமவர்கள், தங்கள் கல்விக்கு ப்ரயோஜநமிதுவென்று ப்ரேமத்தாலே அடைவுகெட ஸ்தோத்ரம்பண்ணு நின்றுள்ள எம்பெருமானுரை அநுஸந்திக்கையே யாத்ரையாயிருக்கும் மநஸ்ஸை நிதிபெற்றாற்போலே லபித்திருக்குமவர்கள் யாவர் சிலர், அவர்கள் குலசரணகோத்ரங்களேதேனுமாகவமையும், அவர்கள் நம்மை இவ்வாத்மா உள்ளவளவும் ஒருபடிப்பட அடிமைகொள்ளும் மஹாநுபாவர்.

அதவா, "பற்றுமனிசர்" இத்யாதிக்கு, க்ஷுத்ரமநுஷ்யரையாஸ்ரயித்து, அந்த ஆஸ்ரயணம்விடாதே அவர்களையே உத்தாரகராக அநுஸந்தித்து உழன்று ஓடிநையேன் என்னவுமாம். அசு

பெரியவர்பேசிலும் பேதையர்பேசிலும், தன்குணங்கட்
குரியசொல்லென்றுமுடையவ னென்றென்று, உணர்வில்மிக் [கோர்
தெரியும்வண் கீர்த்தி யிராமாநுசன் மறைதேர்ந்துலகில்
புரியுநன்ஞானம், பொருந்தாதவரைப் பொரும்கலியே.

எண்பத்தேழாம்பாட்டு. சேதநருடைய ஜ்ஞாநவ்யவஸாயங்கள் கலங்கும்படி ஆக்ரமியாநின்றுள்ள கலிகாலத்திலே உமக்கு இந்த வ்யவஸாயம் ஒருபடிப்பட *நில்லாதிறே என்ன; அது ஆக்ரமிப்பது எம்பெருமானுராலே உபக்ருதமான ஜ்ஞாநத்திலே அநந்விதராயிருந்துள்ளவர்களை யென்கிறுர்.

பேசுகைக்கீடான ஜ்ஞாநசக்திகளையுடையராயிருக்கும் பேரளவுடையார் சொல்லிலும் அஜ்ஞாநாசக்திகளுக் கெல்லையாயிருக்கும்

* (பா) நின்றுலிறே.

அளவிலிகளானவர்கள் சொல்லிலும் அவர்களுடைய ஜ்ஞாநசக்திகளால் எல்லைகாணவொண்ணாதபடியாய், இவர்களுடைய அஜ்ஞாநாசக்திகளால் நமக்கு பூமியன்றென்று மீளவேண்டாதபடியாய், இப்படி தங்கள் குணங்களுக்கீடாகப் பேசலாம்படியிருக்கிற தம்முடைய ஸ்வரூபாதிகளுக்கு வாசகமான சப்தங்களை ஸர்வகாலத்திலும் உடையராயிருக்குமவரென்று ஜ்ஞாநாதிகரானவர்கள் பலகாலும் விவேகித்து அநுஸந்தியாநின்றுள்ள திவ்யகீர்த்தியையுடையரான எம்பெருமானுர் வேதத்தையாராய்ந்து லோகத்திலே உபகரித்தருளின விலக்ஷணமானஜ்ஞாநத்தில் சேராதவர்களைக் கலிவந்து மேலிட்டு நலியும். அந்த ஜ்ஞாநத்தில் சேர்ந்தவர்களை நலியமாட்டாதென்று கருத்து.

"குணங்கட்குரிய சொல்லொன்று முடையவன்" என்று பாடமானபோது, தங்களுடைய ஜ்ஞாநசக்திகளும் அஜ்ஞாநாசக்திகளுமாகிற குணங்களுக்கீடாகப்பேசும் சப்தமித்தனையெல்லாம் மிகையென்றுதல், இதுபோராதென்றுதல் சேராச்சேர்த்தியாயிராதே அபரிச்சேத்யமஹிமாவாலும் அளவிறந்த ஸௌசீல்யத்தாலும் சேரும்படியாயிருக்கும் ஸ்வாமியென்று பொருளாகக்கடவது; ஒன்றுதல் - கூடுதலாய், சேர்த்திக்குவாசகமாகிறது. "தம்குணங்கட்கு" என்றும் பாடம் சொல்லுவர்கள். அப்போது, பெரியவர் பேசிலுமாம், பேதையர்பேசிலுமாம், அவரவரளவுக்கீடாகப் பேசலாம்படி தம்முடைய குணங்களுக்கு ப்ராப்தமான சொல்லையென்றுமுடையராயிருக்குமவரென்று பொருளாகக்கடவது. "உரிய" என்றது - தக்கவென்றபடி. தெரிதல் - விவேகித்தல். வண்மை - அழகு. தேர்தல் - ஆராய்தல். புரிதல் - கொடுத்தல். பொருந்துதல் - சேருதல். அள

கலிமிக்கசெந்நெல் கழனிக்குறையல், கலைப்பெருமான்
ஒலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து, அதனல்
வலிமிக்க சீயமிராமாநுசன் மறைவாதியராம்
புலிமிக்கதென்று, இப்புவனத்தில் வந்தமை போற்றுவனே.

எண்பத்தெட்டாம்பாட்டு. எம்பெருமானுருபகரித்த ஜ்ஞாநத்தில் அந்வயமில்லாதாரைக் கலிதோஷம் நலியுமென்றூர்கீழ்; அந்த ஜ்ஞாநத்தை யுபகரிக்கைக்காக அவர்வந்து அவதரித்தபடியை யநு

ஸந்தித்து எம்பெருமானாகிற ஸிம்ஹம் குத்ருஷ்டிகளாகிற புலிகளை நிரஸிப்பதாக லோகத்திலேவந்த ப்ரகாரத்தைச்சொல்லி ஸ்தோத்ரம் பண்ணக்கடவே னென்கிறார் இதில்.

உழுவது நடுவது அறுப்பதாய்ச்செல்லுகிற ஆரவாரத்தால் மிக்கசெந்நெற்கள் விளையாநின்றுள்ள வயல்களையுடைய திருக்குறையலூருக்கு நிர்வாஹகராய், (க) * இருந்தமிழ்நூல் புலவராகையாலே சாஸ்த்ரரூபமான ப்ரபந்தங்களைச் செய்தருளின வைபவத்தையுடையரான திருமங்கையாழ்வாருடைய(உ)"ஒலிகெழுபாடல்" என்னும்படி மிக்கத்வநியையுடைத்தான திருமொழியை தாரகமாகவும் போக்யமாகவும் அநுபவித்துத்தம்முடைய திருவுள்ளம்பூரித்து அத்தாலே ப்ரதிபக்ஷதர்சநத்தைஸஹியாதபடி அதிப்ரபலமான ஸிம்ஹம்போலே யிருக்கிற எம்பெருமானார், பாஹ்யரைப்போலன்றிக்கே வேதங்களை யங்கீகரித்துக்கொண்டு நின்று வாதங்களைப்பண்ணி லோகத்தை நசிப்பிக்கிற குத்ருஷ்டிகளாகிற புலிகள் மிக்கதென்று, ஸாது ம்ருகங்களை நலியாநின்றுள்ள துஷ்டம்ருகமான புலிமிக்க காட்டிலே அவை தன்னை நிரஸிக்கவற்றானதொரு ஸிம்ஹம் வந்து தலைப்படுமாபோலே, ஸந்மததூஷகரான குத்ருஷ்டிகள் வர்த்திக்கிற இந்த பூமியிலே தந்மததூஷகராய்வந்து அவதரித்த ப்ரகாரத்தை ஸ்துதிக்கக்கடவேன்.

கலி - ஆரவாரம்; மிடுக்குமாம். அப்போது பூஸாரத்தைச்சொல்லுகிறது. கழனி - வயல். சீயம் - ஸிம்ஹம். போற்றுதல் - புகழ்தல். அஅ

போற்றரும் சீலத்திராமாநுச, நின்புகழ்தெரிந்து
சாற்றுவனேலது தாழ்வதுநீரில், உன்சீர்தனக்கோர்
ஏற்றமென்றே கொண்டிருக்கிலு மென்மனமேத்தியன்றி
ஆற்றகில்லாது, இதற்கென்னினைவா யென்றிட்டஞ்சுவனே.

எண்பத்தொன்பதாம்பாட்டு. "போற்றுவன்" என்றுபுகழ்வதாக ஒருப்பட்டவர், அது நிமித்தமாகத் தமக்குண்டான பலத்தை எம்பெருமானார்தமக்கு விண்ணப்பம் செய்கிறார்.

(க) " நாளுமென்புகழ் கோவுனசீலம் " என்னுமாபோலே புகழ்ந்து தலைக்கட்டவரிதான சீலகுணத்தையுடையவரே! தேவரீரு

(க) (உ) திருமொழி - கக - ச - சO.
(க) திருவாய் - ௬ - ரு - கO.

டைய கல்யாணகுணங்களை விவேகித்து லோகப்ரஸித்தமாம்படி பேசுவேனாகில், வஸிஷ்டகுணங்களைச் சண்டாளன் வர்ணித்துப் பேசுகை அவற்றுக்கவத்யமாய்த் தலைக்கட்டுமாபோலே அது இழிவாகாநிற்கும்; அப்படி பேசுகிறத்தைத்தவறில், தேவரீர் குணங்கள் தனக்கு ஒரு உத்கர்ஷமாயிருக்குமென்றுகொண்டே இராநிற்கச்செய்தேயும் என்னுடைய மநஸ்ஸானது தேவரீர் குணங்களை ஸ்தோத்ரம்பண்ணியொழிய தரிக்கமாட்டுகிறதில்லை. (உ)"மூர்க்குப்பேசுகின்றானிவனென்று முனிவாயேலுமென்னாவினுக் காற்றேன்" என்னுமாபோலே யிராநின்றது என்னுடைய தசை; இதுக்கு தேவரீர் எதுதிருவுள்ளம் பற்றுகிறதென்று(ஃ)பீதனாகாநின்றேன்.

சாற்றுதல் - ப்ரகாசமாகச் சொல்லுதல்.

நினையார்பிறவியை நீக்கும்பிரானை, இந்நீணிலத்தே
எனையாளவந்த விராமாநுசனை, இருங்கவிகள்
புனையார் புனையும் பெரியவர் தாள்களில் பூந்தொடையல்
வனையார், பிறப்பில் வருந்துவர் மாந்தர் மருள் சுரந்தே.

தொண்ணூறும்பாட்டு. இவர் "அஞ்சுவன்" என்றவாறே இவர் பயமெல்லாம் போம்படி குளிரக்கடாக்ஷிக்க, அத்தாலே நிர்பீகராய், கரணத்ரயத்திலும் ஏதேனுமொன்றால் இவ்விஷயத்திலே ஓராநுகூல்யத்தைப்பண்ணிப் பிழைத்துப்போகலாயிருக்க சேதநர் ஜந்மக்லேசத்தை யநுபவிப்பதே! என்று இன்னாதாகிறார்.

தம்மைநினைத்தவர்களுடைய ஜந்மத்தைப்போக்கு முபகாரசிலரானவிவரை நினைக்கிறார்களில்லை; (க)* நிகரின்றிநின்ற நீசதையையுடைய வென்னையங்கீகரித்துத் தம்முடைய குணங்களுக்கு தேசிகஞய் வாசகமிடும்படிபண்ணி இப்படியே யாளுகைக்காக,இப்பூமிப்பரப்பெல்லாம் கிடக்கச்செய்தே நான்கிடந்த விடந்தேடிவந்த எம்பெருமானரைத் தத்குண ப்ரகாசகமான பெரியகவிகளைத் தொடுக்கிறார்களில்லை; தாங்கள் கவிபுனையமாட்டுகிறிலர்களாகில் அவர் விஷயமாக கவிகளைத் தொடுக்கும் மஹாப்ரபாவருடைய திருவடிகளிலே பூமாலைகளை ஸமர்ப்பிக்கிறார்களில்லை; இத்தனைக்கும் யோக்யமான ஜந்மத்தைப் பெற்றிருக்கிறவர்கள் அறிவுகேடு மிக்கு ஜந்ம

(உ) பெரியாழ்வார் திரு-டு-க-க.

(க) சஅ.

மக்நராய் துக்கப்படாநின்றார்கள். ஐயோ! இவர்கள் பாக்ய ஹீநதை யிருந்தபடியென்!" என்று கருத்து.

"நினைவார்பிறவியை நீக்கும்பிரானை" என்றும்பாடஞ்சொல்லுவர்கள். புனைதல் - தொடுத்தல், வனைதல் - செய்தல். இத்தால் ஸமர்ப்பிக்கையைச் சொன்னபடி. வருந்துதல்-து:கித்தல். கூ0

மருள்சுரந்தாகமவாதியர் கூறும், அவப்பொருளாம்
இருள்சுரந் தெய்த்தவுலகிருள் நீங்கத், தன்னீண்டியசீர்
அருள்சுரந் தெல்லாவுயிர்கட்கும் நாதனரங்க னென்னும்
பொருள் சுரந்தான், எம்மிராமாநுசன்மிக்க புண்ணியனே.

தொண்ணூற்றாம்பாட்டு. இவர்களிப்படியிருக்கச்செய்தே இவர்களுடைய உஜ்ஜீவநார்த்தமாக எம்பெருமானார் செய்தருளின க்ருஷியை யநுஸந்தித்து அவரைக்கொண்டாடுகிறார்.

அஜ்ஞாநமெல்லாம் ஒருமுகமாகத் திரண்டு, ருத்ரப்ரோக்தமான ஆகமத்தை ப்ரமாணமாக அவலம்பித்துக்கொண்டு நின்று வாதம்பண்ணாநின்றுள்ள பாசுபதாதிகள் ருத்ரபரத்வஸ்தாபநார்த்தமாக அநேகோபபத்திகளைக்கல்பித்துக்கொண்டு சொல்லாநின்றுள்ள நிஹீநதரமான அர்த்தங்களாகிற தமஸ்ஸாலே மிக்கு அத்தாலே அவஸந்நமாய்ப்போன லோகத்தினுடைய அந்தகாரமானது போம்படியாகத் தம்முடைய ஆஶ்ரிதரக்ஷணங்களாகிற திரண்ட வைலக்ஷண்யத்தையுடைய க்ருபை ஒருமடைகொண்டு, ஸகலாத்மாக்களுக்கும் சேஷி பெரிய பெருமாளென்னும் அர்த்தத்தை யுபகரித்தார்; இவ்வர்த்தத்தை எமக்கு வெளியிட்டருளின எம்பெருமானார் பரமதார்மிகர்கிடீர்.

அன்றிக்கே, மிக்க புண்ணியனான எம்மிராமாநுசன். பொருள் சுரந்தானென்று க்ரியையாகவுமாம். அவப்பொருள் - பொல்லாத பொருள். "ஆகமவாதியர் கூறும் மறப்பொருள்" என்று பாடமானபோது-ஆகமவாதிகள் சொல்லுகிற காதுகமான வர்த்தமென்கை. காதுகமென்கிறது - ஆத்மநாசகமாகையாலே. அன்றிக்கே, "ஆகமவாதியர் கூறும் மறைப்பொருள்" என்று பாடமானபோது, (க) "[illegible] - தைஸ்சப்ரஸித்தவிபவஸ்ய ஸமூலதாயை க்ராஹ்யாத்ரயீ" என்கிறபடியே ஆகமமூலகநதாங்கள் சொல்லுகிற வர்த்தத்துக்கு மூலப்ரமாணமாக(உ)

(க) ரங்க - ஸ்த. உ. (உ)

"త్రయ్యామపి చ సామాన్య వాదశ్చిత్తవిభేదకః - த்ரய்யாமபிசஸாமாந்யவாதஸ்சித்தவிபேதகः" என்கிறபடியே ப்ரசம்ஸாபரமான வேத வாக்யங்களைப் பரிக்ரஹித்துக்கொண்டு வேதமுமிப்படியே சொல்லிற்றென்று ஆகமவாதிகள் சொல்லுகிற வேதார்த்தமென்றபடி. "இருள்சுமந்தெய்த்த" என்றும் பாடம்சொல்லுவர்கள். அப்போது- இருளை(த்)பரித்து அத்தாலே அவஸந்நமானவென்கை. ஈண்டுதல் - திரளுதல். சீர் - அழகு. புண்ணியனென்று - தார்மிகனென்றபடி. "இராமாநுசனென்னும் புண்ணியன்" என்றும் பாடம் சொல்லுவர்கள். அதுவும் இரண்டாம் யோஜனைக்குச்சேரும்.

புண்ணியநோன்பு புரிந்து மிலேன், அடி போற்றிசெய்யும்
நுண்ணருங்கேள்வி நுவன்றுமிலேன்,செம்மை நூற்புலவர்க்
கெண்ணருங் கீர்த்தி இராமாநுச இன்று நீ புகுந்தென்,
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நின்ற விக் காரணம் கட்டுரையே.

தொண்ணூற்றிரண்டாம்பாட்டு. சேதநர் இவ்விஷயத்தில் அல்பாநுகூல்யத்தாலே உஜ்ஜீவிக்கலாயிருக்க ஜந்மாதிதுःகங்களை யநுபவிக்கிறபடியையும், இவர்களுக்குஜ்ஜீவநார்த்தமாக எம்பெருமானார் செய்த க்ருஷியையும் அநுஸந்தித்தார் கீழிரண்டுபாட்டாலே; இப்பாட்டில், தாமறிய வொரு ஹேதுவின்றிக்கே யிருக்கத் தம்மை யங்கீகரித்தருளுகைக்கும், அங்கீகரித்தருளி பாஹ்யாப்யந்தரகரண விஷயமாய் எழுந்தருளியிருக்கிறபடியை யநுஸந்தித்து வி(ஸ்)்மிதராய், இதுக்குக்காரணமின்னதென்று அருளிச்செய்யவேணுமென்கிறார்.

இப்பேற்றுக்குறுப்பாக ஒருபுண்யவ்ரதத்தை யநுஷ்டிப்பதும் செய்திலேன்; திருவடிகளை யாஸ்ரயிக்கைக் குறுப்பான ஸூக்ஷ்மமாய் துர்லபமான ஸ்ரவணத்தை ஸ்ரவியாதவளவன்றிக்கே ஸ்ரவிக்கவேணுமென்று ப்ரஸங்கிப்பதும் செய்திலேன்; அநந்ய ப்ரயோஜநராய் சாஸ்த்ரரூபமான கவிகளைச்சொல்லவல்லவர்களுக்குப் பரிச்சேதிக்கவரிதான கீர்த்தியையுடையவரே! இப்படி நிரதிசய ப்ரபாவரான தேவரீர் அநாதிகாலம் செய்யாமல் இன்று புகுந்து என்னுடைய கட்கண்ணுக்கும் உட்கண்ணுக்கும் விஷயமாய் நின்ற இதின் ஹேதுவை தேவரீர் தாமே அருளிச்செய்யவேணும்.

"கட்டுரை" என்றது - சொல்லவேணுமென்றபடி. கட்டுரையென்று - ஒருமுழுச்சொல்லு. புரிதல் - செய்தல். நுவல்தல் -

சொல்லுதல். செம்மை - செவ்வை; இத்தால் - அநந்யப்ரயோஜநதையைச் சொன்னபடி. கூ௨

கட்டப்பொருளை மறைப்பொருளென்று, கயவர்சொல்லும்
பெட்டைக்கெடுக்கும் பிரானல்லனே, என் பெருவினையைக்
கிட்டிக்கிழங்கொடு தன்னருளென்னு மொள்வாளுருவி
வெட்டிக்களைந்த, இராமாநுசனென்னும் மெய்த்தவனே.

தொண்ணூற்றுமூன்றும்பாட்டு. அவர் இதுக்கொன்று மருளிச்செய்யாமையாலே ‘‘நிர்ஹேதுகமாகாதே’’ என்று தெளிந்து, என் ப்ரபலகர்மங்களைத் தம்முடைய க்ருபையாலே அறுத்தருளின எம்பெருமானார், ஒருவரபேக்ஷியாதிருக்கத் தாமேவந்து குத்ருஷ்டிமதங்களை நிராகரித்தவரன்றே, அவர் செய்யுமதுவெல்லாம் நிர்ஹேதுகமாகவன்றோ இருப்பதென்கிறார்.

இண்டைத்தூறுபோலே அண்டவொண்ணாதபடியிருக்கிற என்னுடைய மஹாபாபங்களைக்கண்டு பிற்காலியாதே வந்து கிட்டி, மீளவுங்கிளருகைக் குறுப்பாயிருக்கிற வாஸனையாகிற கிழங்கோடேகூடத் தம்முடைய க்ருபையாகிற தெளியக்கடைந்தவாளை, அங்கீகாராவஸரம் வருந்தனையும் புறம்தோற்றாதபடி மறைத்துக்கொண்டிருக்கிற தம்முடைய ஸங்கல்பமாகிற உறையைக்கழற்றிச்சேதித்துப்பொகட்ட ப்ரபந்நஜந கூடஸ்த்தரான எம்பெருமானார் (க) ‘‘పరం బ్రహ్మైవాజ్ఞం భ్రమపరిగతం సంసరతి - பரம்ப்ரஹ்மைவாஜ்ஞம்ப்ரமபரிகதம்ஸம்ஸரதி’’ இத்யாதிப்படியே நிஹீநதரமான அர்த்தங்களை வேதார்த்தங்களென்று (ஆ)கலரான குத்ருஷ்டிகள் சொல்லுகிற ப்ராமகவாக்யங்களைப்போக்கின உபகாரகரன்றோ? அவர்செய்தருளுவதெல்லாம் நிர்ஹேதுகமாக இருப்பதன்றோவென்றுசருத்து.

கட்டம்-கஷ்டம். பெட்டு-(ధౌ)ப்ராமகவாக்யம். மெய்த்தவன்-ஸ்வரூபாநுரூபமாகையாலே யதாவாயிருந்துள்ள சரணாகதிரூபதபஸ்ஸையுடையவனென்கை. (உ) ‘‘తస్మాన్న్యాసమేషాం తపసామతిరిక్తమాహుః - தஸ்மாந்ந்யாஸமேஷாந்தபஸாமதிரிக்தமாஹு:’’ என்று தபஸ்ஸுக்களில்மிக்கதபஸ்ஸாகச் சொல்லிற்றே சரணாகதியை.

---

(க) ரங் - ஸ்த - உ. (உ) தைத்தி - நாரா - ரு.

தவந்தரும் செல்வம்தகவும்தரும், சரியாப்பிறவிப்
பவந்தரும் தீவினைபாற்றித்தரும், பரந்தாமமென்னும்
திவந்தரும் தீதிலிராமாநுசன் றன்னைச் சார்ந்தவர்கட்
குந்தருந்தேன், அவன் சீரன்றியானொன்றுமுண் மகிழ்ந்தே.

தொண்ணூற்றுநாலாம்பாட்டு. தம்மை நிர்ஹேதுகமாக அங்கீகரித்துக் கர்மங்களைப்போக்கினபடியை யநுஸந்தித்தார் கீழ்; இப்பாட்டில், எம்பெருமானார், தம்மை யாஶ்ரயித்தார்க்கு ப்ரபத்தி நிஷ்டைதுடங்கி பரமபதபர்யந்தம் கொடுத்தருளுவரேயாகிலும் நான் அவர் குணங்களையொழிய ஒன்றையும் விரும்பி புஜியேனென்கிறார்.

ஆஶ்ரயித்தவர்களை அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்திகளிலொன்றினுடைய அலாபத்தாலே து:கப்படவிட்டிருக்கும் குற்றமில்லாத எம்பெருமானார், தம்மையாஶ்ரயித்தவர்களுக்கு, முதல் பூர்வவாக்யத்திற் சொல்லுகிற சரணாகதி நிஷ்டையைக் கொடுத்தருளுவர்; அநந்தரம், உத்தரவாக்யத்திற் சொல்லுகிற கைங்கர்யத்துக்கு ருசிவேண்டுகையாலே பக்தியாகிற ஸம்பத்தை ப்ராப்யாநுரூபமாகவும் கொடுத்தருளுவர்; பின்பு, (க) "சார்ந்தவிருவல்வினைகளும் சரித்து" என்கிறபடியே, ஒரு ஸர்வசக்திசரிக்கிலொழியச் சரியாததாய் ஜந்மப்ரயுக்தமான ஸம்ஸாரத்தை மேன்மேலுமுண்டாக்காநிற்கும் க்ரூரகர்மங்களை, (உ) "பண்டைவல்வினை பாற்றியருளினான்" என்கிறபடியே க்ஷோத்ரதூளியாம்படி பண்ணிக்கொடுப்பர்; பின்பு, (ங) "ಪರಂಧಾಮಾಕ್ಷರಪರಮವ್ಯೋಮಾದಿಶಬ್ದಿತೇ- பரந்தாமாக்ஷரபரம வ்யோமாதிசப்திதே" என்கிறபடியே பரந்தாமமென்று சொல்லப்படுகிற பரமாகாசமான ஶ்ரீவைகுண்டத்தைக் கொடுப்பர்; இப்படி அவர் எல்லாவற்றையும் தந்தாலும் நான் அவருடைய குணங்களை யொழிய வேறொன்றையும் மந:ப்ரீதியோடே விரும்பி புஜியேன்.

தருமென்றது - கொடுக்குமென்றபடி. "சலியாப்பிறவிப்பவம் தரும் தீவினை" என்று பாடமானபோது, சலிக்கையாவது - நிலைபேருகையாய், நிலைபேர்க்கவரிதாய் ஸம்ஸாரஹேதுவான துஷ்கர்மமென்றபடி. பவம்-(பு)பவம்; ஸம்ஸாரம். பாறு - பொடி. பாறுகை-பொடியாக்குகை. "மகிழ்ந்து" என்று ப்ரீதிவாசக சப்தமுண்

(க) திருவாய்-க-டு-கo. (உ) கண்ணிநுண்-எ.
(ங)

டாகையாலே, "உவந்து" என்கிறவிது விருப்பமாய், ஆதரவாசியாகிறது.

உண்ணின் றுயிர்களுக் குற்றனவே செய்து, அவர்க்குயவே
பண்ணும் பரனும் பரிவிலனும்படி, பல்லுயிர்க்கும்
விண்ணின் றலைநின்று வீடளிப்பா னெம்மிராமாநுசன்
மண்ணின் றலத்துதித்து, மறைநாலும் வளர்த்தனனே.

தொண்ணூற்றஞ்சாம்பாட்டு. எம்பெருமானர் தம்மை யாஶ்ரயித்தவர்களுக்கு உஜ்ஜீவநத்துக்கு வேண்டுவதெல்லாம் தாமேயுண்டாக்கி உஜ்ஜீவிப்பித்துவிடுவரென்றார் கீழ்; இப்படியிருக்கிறவருடைய ஜ்ஞாநசக்த்யாதிகளை அநுஸந்தித்தவாறே, இந்த லோகத்தில் உள்ளார்படியன்றிக்கே வ்யாவ்ருத்தமாயிருக்கையாலே, அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரிலே ஒருவர் பரார்த்தமாக ஸம்ஸாரத்திலே அவதரித்தாராகவே நினைத்தருளிச்செய்கிறாரிதில்.

(க) "యఆత్మానమన్తరోయమయతి - யஆத்மாநமந்தரோயமயதி" என்கிறபடியே, ஸத்தாநிர்வாஹார்த்தமாக உள்ளேநின்று, இவ்வாத்மாக்கள் யாதொருவழியாலே உஜ்ஜீவிக்கும், அதுக்கீடான க்ருஷிகளையேபண்ணி அவர்களுக்கு உஜ்ஜீவநத்தையே பண்ணுகின்றுள்ள (உ) *ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதந ஸ்வரூபஸ்த்திதிப்ரவ்ருத்திபேதனான ஸர்வஸ்மாத்பரனும் ஆத்மாக்களளவில் "இவரோபாதி ஸ்நேஹமுடையனல்லன்" என்னும்படியாக ஸகலாத்மாக்களுக்கும் (ங) "శ్రీవిష్ణులోకమణిమణ్డపమార్గదాయీ - ஶ்ரீவிஷ்ணுலோகமணிமண்டபமார்க்கதாயீ" என்கிறபடியே பரமபுருஷார்த்தலக்ஷணமோக்ஷத்தைக்கொடுத்தருளுவதாக நம்முடைய நாதரான எம்பெருமானர் (ச) "నాకస్యపృష్ఠే-நாகஸ்யப்ருஷ்டே" என்கிறபடியே விண்ணின்தலையான ஶ்ரீவைகுண்டத்தில் நின்றும் பூதலத்திலே தத்கததோஷ ஸ்பர்சமற அவதரித்து ஸர்வோஜ்ஜீவநசாஸ்த்ரமான ருகாதி சதுர்வேதத்தையும் அஸங்குசிதமாக நடத்தியருளினர். இப்படிசெய்தருளுவதே! என்று கருத்து.

"உற்றனவேசெய்து" என்றது-தக்கனவே செய்தென்றபடி. பரிவு-ஸ்நேஹம் *(பக்ஷபாதமாகவுமாம். "பல்லுயிர்க்கு" என்று பாடமாகிலும் பொருளொக்கும்.) கூ௫

(க) ப்ருஹ. (உ) ஶ்ரீவைகுண்டகத்யம். * குண்டலிதம் க்வாசித்கம்.
(ங) தாடீபஞ்சகம். (ச) தைத்தி - நாரா - க.

வளரும்பிணிகொண்ட வல்வினையால், மிக்க நல்வினையில்
கிளரும்துணிவு கிடைத்தறியாது, முடைத்தலையூன்
தளருமளவும் தரித்தும் விழுந்தும் தனிதிரிவேற்
குளரெம்மிறைவர், இராமாநுசன் றன்னை யுற்றவரே.

தொண்ணூற்றாறும்பாட்டு. "மறைநாலும் வளர்த்தனன்" என்றீர், அவர் தாம் சேதநர்க்கு உஜ்ஜீவனோபாயமாக வேதாந்த ப்ரக்ரியையாலே அருளிச்செய்தது பக்திப்ரபத்திரூபோபாயத்வயமிறே, அதில் ஸுகரோபாயமான ப்ரபத்தியேயோ உமக்கு நிஷ்டை யென்ன; அதுவுமன்று, தாம் அபிமாந நிஷ்டரென்னுமத்தையருளிச்செய்கிறார்.

நிரவதிகதுஃகாவஹமாய், அநுபவவிநாஸ்யமாதல் ப்ராயஸ்சித்த விநாஸ்யமாதல் செய்யாத ப்ரபலகர்மத்தாலே பரமதர்மமான சரணாகதியில் மஹாவிஸ்வாஸமென்பதொன்று நேராகக்கிடையாததாய், துர்க்கந்தாஸ்ரயபூதமாய், மாம்ஸாஸ்ருகாதிரூபமான சரீரம், (க) "தளராவுடலம்" என்கிறபடியே ப்ராணவியோகதசாபந்நமாய் கட்டுக்குலையுமளவும்(உ)"வன்சேற்றள்ளல் பொய்ந்நிலம்" என்றும் (ங) "பொதும்பினில் வீழ்ந்துவழுக்கி" என்றும், (ச) "கூடியழுங்கிக்குழியில் வீழ்ந்து வழுக்காதே" என்றும் சொல்லுகிறபடியே அள்ளலும் வழுக்கலுமான ஸம்ஸாரவிபூதியிலே தார்மிகருபகரித்த த்யாஜ்யோபாதேயமாகிற ஊற்றங்கோல்கொண்டுதரித்தும், துர்வாஸநாமூலமான அநவதாநத்தாலே (ரு) *கொடுவன்குழியான சப்தாதிகளிலே விழுந்தும் ஒருதுணையின்றிக்கே திரியாநிற்குமெனக்கு, என்தனிமைதீர எனக்குத் துணையாய் ஒருகுழியிலே விழாதபடி தாங்களே பிடித்து நடத்தி உஜ்ஜீவிப்பிக்கைக்கு நமக்கு சேஷியான எம்பெருமானாரை (சு) "தேவுமற்றறியேன்" என்று பற்றியிருப்பார் உளர். அவர்களபிமாநமே எனக்கு உத்தாரகமென்றுகருத்து.

"எம்மிறைவரிராமாநுசன் றன்னையுற்றவர்" என்று பாடமானபோது, எம்பெருமானாரையல்லது அறியோமென்று பற்றியிருப்பாராய், நமக்கு சேஷிகளானவர்களென்று யோஜிப்பது. பிணி - துஃகம். நல்வினை - ஸுக்ருதம். கிளரும் துணிவு-மிக்கதுணிவு. கிளர்த்தி-மிகுதி. முடை-துர்க்கந்தம். "மிக்கநல்வினையின் கிளரும்துணி

(க) திருவாய் - ரு - அ - அ. (ச) பெரியாழ் - திரு - ச - சு - சு.
(உ) திருவிரு - கoo. (ரு) திருவாய் - எ - க - கூ.
(ங) பெரியாழ் - திரு - ரு - உ - எ. (சு) கண்ணிநு - உ.

வு'' என்றும் பாடம்சொல்லுவர்; அப்போது பரமதர்மமான சரணாகதிக்கு அபேக்ஷிதமான மஹாவிஶ்வாஸமென்கை. கூசு

தன்னையுற்றாட் செய்யும் தன்மையினோர்,மன்னுதாமரைத்தாள்
தன்னையுற்றாட் செய்ய வென்னை யுற்றானின்று, தன்தகவால்
தன்னையுற்றா ரன்றித் தன்மை யுற்றாரில்லை யென்றறிந்து
தன்னையுற்றாரை, இராமாநுசன் குணம் சாற்றிடுமே.

தொண்ணூற்றேழாம்பாட்டு. இப்படி எம்பெருமானார்தம் மளவன்றிக்கே அங்குத்தைக்கைங்கர்யார்ஹராயிருப்பார் உத்தேஶ்யரென்றிருக்கைக்கு இந்தருசி உமக்கு வந்தவழிதானென்னென்ன; அதுவும் எம்பெருமானார்தம்முடை யக்ருபையாலேவந்ததென்கிறார்.

தம்மைப்பற்றியிருப்பாருண்டித்தனையொழியத் தம்மைப்பற்றியிருக்குமவர்களை குணகீர்த்தநம்பண்ணுகையாகிற ஸ்வபாவத்தி லுற்றிருப்பாரொருவருமில்லையென்று திருவுள்ளம்பற்றித், தம்மை யொழிய விஷயாந்தரமறியாதபடிபற்றித் தமக்கடிமைசெய்கையே ஸ்வபாவமாக உடையராயிருக்குமவர்களுடைய பரஸ்பரம்பொருந்தி பரமபோக்யமாயிருக்கிற திருவடிகளைத் தத்வ்யதிரிக்தங்களொன்றுமறியாதபடிபற்றி இவர்களுக்கு அடிமைசெய்யும்படியாக எம்பெருமானார் தம்முடைய க்ருபையாலே இன்று என்னை அங்கீகரித்தருளினார்.

தன்மை - ஸ்வபாவம். மன்னுதல் - பொருந்துதல். "தன்னையுற்றாரன்றித் தன்னையுற்றாரை - குணம்சாற்றிடும் - தன்மையுற்றாரில்லையென்றறிந்து - தன்னையுற்றாட்செய்யும் தன்மையினோர் மன்னுதாமரைத்தாள் தன்னையுற்றாட்செய்ய - இராமாநுசன் - தன்தகவால் - இன்று என்னையுற்றான்'' என்றந்வயம். கூஎ

இடுமேஇனிய சுவர்க்கத்தில், இன்னம் நரகிலிட்டுச்
சுடுமே யவற்றைத் தொடர்தரு தொல்லைச் சுழல்பிறப்பில்
நடுமே யினி நம் மிராமாநுசன் நம்மை நம்வசத்தே
விடுமே சரணமென்றால், மனமே நையல் மேவுதற்கே.

தொண்ணூற்றெட்டாம்பாட்டு. இப்படி எம்பெருமானார்செய்த உபகாரத்தைப் பேசினவாறே இவர் திருவுள்ளமானது, க்ருபாதிகபந்துவான ஈஶ்வரன் அநாதிகாலம் ஸ்வர்க்கநரககர்ப்பங்களிலே தட்டித்திரியவிட்டிருந்தது கர்மத்தைக் கடாக்ஷித்தன்றோ, ப்ரக்ருதி ஸம்பந்தம் கிடக்கையாலே தூர்வாஸநை மேலிட்டு விப

ரீதங்களிலே போகவும் யோக்யதையுண்டே? இன்னும் ப்ராப்தி பர்யந்தமானலிறே யென்று தளர, எம்பெருமானர் தம்மைச் சரணம் என்ருல் அப்படி யொன்றிலும் விட்டுக்கொடாராகையால் ப்ராப்தி நிமித்தமாக நீ க்லேசிக்கவேண்டாவென்கிருர்.

நம்மை யுத்தரிப்பிக்கைக்காக வந்தவதரித்த எம்பெருமானர், "தேவரேசரணம்" என்று ஒருக்திமாத்ரம் பண்ணினல் ப்ரக்ருதி வஶ்யர்க்கு சப்தாதிபோகவிஷயங்களாலே இனிதாகத் தோற்றியிருக்கும் ஸ்வர்க்கத்திலே இட்டுவைப்பரோ? தம்திருவடிகளைப் பற்றின பின்பும் நரகத்திலே இட்டுவைத்துத் தபிப்பிப்பரோ? அந்தஸ்வர்க்கநரகாநுபவத்துக் கீடானகர்மம் ஜந்மத்துக்குறுப்பாகையாலே அவற்றை அநுஸரித்துக்கொண்டிருப்பதாய், அநாதியாய், வளையவளைய வாராநின்றுள்ள ஜந்மத்திலே நிறுத்துவரோ? மேலுள்ளகாலம் நம்மை நம்முடைய ருச்யநுகுணமாகவிடுவரோ? ஆனபின்பு ப்ராப்திநிமித்தமாக நெஞ்சே! சிதிலமாகாதேகொள்.

மேவுதல் - பொருந்துதல்; அதாவது ப்ராபித்தல். "சோற்றுக்குக்கரையாதேகொள்"என்ருல்,சோறுநிமித்தமாகக் கரையாதேகொள்ளென்னுமாபோலே மேவுதற்கு நையலென்றது-மேவுதல் நிமித்தமாக வென்றபடி. நடுதல் - ஸ்த்தாபித்தல். ௯௮

தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும், தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும், நான்மறையும்
நிற்கக்குறும்புசெய் நீசரும்மாண்டனர் நீணிலத்தே
பொற்கற்பகம், எம்மிராமாநுச முனி போந்தபின்னே.

தொண்ணூற்றொன்பதாம்பாட்டு. "நம்மை நம்வசத்தேவிடுமே-மனமேநையல்" என்றவாறே; ஆனாலும், ஜ்ஞாந வ்யவஸாயங்களை பங்கிக்கும் பாஹ்யகுத்ருஷ்டி பூயிஷ்டமான தேசமன்ருேவென்ன; எம்பெருமானர் அவதரித்த பின்பு அவர்களெல்லாரும் நஷ்டரானர்களென்கிருர்.

(௧) "தருக்கினல் சமண்செய்து" என்கிறபடியே தர்க்கஸாமர்த்யத்தாலே ஸ்வமதபரிபாலநம் பண்ணுகிற ஆர்ஹதரும், (௨)"சமணரும் சாக்கியரும்" என்று அவர்களையெண்ணினல் இரண்டாம் விரலுக்கு விஷயமாம்படி அவர்களோடுதோள் தீண்டியாய், பேய்போலே விடுதல் பற்றுதலையறியாதே பிடித்தத்தைப் பிடித்துக்கொண்டு

(௧) திருமொழி - ௨ - ௨ - ௭. (௨) திருவாய் - ௪ - ௰ - ௪.

நிற்கிறபௌத்தரும், தன்னை ஈஶ்வரனென்று லோகமாராதிக்கவேணு மென்று அதுக்கீடாக, தீர்க்கஜடாதரனாய்க்கொண்டு ஸாதநமநுஷ்ட் டித்து பகவதநுமதியாலே மோஹசாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்த ருத்ரனுடைய வசநமான ஆகமத்தை அதிகரித்திருக்கிற தாமஸரான சைவரும், ப்ரமாண ப்ரமேய ப்ரமாதாக்களான விவைமூன்றுமி ல்லை யென்று ஸர்வஶூந்யவாதம் பண்ணுகிற மாத்யமிகரும், இவர் களைப்போலன்றிக்கே ருகாதிபேதத்தாலே நாலுவகைப்பட்டிருந்து ள்ள வேதத்தை ப்ரமாணமாக அங்கிகரித்துவைத்து (க) "ஜிஹ்ஸ்வ ேதஷு- திஷ்டத்ஸு-வேதேஷு" என்கிறபடியே அதுநிற்கச்செய் தே அத்தோடு ஒருஸம்பந்தமில்லாத அபார்த்தங்களைச் சொல்லி மூலையடியே நடத்துகிற ப்ரஹீணரான குத்ருஷ்டிகளும், ஸ்ப்ருஹ ணீயமான கல்பகம்போலே பரமோதாரராய், அது தன்னை நம க்கு ப்ரகாசிப்பித்தருளின எம்பெருமானார் மஹாப்ருதிவியிலே எழு ந்தருளின பின்பு முடிந்துபோனார்கள். ஶ்ரீபாஷ்யமுகேநதத்தந்மதங் களை பங்கித்து அஸத்கல்பமாக்குகையாலே அவர்கள் நஷ்டரா னார்களென்று கருத்து.

சாக்கியரென்றது-சாக்யரென்றபடி. மாத்யமிகரும் சாக்யவர்க் கத்திலேயாயிருக்கப் பிரித்தெடுத்தது - தந்மத க்ரௌர்ய விசேஷத் தைப்பற்ற.

௯௯

போந்ததென்னெஞ்சென்னும் பொன்வண்டு, உனதடிப்போதி [லொண்சீ

ராம்தெளிதேனுண்டமர்ந்திடவேண்டி, நின்பாலதுவே
ஈந்திடவேண்டு மிராமாநுசவிது வன்றி யொன்றும்
மாந்தகில்லாது, இனிமற்றொன்று காட்டிமயக்கிடலே.

நூறும்பாட்டு. இப்படி தாம் உபதேசிக்கக்கேட்டு க்ருதார்த்த மாய்த் தம்முடைய திருவுள்ளம் எம்பெருமானார் திருவடிகளிலே போக்யதாநுபவத்தை யாசைப்பட்டு மேல்விழுகிறபடியைக்கண்டு அதின் ஸ்வபாவத்தை அவர்க்கு விண்ணப்பம் செய்து, இனிவேறொ ன்றைக்காட்டி தேவரீர்மயக்காதொழிய வேணுமென்கிறார்.

என்னுடைய மநஸ்ஸாகிற அழகியவண்டு தேவரீருடைய திரு வடிகளாகிற பூவிலே சைத்யமார்த்தவ ஸௌரப்யாதி கல்யாணகுண ங்களாகிற நிர்மலமானமதுவைப் பாநம்பண்ணி அங்கே நித்யவாஸம்

(க)

பண்ண வேணுமென்று தேவரீர் பக்கலிலே வந்தது; அது இச்சி த்தையொழிய மற்றொன்றைக்கொடாதே அத்தையே தேவரீர் கொடுத்தருளவேணும்; மற்றொன்றைக் கொடுத்தருளிற்றாகிலும் அம்ருதாசிக்குப் புல்லையிட்டால் மிடற்றுக்குக் கீழிழியாதாப்போ லே ஈதொழியவேறொன்றையும் புஜிக்கமாட்டாது; தேவரீர் நினைத் தால் அதுவும் செய்விக்கலாம்; இனி வேறொன்றைக்காட்டி மயங் கப்பண்ணுதொழிய வேணும்.

"அன்பாலதுவே ஈந்திடவேண்டும்" என்றும் பாடஞ்சொல்லு வர். அப்போது, என்னுடைய ஹ்ருதயம், தேவரீருடைய திருவடி களில் போக்யதாநுபவார்த்தமாக அங்கே போந்தது, ஸ்நேஹபூர் வகமாக அத்தையே கொடுத்தருளவேணுமென்றபடி, போது-புஷ் பம். மாந்தல் - உண்டல். மயக்கம் - மோஹம். ௧00

மயக்கு மிருவினை வல்லியிற் பூண்டு, மதிமயங்கித்
துயக்கும் பிறவியில் தோன்றிய வென்னைத், துயரகற்றி
உயக்கொண்டு நல்கு மிராமாநுசவென்ற துன்னையுன்னி
நயக்கு மவர்க்கி திழுக்கென்பர், நல்லவ ரென்றுநைந்தே.

நூற்றோராம்பாட்டு. இப்படி எம்பெருமானாருடைய போக் யதையிலே நெஞ்சுவைத்தவாறே, முன்பு இவ்விஷயத்தில் தாம் பண்ணின பாவநத்வாநுஸந்தாநம் அவத்யமாய்த்தோற்றுகையாலே, நான் தேவரீருடைய பாவநத்வத்தைப் பேசினதானவிது தேவ ரீர் போக்யதையை யநுஸந்தித்திருக்குமவர்களுக்கு அவத்யமெ ன்று ஸத்துக்கள் சொல்லுவர்களென்கிறார்.

அறிவுகேட்டைவிளைக்குமதாய், புண்யபாபரூபத்தாலே இரு வகைப்பட்டிருந்துள்ள கர்மமாகிற பாசத்தாலேகட்டுண்டு அறிவு கலங்கி மனம் திரிவைவிளைப்பதான ஜந்மத்திலேவந்துஜநித்த என் னைக், கர்மபலமான துஃகங்களைப்போக்கி உஜ்ஜீவிக்கும்படி கைக்கொ ண்டு என்னளவில் ஸ்நேஹத்தைப் பண்ணியருளினவரே! என்று தேவரீருடைய பாவநத்வத்தைப்பேசினதானவிது, தேவரீரையநு ஸந்தித்துச் சிதிலராய் ஸர்வகாலமும் விருப்பத்தைப்பண்ணுமவர்க ளுக்குத் தண்மையென்றுசொல்லுவர்கள் ஸத்துக்களானவர்கள்.

நல்லவரென்று - தேவரீர்க்கு ஸ்நேஹிகளானவர்களென்னவு மாம். "இருவினைவல்லியைப்பூண்டு" என்று பாடமாயிற்றாகில், இருவகைப்பட்ட கர்மமாகிறபாசத்தைக் கழுத்துப்புக்கவாயோடு

போலே கழற்றவொண்ணாதபடி ஸ்வார்ஜநத்தாலேயிட்டுக்கொண்டேனென்று பொருளாகக்கடவது. மயக்குகை-மதிமயக்கப்பண்ணுகை. துயக்குகையாவது-மனம்திரிவைப்பண்ணுகை. துயக்கு-மனம் திரிவு. நயக்குகை - விரும்புகை. "மயக்குமிருவினை" என்று தொடங்கி "உயக்கொண்டு நல்கு மிராமாநுச என்றதிது - உன்னையுன்னி நைந்து என்றும், நயக்குமவர்க்கிழுக்கென்பர் நல்லவர்" என்றந்வயம். அதவா, உயக்கொண்டு நல்கு மிராமாநுசவென்றதிது உன்னை யநுஸந்தித்துவிரும்பும் ஸ்வபாவராயிருப்பார்க்குத் தண்மையென்று சொல்லாநிற்பர்கள் ஸத்துக்கள். இதில் அஸஹ்ஹதையாலே ஸர்வகாலமும் சிதிலராய்க்கொண்டு என்னவுமாம். க0க

நையும்மனமுன் குணங்களையுன்னி, என்நாவிருந்தெம்
ஐயனிராமாநுச னென்றழைக்கும், அருவினையேன்
கையுந்தொழும் கண் கருதிடும்காணக் கடல் புடைசூழ்
வையமிதனில், உன்வண்மை யென்பாலென் வளர்ந்ததுவே.

நூற்றிரண்டாம்பாட்டு. இப்படி பாவநத்வாநுஸந்தாநமும் அஸஹ்யமாம்படி பரமபோக்யபூதரான எம்பெருமானார் விஷயத்தில் தம்முடைய அந்தஃகரணத்தோடு பாஹ்யகரணங்களோடு வாசியற அதிமாத்ர ப்ரவணமாய்ச் செல்லுகிறபடியைச்சொல்லி, இந்த பூமிப்பரப்பெல்லாம் கிடக்கச்செய்தே தேவரீரௌதார்யம் என் பக்கலிலே வ(ர்)த்திக்கைக்கு ஹேதுவென்னென்கிறார்.

மநஸ்ஸானது தேவரீருடைய குணங்களை அநுஸந்தித்துத் தன்னிலே கிடந்துநையாநின்றது; என்னுடைய நாவானது ஒருபடிப்படவிருந்து, தேவரீருடைய நிருபாதிகபந்துத்வத்தையும் திருநாமத்தையும் சொல்லிக் கூப்பிடாநின்றது; இப்படியிருக்க உரியகரணங்களை அநாதிகாலம் அப்ராப்தவிஷயங்களுக்கு சேஷமாக்கின மஹாபாபியான வென்னுடையகையும் எப்போதும் தேவரீர் விஷயமாக அஞ்சலிபந்தத்தைப் பண்ணாநின்றது; கண்ணானது ஸர்வகாலத்திலும் தேவரீரைச் காண்கையிலே மநோரதியாநின்றது; கடலாலே சுற்றும் சூழப்பட்டிருந்துள்ள இந்த பூமியிலே இப்பரப்பிலுள்ளவர்களெல்லாம் கிடக்க, தேவரீருடைய ஔதார்யம் என்பக்கலிலே வளர்ந்தது என்கொண்டு?

அழைத்தல் - கூப்பிடுதல். கண் கருதிடுமென்று சேதநஸமாதியாலே சொல்லுகிறது.

வளர்ந்த வெங்கோப மடங்கலொன்ருய், அன்றுவாளவுணன்
கிளர்ந்த பொன்னுகங் கிழித்தவன், கீர்த்திப்பயிரெழுந்து
விளைந்திடும் சிந்தை யிராமாநுசனென்றன் மெய்வினைநோய்
களைந்து நன்ஞானமளித்தனன், கையில்கனி யென்னவே.

நூற்றுமூன்ரும்பாட்டு. இப்படி ஸர்வகரணங்களும் தம் பக்கலிலே ப்ரவணமாகைக்குறுப்பாக எம்பெருமானுர் தம்முடைய ஔதார்யத்தாலே உமக்கு உபகரித்த அம்சத்தைச் சொல்லீரென்ன; என்னுடைய கர்மத்தைக் கழித்து அழகிய ஜ்ஞாநத்தை விசதமாகத் தந்தருளினுரென்கிருர்.

(க) "முனைத்தசீற்றம்விண் சுடப்போய்" என்கிறபடியே அநுகூலரான தேவர்களுமுட்பட வெருவிநின்று பரிதபிக்கும்படி அத்யந்தாபிவ்ருத்தமாய் அதிக்ரூரமான சீற்றத்தையுடைய அத்விதீயமான நரஸிம்ஹமாய், சிறுக்கன்மேலே அவன்முடிகினவன்று (உ) "வயிறழல்வாளுருவிவந்தான்" என்கிறபடியே ஸாயுதனுய்க்கொண்டு எதிர்ந்த ஹிரண்யாஸுரனுடைய மிடியறவளர்ந்த ஸ்வர்ணவர்ணமான சரீரத்தை, (உ) "அஞ்சவெயிறிலகவாய் மடித்ததென்" என்கிறபடியே மொருந்த முகத்தையும் நாமடிக்கொண்ட உதட்டையும் குத்தமுறுக்கின கையையுங்கண்டு விளைந்தபயாக்நியாலே பரிதப்தமாய்ப் பதம்செய்தவாறே வாடினகோரையைக் கிழித்தாற்போலே அநாயாஸேநகிழித்துப் பொகட்டவனுடைய திவ்யகீர்த்தியாகிற பயிர் * உயர்நிலத்தில் பயிர் ஓங்கிவளருமாபோலே எழுந்து ஸபலமாம்படியான திருவுள்ளத்தையுடையராயிருக்கிற எம்பெருமானுர் என்னுடைய சரீராநுபந்திகர்மபலமான துஃகங்களைப் போக்கிக் கரதலாமலகம்போலே ஸுலபமுமாய் ஸுவ்யக்தமுமாயிருக்கும்படி விலக்ஷணமான ஜ்ஞாநத்தைத் தந்தருளினர். இதிறே கீழ்ச்சொன்ன ப்ராவண்யத்துக்கடியாக எம்பெருமானு ரெனக்குப்பண்ணின உபகாரமென்றுகருத்து.

மடங்கல்-ஸிம்ஹம். "கிளர்ந்தபொன்னுகம்" என்றது-மாற்றெழும்பின பொன்போன்ற சரீரமென்னவுமாம்.

கையிற்கனியென்ன கண்ணனைக் காட்டித் தரினும், உன்றன்
மெய்யிற்பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான், நிரயத்

(க) திருமொழி - ச - எ - எ. * (பா) உள்நிலத்தில்.
(உ) க - திரு - கூங.

தொய்யிற் கிடக்கிலும் சோதிவிண்சேரினு மிவ்வருள்நீ
செய்யிற்றரிப்பன், இராமாநுச வென்செழுங் கொண்டலே.

நூற்றுநாலாம்பாட்டு. உபதேசஜ்ஞாநலாபமாத்ரம் ரஸிக்கிற படி கண்டால் பகவத்விஷயத்தை ஸாக்ஷாத்கரித்தீராகில் உமக்கு எப்படி ரஸிக்கிறதோவென்று எம்பெருமானாருக்குக் கருத்தாகக் கொண்டு, பகவத்விஷயத்தை விசதமாகக்காட்டித்தரிலும் தேவரீர் திருமேனியில் ப்ரகாசிக்கிற குணங்களொழிய நான் வேண்டேன்; இதுக்கீடான ப்ரஸாதத்தைச் செய்தருளில் இரண்டு விபூதியிலும் கால்பாவுவன், அல்லது தரியேனென்கிறார்.

விலக்ஷணமான மேகம்போலே பரமோதாரராய் அது தன்னை யெங்களுக்குப் ப்ரகாசிப்பித்தருளினவரே! ஆஶ்ரிதவாத்ஸல்யனான ஸர்வேஶ்வரனை உள்ளங்கை நெல்லிக்கனிபோலே ஸாக்ஷாத்கரிப்பித்துத்தரிலும் தேவரீருடைய திவ்யவிக்ரஹத்தில் ப்ரகாசிக்கிற ஸௌந்தர்யாதி குணங்களொழிய நான்வேண்டேன்; ஸம்ஸாரகர்த்தமத்தில் †முழுகிக்கிடக்கவுமாம், சுத்தஸத்வ ‡குணமாகையாலே நிரவதிகதேஜோரூபமான பரமபதத்தை ப்ராபிக்கவுமாம், தேவரீருடைய திருமேனி குணத்தையே அநுபவித்திருக்கையாகிற இதுக்குறுப்பான ப்ரஸாதத்தை தேவரீர் செய்தருளில் ஏதேனுமோரிடத்திலும் கால் பாவிநிற்பன்; அல்லாதபோது தரிக்கமாட்டேனென்று கருத்து.

பிறங்குதல் - ப்ரகாசம். நிரயம் - (க) "விடியாவெந்நரகம்" என்கிற ஸம்ஸாரம். தொய்யில் - சேறு. தொய்யில் என்கிற விடத்தில் ஏழாம்வேற்றுமை குறைந்து கிடக்கிறது. "நிரயத்தொய்யில் கிடக்கிலென் சோதிவிண்சேரிலென்" என்று பாடமாகில், ஸம்ஸாரத்திலே கிடக்கிலென், பரமபதத்திலேபோகிலென், இவையிரண்டுங்கொண்டு எனக்குக் கார்யமில்லை, ஸம்ஸாரத்தினுடைய தோஷத்தையும் பரமபதத்தினுடைய வைலக்ஷண்யத்தையும் அநுஸந்தித்து இத்தைவிட்டு அத்தைப்பெற விருக்கிறேனல்லேன்; இவ்வநுபவத்தை தேவரீர் தரில் ஸம்ஸாரத்திலும் தரிப்பன், இது இல்லையாகில் பரமபதத்திலும்தரியேனென்கை. ௧0௪

செழுந்திரைப்பாற்கடல் கண்டுயில்மாயன், திருவடிக்கீழ்
விழுந்திருப்பார் நெஞ்சில்மேவு நன்ஞானி, நல்வேதியர்கள்
தொழுந்திருப்பாத னிராமாநுசனைத் தொழும்பெரியோர்
எழுந்திரைத்தாடுமிடம், அடியேனுக் கிருப்பிடமே.

† (பா) அழுந்தி. ‡ (பா) மயமாகையாலே.
(க) திருவாய் - உ - ௬ - எ.

நூற்றஞ்சாம்பாட்டு. எல்லாரும் ஸம்ஸாரம் த்யாஜ்யம் பரம பதமுபாதேயமென்று அறுதியிட்டு, வஸ்தவ்ய தேச மதுவே யென்று அங்கேபோக ஆசைப்படாநிற்க, நீர்பரமபதத்தையும் ஸம்ஸாரத்தையும் ஸஹபடியா நின்றீர்; உமக்கு வஸ்தவ்யதேசமாக நீர்தாம் அறுதியிட்டிருப்பது ஏதென்ன; அருளிச்செய்கிறார்.

அழகியதிரைகளையுடைத்தான திருப்பாற்கடலிலே (க) "கடலோதம் காலலைப்பக்கண்வளரும்" என்கிறபடியே துடைகுத்த உறங்குவாரைப்போலே அத்திரைகளானவை திருவடிகளை அநுகூலமாக அசைக்கக்கண்வளரா நிற்பானாய், (உ) *உறங்குவான்போல் யோகுசெய்கிற ஆஶ்சர்யத்தையுடையனான ஸர்வேஶ்வரனுடைய குணத்திலேபட்டு "ஜிதந்தே - ஜிதந்தே" என்று திருவடிகளின் கீழே விழுந்திருந்தஸ்வபாவத்துக்கு ஒருகாலும் சலநமற்றிருக்கிற (௩) *கலக்கமில்லா நல் தவமுனிவரும் "இதொருஜ்ஞாநவைபவமே!" என்று இத்தையேபலகாலும் ஶ்லாகித்துக்கொண்டுபோருகையாலே அவர்கள் நெஞ்சிலே மேவப்பட்ட விலக்ஷணமான ஜ்ஞாநத்தையுடையராய், பரமவைதிகரானவர்கள் ப்ரஹ்மாத்யநுவர்த்தநங்களைப்பண்ணாநின்றுள்ள திருவடிகளையுடையரான எம்பெருமானாரை; (௪) "ஸேவ்யமாநாஞ்சலிபுடா ஹ்ருஷ்டாঃ - நித்யாஞ்ஜலிபுடாஹ்ருஷ்டாঃ" என்கிறபடியே ஸதாநுபவம் பண்ணாநின்றுள்ள வைபவத்தையுடையவர்கள், அவ்வநுபவஜநித ஹர்ஷப்ரகர்ஷத்தாலே உடம்பு இருந்தவிடத்திலிராதே கிளர்ந்து கடலிரைத்தாற்போலே இரைத்துக்கொண்டு ஸஸம்ப்ரம வ்யாபாரங்களைப்பண்ணுமிடம் அவர்களடியானானவெனக்கு வஸ்தவ்யதேசம்.

செழுமை - அழகு; பெருமையுமாம். "பாற்கடல் பள்ளிகொள்மாயன்" என்றும் பாடஞ்சொல்லுவர். ௧0௬

இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம், மாலிருஞ்சோலை யென்னும் [னும்
பொருப்பிடம்மாயனுக்கென்பர் நல்லோர், அவைதன்னொடும்வந்
திருப்பிடம்மாய னிராமாநுசன் மனத்தின்றவன்வந் [வந்
திருப்பிடம், என்றனிதயத்துள்ளே தனக்கின்புறவே.

(க) க - திரு - ௧௬. (௩) திருவாய் - அ - ௩ - ௯0.
(உ) திருவாய - ௫ - ௪ - ௧௧. (௪) பார - மோக்ஷ.

நூற்றாறும்பாட்டு. இப்படி இவர்தமக்குத் தம்பக்கலுண்டான அதிமாத்ர ப்ராவண்யத்தைக்கண்டு, எம்பெருமானார், இவர் திருவுள்ளத்தை மிகவும் விரும்பியருள, அத்தைக்கண்டு உகந்து அருளிச்செய்கிறார்.

ஸ்வரூபரூபகுணவிபூதிகளால் ஆஶ்சர்யபூதனான ஸர்வேஶ்வரனுக்கு வஸ்தவ்யதேசம் ஸ்ரீவைகுண்டமும், வடக்குத் திருமலையும், திருமாலிருஞ் சோலையென்று ப்ரஸித்தமான திருமலையாகிற ஸ்த்தலமுமாக, (௧) "வைகுந்தம் கோயில் கொண்ட" (௨) "வேங்கடம் கோயில் கொண்ட" (௩) "அழகர்தம்கோயில்" என்று சொல்லாநிற்பார்கள் பகவத்தத்வத்தை ஸாக்ஷாத்கரித்திருக்கிற விலக்ஷணரானவர்கள்; அப்படிப்பட்டிருந்துள்ள ஸர்வேஶ்வரன் (௪) "அழகியபாற்கடலோடும்" என்கிறபடியே அந்த ஸ்த்தலங்கள்தன்னோடேகூடவந்து எழுந்தருளியிருக்கிற ஸ்த்தலம், எம்பெருமானார் திருவுள்ளத்திலே; இப்போது அவர் தாம் வந்து தமக்கு நிரதிசய ஸுகமாக எழுந்தருளியிருக்கிற ஸ்த்தலம் என்னுடைய ஹ்ருதயத்துக்குள்ளே. ௧0௬

இன்புற்ற சீலத்திராமாநுச, என்று மெவ்விடத்தும்
என்புற்ற நோயுடல்தோறும் பிறந்திறந்து, எண்ணரிய
துன்புற்று வீயினும் சொல்லுவதொன்றுண்டுன் தொண்டர் [கட்கே
அன்புற்றிருக்கும்படி, என்னை யாக்கியங்காட்படுத்தே.

நூற்றேழாம்பாட்டு. இப்படி தம்பக்கலிலே வ்யாமோஹத்தைப்பண்ணுகிற்கிற எம்பெருமானாருடைய திருமுகத்தைப் பார்த்து, தேவரீர்க்கு விண்ணப்பம் செய்யவேண்டுவதொன்றுண்டென்று தம்முடைய அபேக்ஷிதத்தை விண்ணப்பம் செய்கிறார்.

எத்தனையேனும் தண்ணியனான என்னுடைய ஹ்ருதயத்திலே வந்து புகுந்து அது தன்னைப் பெறுப்பேறாக நினைத்து ஆநந்த நிர்ப்பரராய் எழுந்தருளியிருக்கிற ஸௌசீல்யத்தை யுடையவரே! இப்படியிருக்கிற தேவரீர்க்கு விண்ணப்பம் செய்யவேண்டுவது ஒருகார்யமுண்டு; அதேதென்னில்; (௫)"ஐயார்கண்ட மடைக்கிலும் நின்கழ

(௧) திருவாய் - அ - ௪ - ௫. (௩) திருவாய் - ௨ - ௧0 - ௨.
(௨) திருமொழி - ௨ - ௧ - ௯. (௪) பெரியா - திரு - ௫ - ௨ - ௧0.
(௫) திருவாய் - ௨ - ௯ - ௩.

லெய்யாதேத்த" என்னுமாபோலே தோற்புரையே போமதன்றி யிலே அஸ்த்திகதமாய் நின்று நலியக்கடவ வ்யாதிகளுக்குபாஜநமான சரீரங்கள்தோறும் ஜநிப்பது மரிப்பதாய் அஸங்க்யேயதுஃகங்களை அநுபவித்து முடியிலும் ஸர்வகாலத்திலும் ஸர்வதேசத்திலும் தேவரீருக்கநந்யார்ஹரா யிருக்குமவர்களுக்கே மறுபாடுருவின ஸ்நேஹத்தை யுடையேனாயிருக்கும்படியாகச் செய்து என்னை அவர்கள் திருவடிகளிலே அடிமையாம்படி பண்ணியருளவேணும். இதுவே அடியேனுக்குப் புருஷார்த்த மென்றுகருத்து.

அன்பு-ஸங்கம். சீலமாவது - பெரியவன் தண்ணியனோடே புரையறக்கலக்கும் ஸ்வபாவம். என்பு-எலும்பு. துன்பு-துஃகம்.

அங்கயல்பாய் வயல் தென்னரங்கன், அணியாகமன்னும்
பங்கய மாமலர்ப் பாவையைப் போற்றுதும், பத்தியெல்லாம்
தங்கியதென்னத் தழைத்து நெஞ்சே நம் தலைமிசையே
பொங்கியகீர்த்தி, இராமாநுசனடிப்பூ மன்னவே.

## இராமாநுசநூற்றந்தாதி முற்றிற்று.

### திருவரங்கத்தமுதனார் திருவடிகளேசரணம்.

நூற்றெட்டாம்பாட்டு. நிகமத்தில், இப்ரபந்தாரம்பத்திலே (௧) "இராமாநுசன் சரணாரவிந்தம் நாம்மன்னிவாழ" என்ற ப்ராப்யம் தமக்கு யாவதாத்மபாவியாம்படி கைபுகுருகையும், அந்த ப்ராப்யருசிரூபபக்தி பௌஷ்கல்யமுமே தமக்கு அபேக்ஷிதமாகையாலே தது பயஸித்யர்த்தமாக, ஸ்ரீயாகையாலே (௨) "தேனமரும்பூமேல் திரு - நமக்கென்றும் சார்வு" என்கிறபடியே, ஸர்வாத்மாக்களுக்கும் என்று மொக்கச்சார்வாய் ஸம்பத்ரதையான பெரியபிராட்டியாரை யாஸ்ரயிப்போ மென்கிறார்.

நெஞ்சே! பக்திதத்வமானது நிரவசேஷமாக நம்மளவிலே குடிகொண்ட தென்னும்படி ஸம்ருத்தமாய் விஸ்த்ருதையான கீர்த்தியையுடையரான எம்பெருமானாருடைய திருவடிகளாகிற செவ்விப்பூ, மயிர்கழுவிப்பூச்சூட விருப்பாரைப்போலே எப்போதோவென்று ஆசைப்பட்டிருக்கிற நந்தலைமேலே நித்யவாஸம் பண்ணும்படி

(௧) ௧.        (௨) நா - திரு - ௧00.

யாக, (௧) "செங்கயல்பாய் நீர்த்திருவரங்கம்" என்கிறபடியே ஜலஸம்ருத்தியாலே அழகியகயல்கள் உகளாநின்றுள்ள வயல்களையுடைத்தாய், தர்சநீயமான கோயிலையே தமக்கு நிரூபகமாகவுடையரான பெரியபெருமாளுடைய அழகியதிருமார்விலே (௨) "இறையும்-அகலகில்லேன்" என்று நித்யவாஸம்பண்ணுகிற்பாளாய், ஶ்லாக்யமான தாமரைப்பூவைப் பிறப்பிடமாகவுடையளாய், நிருபாதிகஸ்த்ரீத்வத்தையுடையளான ஶ்ரீரங்க நாய்ச்சியாரை ஆஶ்ரயிப்போம்.

போற்றுதல் - வணங்குதல்; புகழ்தலுமாம்.

அடியில் (௩) "பூமன்னுமாது" என்றார், இங்கே (௪) "பங்கயமாமலர்ப்பாவை" என்றார்; அங்கே (௩) "பொருந்திய" என்றார், இங்கு (௪) "அணியாகமன்னும்" என்றார், அங்கு (௩) "இராமாநுசன் சரணாரவிந்தம் நாம் மன்னிவாழ" என்றார், இங்கு (௪) "நிலையிசையே இராமாநுசனடிப்பூமன்ன" என்றார்; அங்கு (௩) "நெஞ்சே" என்று திருவுள்ளத்தையும் கூட்டிக்கொண்டு உபக்ரமித்தார், இங்கு (௪) "நெஞ்சே" என்று திருவுள்ளத்தோடே கூட அநுஸந்தித்துத் தலைக்கட்டினார். இத்தால், ப்ராப்யருசி வ்ருத்தியும் ப்ராப்யஸித்தியுமாகிற ஸ்வரூபாநுரூபஸம்பத்ஸித்திக்கடி, ஸகலாத்மாக்களுக்கும் தத்ததிகாராநுகுணமாக அபேக்ஷித்த ஸம்பத்விஶேஷங்களை ஸ்வகடாக்ஷ விஶேஷங்களாலே உண்டாக்கியருளும் பெரியபிராட்டியாரென்றும், ப்ராப்யந்தான் ஆசார்யசரணாரவிந்தம் என்றும், (௫) "𑌅𑌤𑍍𑌰 𑌪𑌰𑌤𑍍𑌰 𑌚𑌾𑌪𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 - அத்ரபரத்ர சாபிநித்யம்" என்கிறபடியே யாவதாத்மம் விஶ்லேஷமற்றிருக்கையென்றும், இதுக்கு அதிகாரிகளும் இந்த ப்ராப்யத்தில் ஸஹ்ருதயமான ப்ராவண்யமுடையவர்களென்றும் சொல்லிற்றாயிற்று.

பெரியஜீயரருளிச்செய்த இராமாநுசநூற்றந்தாதிஉரை முற்றிற்று.

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

---

(௧) திருவாய் - எ - உ - ௧. (௨) திருவாய் - ௬ - ௧௦ - ௧௦.
(௩) ௧. (௪) ௧௦௮.
(௫) ஸ்தோத்ரரத்நம் - ௨.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த

# இயல்சாத்து வ்யாக்யாநம்.

## அவதாரிகை.

நம்பெருமாள் இயலநுஸந்தாநத்துடனே திருவீதி யெழுந்தருளின வநந்தரம் நம்மாழ்வார் ஸந்நிதியிலே இயல்சாத்து அநுஸந்தாநமாயிருக்கும், "நன்றும் திருவுடையோம்" இத்யாதித்தனியன்கள் இயலாவது-ஆழ்வார்கள் திவ்யஸூக்திகளான திவ்யப்ரபந்தங்களாகையாலே விசேஷித்து, செவிக்கினியசெஞ்சொல்லான செந்தமிழ்களையிறே உகந்துதிருச்செவிசாத்தியருளுவது, அவன்றானும். (க) "தென்னாவென்னுமென்னம்மான்" என்றும், (உ) "நின்றனக்குங்குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தானே" என்றும், சொல்லுகிறபடியே (ங) * செஞ்சொலாலெடுத்த தெய்வநன்மாலையிலேயிறே திருவுள்ளம் சென்றிருப்பது. (ச) "విద్యన్తే హి పరాశరాదిమునిభిః ప్రోక్తాః ప్రబన్ధాః పురా భక్త్యైవహి తే తథాపి సకలం త్యక్త్వా తురఙ్గేశ్వరః। భక్తానేవపరాఙ్కుశాది పురుషాంస్తత్తత్ప్రబన్ధాంశ్చ తాన్ అత్యాదృత్య సదోపలాళయతి యత్ తద్జ్ఞాపనం తత్ప్రియే" -வித்யந்தேஹி பராசராதிமுநிபி:ப்ரோக்தா:ப்ரபந்தா:புரா பக்தா ஏவஹிதே ததாபிஸகலம் த்யக்த்வாதுரங்கேஶ்வர:| பக்தாநேவபராங்குசாதி புருஷாந்தத்தத்ப்ரபந்தாம்ஶ்சதாந் அத்யாத்ருத்யஸதோபலாளயதி யத்தஜ்ஞாபநம் தத்ப்ரியே" என்றிறே இவற்றை நம்பெருமாளாதரித்துப் போருவது. அதுதான் (ரு) * நமோநாரணாவென்னும் சொன்மாலையாகையாலே எல்லாம் திருமந்த்ரார்த்தமாயிருக்கும். (சு) "நாரணற்கு ஞானத்தமிழ்புரிந்த நான்" என்றும், (எ) "நாமம் பலசொல்லி நாராயணாவென்று நாமங்கையால்தொழுதும்" என்றும், (அ) "இருந்தமிழ் நன்மாலையிணையடிக்கே சொன்னேன்" என்றுமிறே இவற்றின் வைலக்ஷண்யம். (கூ) "நாராயணன் நாமங்களே" (க0) "நாமங்களாயிர

(க) திருவாய்-க0-எ-ரு.
(உ) திருமொழி-எ-க0-க0.
(ங) ,, க-சு-க0.
(ச)
(ரு) க-தி-ருஎ.
(சு) உ-திரு-க.
(எ) ங-திரு-அ.
(அ) உ-திரு-எச.
(கூ) திருவாய்-ரு-கூ-க0.
(க0) ,, ,, ,, சக.

த்துள்''(௧)“நாராயணுவென்னும் நாமம்'' என்றிறே பராங்குச பரகாலாதிகள் திவ்யஸூக்தியும். நாராயணனேடே (௨)*நாலிரண்டெழுத்துக் கற்றவரிறே. (௩)“நின்திருவெட்டெழுத்துங்கற்று'' என்று தாமேயருளிச்செய்தார்.ஏவம்வித வைலக்ஷண்யமான திவ்யப்ரபந்தாநுஸந்தாநத்துடனே (௪) “குருந்தமொன்றொசித்தானெடும் சென்று கூடியாடிவிழாச்செய்து''என்றும் (௪) “கருந்தடமுகில்வண்ணனைக் கடைக்கொண்டுகைதொழும்பத்தர்கள்'' என்றும் (௫) “குமிறு மோசை விழவொலி'' என்றும் (௬) “ஒலிகெழுபாடல்பாடி யுழல்கின்றதொண்டர்'' என்றும் சொல்லுகிறபடியே, திருக்குரவை கோக்குமாபோலே திருக்கைகள் கோத்துக்கொண்டு (எ) “கோத்துக்குழைத்துக் குணலமாடித் திரிமினே'' என்கிறபடியே ஆடுவதுபாடுவதாய்த்திருவீதியிலே இயலநுஸந்தித்து (அ) “புரிந்தேத்தி யுன்னைப் புகலிடம்பார்த்து ஆங்கேயிருந்தேத்தி வாழுமிது'' என்று சொல்லுகிறபடியே மீண்டு உள்ளே எழுந்தருளும்போது மங்களாசாஸநம் பண்ணி, அவ்வளவில் நில்லாதே திவ்யதேசமங்களாசாஸநத்தோடே தலைக்கட்டும்படி சொல்லுகிறது. (நன்றும் திருவுடையோம்) இத்யாதியாலே.

## பிள்ளையுறங்கா வில்லிதாஸ ரருளிச்செய்த தனியன்.

நன்றுந் திருவுடையோம் நானிலத்தி லெவ்வுயிர்க்கும்
ஒன்றும் குறையில்லை யோதினோம்—குன்றம்
எடுத்தானடிசே ரிராமாநுசன்றாள்
பிடித்தார் பிடித்தாரைப் பற்றி.

இதில், தர்சநஸ்தாபகராய் குருபரம்பரைக்கு நடுநாயகமாயிருக்கிற எம்பெருமானார் ஸம்பந்தி ஸம்பந்திகளுடைய ஸம்பந்தமே ஸர்வஸம்பத்தென்றுஅத்தை ஸர்வாத்மாக்களுக்கும் ஸுப்ரஸித்தமாகச் சொன்னோமென்கிறது.

(நன்றும் திருவுடையோம்) என்று. அதாவது - “குன்றமெடுத்தானடி சேர் இராமாநுசன்தாள் பிடித்தார் பிடித்தாரைப்பற்றி நன்றும்திருவுடையோம், அத்தை மாநிலத் தெவ்வுயிர்க்கும் ஒன்றும்

(௧) தி-மொ-௧-௯-௧.
(௨)
(௩) தி-மொ-அ-௧0-௩.
(௪) பெரியாழ்-திரு-௪-௪-எ.
(௫) திருவாய்-௬-௫-௨.
(௬) தி-மொ-௪-௧-௪-௧0-
(எ) பெரியாழ்-திரு-௪-௬-௯.
(அ) உ-திரு-௬௫.

குறையில்லை-ஒன்றுங் குறைவில்லாதபடி நிறைவாக ஓதினோம்'' என்று அந்வயம்; பூர்ணோபதேசம்பண்ணினோமென்றபடி.(குன்றமெடுத்தானடிசேரிராமாநுசனுகையாவது)-(௧) ''యస్స ప్తహాయనో బాలః - யஸ்ஸப்தஹாயநோபாலஃ'' என்று ஏழுதிருநக்ஷத்ரத்திலே ஏழுநாள் ஒருபடிப்பட கோவர்த்தநோத்தாரணம்பண்ணின செயலிலே வித்தராயிற்று எம்பெருமானு ரவ்வடிகளை யாஶ்ரயித்திருப்பது.

அது தான் (௨) *மலையையெடுத்து மறுத்துரக்ஷித்தசெயலிறே. அத்தைப்பற்ற கோவர்த்தநதாஸரென்று திருநாமமும் சாத்தியருளினாரிறே. ஆழ்வானும் (௩) ''గోవర్ధనో గిరివరో యమునానదీసా-கோவர்த்தநோகிரிவரோயமுநாநதீஸா'' என்றிறே அருளிச்செய்தது. அன்றிக்கே, (௪) * குன்றமெடுத்த பிரானடியாரொடும் ஒன்றிநின்ற சடகோபனை அந்த மாறனடி பணிந்துய்ந்தவராயிறே உடையவர் தாமிருப்பது. (௫) ''குன்றமெடுத்து ஆனிரைகாத்தவன்றன்னை'' (௬) ஆயனாயன்று குன்றமொன்றெடுத்தானரங்க மாநகரமர்ந்தானே'' (௭) ''ஆழிவண்ணநின்னடியிணையடைந்தேன்.'' என்று ஆஶ்ரிதபாரதந்த்ர்யத்திலேயிறே திருமங்கையாழ்வாரும் ஊன்றியிருப்பது; அத்தைப்பற்ற (௮) ''குறையல் பிரானடிக்கீழ் விள்ளாதவன்பனிராமாநுசன்'' என்று விசேஷித்து அங்கே மண்டியிருப்பர்.

(௯) ''குன்றமொன்றெடுத்தேந்தி'' (௧௦) குன்றமெடுத்து மழைதடுத்து'' என்று தத்விஷயத்திலேயாயிற்று இவர் ஆதரித்துப்போருவது. (௧௧) ''குன்றெடுத்தானிரை மேய்த்து அவை காத்தவெங்கூத்தாவோ'' (௧௨) ''காத்தவெங்கூத்தாவோ மலையேந்திக் கல்மாரிதன்னை'' என்றாரிறே. ஆகையால் குன்றமெடுத்தானடியாயிற்று ஆழ்வார்களிருப்பது. அவர்களைச் சேர்ந்திறே எம்பெருமானார் தாமிருப்பது. ஏவம்விதரானவரை;(௧௩) ''రామానుజస్య చరణౌ శరణం ప్రపద్యే'' ராமாநுஜஸ்யசரணௌசரணம் ப்ரபத்யே'' (௧௪) రామానుజ

(௧)
(௨) திருவாய்-௩-௫-௩.
(௩) அதிமா-ஸ்த-௪௯.
(௪) திருவாய்-௭-௪-௧௧.
(௫) திருமொழி-௧௧-௮-௧௦.
(௬) ,, ௫-௭-௯.
(௭) ,, ௫-௮-௧.
(௮) இரா-நூ-௨.
(௯) திருமொ-௧௧-௧-௧.
(௧௦) ,, ௧௧-௨-௧.
(௧௧) திருவாய்-௭-௬-௨.
(௧௨) ,, ௭-௬-௩.
(௧௩) வை-ஸ்த-௧.
(௧௪) ர-ஸ்த-௧-௨.

பதச்சாயா· ராமாநுஜபதச்சாயா" என்றிறே இராமாநுசன் தாள் பிடித்தார் படியிருப்பது. அவரைப்பிடித்தாராகிறார் - பட்டர். எம்பாரும், ஆழ்வானுமிறே அவர்க்கு ஆசார்யர்கள். பிடித்தாரைப் பற்றினாராகிறார் - இவர்களுக்கு சேஷபூதரானபட்டரை யாஶ்ரயித்த வேதாந்தி-நஞ்சீயர். இவ்வளவு மருளிச்செய்தது, ஸ்ரீமாதவஸமாஶ்ரயணமஹாதநரான நம்பிள்ளை துடக்கமானாரைக் காட்டுகிறது.

*சீமாதவனடிக் கன்புசெய்யும் தஞ்சத்தொருவனிறே. "பிடித்தார்பிடித்தார்" என்றாரிறே. (பிடித்தாரைப்பற்றி நன்றுந்திருவுடையோமாவது) - (௧) "இராமாநுசனென்றன் மாநிதி" என்னும்படியான எம்பெருமானாருடைய ஸம்பந்திபரம்பரையைப்பற்றி (நன்றும் திருவுடையோம்) விலக்ஷணமான ஐஶ்வர்யத்தையுடையோம்; அதாவது - (௨) சென்றொன்றிநின்ற கைங்கர்ய ஶ்ரீயையாதல், (௩) "ஸாஹி ஸ்ரீரம்ருதா ஸதாம்-ஸாஹிஸ்ரீரம்ருதாஸதாம்" என்கிற ப்ரமாண ஶ்ரீயையாதல். (௪) "உறுபெருஞ்செல்வமும்." அன்றிக்கே, ப்ரமாதாக்களான ஆசார்யர்கள் திருவடிகளாகிற ஐஶ்வர்யமாகவுமாம். ஆகையாலே, இதுவே பரமார்த்தமென்னுமத்தை ஸங்கோசமற ஸர்வருமறியும்படி சொன்னேனென்னுதல்; இப்படி சொல்லுகையாலே இவர்களுக்கு ஒரு குறைகளுமில்லையென்னுதல்.

இப்பால் குருபரம்பரையின் கௌரவ்யதை எம்பெருமானாரடியாயிருக்கும், அவர்க்கு ஆழ்வாரடியாயிருக்கும். (நானிலத்திலெவ்வுயிராவது) - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், என்கிற நாலுவகைப்பட்ட நிலமென்கை. பாலை, நாலிலும் நீர்மறுத்தகாலமுண்டாயிருக்கும், ஆகையாலே "நானிலம்" என்றது. ஸர்வாதிகாரமாகையாலே "நானிலத்தெவ்வுயிர்க்கும்" என்றது. திருமலைமுதலான திவ்யதேசங்களும் அந்நிலங்களிலேயிறே யிருப்பது. அவ்வவதேசதநர்க்கெல்லாம் ஆசார்யஸம்பந்தமறியவேணுமிறே. ஆகையால் இவர்களுக்கு ஆத்மஹிதநிமித்தமாக ஒருகரைச்சல்படவேண்டாவென்றபடி. இத்தால், இயற்பாக்களுக்கெல்லாம் எம்பெருமானாரடியென்னுமர்த்தஞ்சொல்லிற்று.

(௧) இரா-நூ-௨௧. (௩)
(௨) ௪-தி-௫-௬௧. (௪) இரா-நூ-௯௬.

நூற்றந்தாதி ப்ரதிபாத்யர் எம்பெருமானாரிறே; அதுதோன்ற திருவரங்கத்தமுதனாரிறே பெரிய பெருமாள் ஸந்நிதியில் சேர்த்தியிலே இயற்பா விண்ணப்பஞ்செய்து போருவது; "இராமானுசன் றாள் பிடித்தார் பிடித்தார்" என்று இவரைச் சொல்லவுமாம். அத்தையிறே (௧) "இனியென்குறை நமக்கு எம்பெருமானார் திருநாமத்தால்" என்று துடங்கி (௧) "தன் திருவரங்கத்தமுதாகிய புண்ணியனே" என்கிறது. (௧)

வாழி திருக்குருகூர் வாழி திருமழிசை
வாழி திருமல்லிவளநாடு—வாழி
சுழிபொறித்த நீர்ப்பொன்னித் தென்னரங்கன்றன்னை
வழிபறித்த வாளன் வலி.

இனி (௨) "ஆழ்வார்கள் வாழி யருளிச்செயல்வாழி" என்னுமாபோலே திவ்யப்ரபந்த வக்தாக்களான ஆழ்வார்களோபாதி அவர்கள் அவதரணஸ்த்தலங்களும் மங்களாசாஸநத்துக்கு விஷயமென்கிறது, (வாழி திருக்குருகூர்வாழி திருமழிசையென்று). முதலில் (௩) "க்ருதமாலா பயஸ்விநீ-தாம்ரபர்ணீநதீ" என்று ப்ரதமோபாத்தமாகநம்மாழ்வார் அவதரணஸ்த்தலம்ஸூசிதமாகையாலே, இங்கும் ஆழ்வார்களையெல்லாம் அவயவபூதராகவுடைய நம்மாழ்வார் அவதரணஸ்த்தலத்தை முந்துறச்சொல்லுகிறது.

(வாழிதிருக்குருகூர்) திருக்குருகூர் வாழுகையாவது (௪) "நல்லார்பலர்வாழ் குருகூர்" என்றும், (௫) "குழாங்கொள் தென்குருகூர்" என்றும், (௬) "சயப்புகழார் பலர்வாழும் தடம்குருகூர்" என்றும் ஆழ்வாரைத் திருவடிதொழுகிற ஸ்ரீவைஷ்ணவஸ்ரீமாறு தொழியவேணுமென்றபடி.

(வாழிதிருமழிசை) அதாவது - (௭)* திருமழிசைப்பரன் வருமூரான திருமழிசை வளம்பதிவாழவேணுமென்கிறது. (௮) "உலகுதன்னை வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர்மழிசையே வைத்தெடுத்தபக்கம் வலிது" என்னும்படி மஹீஸாரக்ஷேத்ரமுமாயிருக்கும்; ஆகை

(௧) இரா-நூ-௧௦௮.
(௨) உப-ரத்தி-௩.
(௩) பாகவ-௧௧.
(௪) திருவாய்-௧௦-௮-௧௧.
(௫) திருவாய்-௨-௩-௧௧.
(௬) திருவாய்-௩-௧-௧௧.
(௭) திருச்ச-வி-௧௦௮.
(௮) ,,

யாலே அந்தஸ்த்தலத்திலே பக்திஸாரருடைய சரணாரவிந்தங்களிலே ப்ரவணராய் ஸேவித்துக்கொண்டு போருகிற ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயோடே அந்தஸ்த்தலம் வாழவேணுமென்றபடி. (க) *[illegible]ருளபூ[illegible]பாஸ்கரரும், (உ) "[illegible]நாயிறு"என்கிறபடியே ஜ்ஞாந ப்ரபையையுடைய பக்திஸாரர் தக[illegible] ஆதிப்ரகாசராயிறேயிருப்பது. இப்படி ஜ்ஞாநவத்தக்க [illegible]தசிகாமிமதமான தேசத்துக்கு அஜ்ஞாநாலே அநர்த்தம் வா[illegible]தொழிய வேணுமென்று ஆசாஸிக்கிறது. திருமழிசைப்பிரானுடைய அவதாரஸ்த்தலத்தைச் சொன்னபோதே அவர்க்குத்தேஶ்யரான முதலாழ்வார்கள் மூவருடைய அவதாரஸ்த்தலமான கச்சி மல்லை மாமயிலையும் அப்படி வாழவேணுமென்றபடி.

(வாழிதிருமல்லிவளநாடு) பெரியாழ்வாருடையவும் ஆழ்வார் திருமகளாருடையவும் திருவவதாரத்துக்குப் பாங்கான ஶ்ரீவில்லிபுத்தூரையடுத்து அணித்தான நாடென்கை. மல்லிதன்னுடும் வில்லிபுத்தூரும் சேர்த்தியாயிறே யிருப்பது. அதுதான் (௩)"கோவிந்தன் குணம்பாடி" என்று(௪) *கோவிந்தன் குணம் பாடுவாருள்ளநாடிறே.

(வாழி சுழிபொறித்தநீர்ப் பொன்னித் தென்னரங்கன்தன்னை வழிபறித்தவாளன்வலி) நாநாவர்தங்களோடே கூடின ஜலஸம்ருத்தியாலே அருகுகின்ற பதார்த்தங்களை உள்ளே க்ரஸிக்குமதான திருப்பொன்னியாலே சூழப்பட்டு (௫)புண்ணந்துழாமே பொருநீர்த் திருவரங்காவருளாய்" என்னும்படி ஸ்வஸம்பந்தத்தாலே ஜலப்ரக்ருதிகளையும் ஜயிப்பிக்குமவராய், இப்படி ஜலஸம்ருத்தியையுடைய கோயிலே தமக்கு நிரூபகமாம்படியான அழகிய மணவாளப்பெருமாள் வயலாலிமணவாளராய் திருவாலியிலே திருமணம்புணர்ந்து திருவரசடியாக எழுந்தருள, அவரை வழிபறித்து அதின்பின்பு (௬) "வாள்வலியால்மந்திரம்கொள்மங்கையர்கோன்" என்னும்படி திருமந்த்ரத்தை அர்த்தஸஹிதமாக யறிந்தாரிறே; ஆகையாலவ்வி[illegible] திருமணங்கொல்லையாயிற்று.

---

(க) சடகோபாஷ்டட-௪.
(உ) திருச்ச-வி-௧௧௪.
(௩) நாய்ச்சி-திரு-அ-௩.
(௪) பெரி-திரு-௪-௬-அ.
(௫) திருவிரு-௨அ.
(௬) திருமொ-௯னி.

(க) * அரங்கத்துறையுமின்றுணைவனையிறே வழிபறித்தது, எல்லார்க்கும் வழிகாட்டுமவரிறே. வழிபறித்தவாளன்வலிவாழ்கை யாகையாவது - (உ) "சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி" என்னுமாபோலே. இத்தால் தத்ரஸ்த்தரான ஆழ்வாரையும் திருமணங்கொல்லையையும் நினைக்கிறது. தேசத்தை ஆசாஸிக்கிற ப்ரகரணமிறே. திருமந்த்ரார்த்தம் பெற்றஸ்த்தலமிறே ஜந்மதேசமாவது.

திருநாடுவாழி திருப்பொருநல்வாழி
திருநாட்டுத் தென்குருகூர்வாழி—திருநாட்டுச்
சிட்டத்தமர் வாழி வாழி சடகோபன்
இட்டத்தமிழ்ப்பாவிசை.

கீழே "வாழிதிருக்குருகூர்" என்றத்தை விஸ்தரேண நாட்டோடேகூட எல்லாவற்றையும் வாழ்த்துகிறது. (திருநாடுவாழி) என்று)

திருவழுதிவளநாட்டுக்கு "திருநாடு" என்றிறேதிருநாமம். "திருநாட்டுஸ்ரீவைஷ்ணவர்கள்" என்றிறே அத்தேசிகர்க்கு நிரூபகம். (ங) * தெளிவிசும்பு திருநாட்டோடு ஒப்புச்சொல்லுமத்தனை; ஆகையால் இதுவும் மேலைத்திருநாடுபோலே வாழவேணுமென்கிறது. (திருப்பொருநல்வாழி) அந்நாட்டை நலம்பெறுத்துகிறவர்களிறே; (ச) * பொருநற்சங்கணிதுறைவன். விரஜையும்சுத்த ஸத்வத்துக்கடியாயிருக்கும், இதுவும் சுத்த ஸ்வபாவர்சேரும் துறையையுடைத்தாயிருக்கும். முக்தாகரமிறே; அவ்வாகரத்துக்குக் குலைத்தலின்றிக்கே ஸம்ருத்தமாய்ச் செல்லவேணும்.

இனி, (ரு) "வாய்ந்தவழுதிவளநாடன் மன்னுகுருகூர்ச்சடகோபன்" என்றும், (சு) "திருவழுதிநாடென்றும் தென்குருகூரென்றும்" என்றும் சொல்லுமாபோலே (திருநாட்டுத்தென்குருகூர்வாழி) என்கிறது. வானாட்டில் (எ) * கண்ணன் விண்ணூர்போலே (சு) * திருநாட்டுத் தென்குருகூர் நகரமும் ஸம்ருத்தமாய்ச் செ

---

(க) திருமொ-ங-எ-சு. (ரு) திருவாய்-ரு-சு-கக.
(உ) திருப்பாவை-உச. (சு) திருவாய்-தனி.
(ங) திருவாய்-க-எ-ரு. எ) திருவிரு-சஎ.
ச) திருவாய்-கO-ங-கக.

ல்லவேணும். (திருநாட்டுச் சிட்டத்தமர்வாழி) திருநாட்டில் (௧) * வானுடமரும் தெய்வத்தினம்போலே இந்தத் திருநாட்டில் சிஷ்டரா யிருக்கும் (௨) * கேசவன்தமரான ஸ்ரீவைஷ்ணவர்கள்; (௩) "கிடந்தான் தமர்கள்கூட்டம்" என்றும் (௪) "தமர்கள் தமர்கள் தமர்களாம் சதிரே வாய்க்க தமியேற்கு" என்றுமிறே ஆழ்வாரும் ஆதரித்துப் போருவது; ஏவம்விதரானவர்களும் (௫) "பொலிகபொலிக" என்னும்படி ஸம்ருத்தியோடே வாழவேணும்.

(வாழிசடகோபனிட்டத் தமிழ்ப்பாவிசை) அதாவது - (௬) "சடகோபன் பன்னியதமிழ்மாலை" என்னும்படி ஆழ்வாராலே அருளிச்செய்யப்பட்டதாய், சந்தோரூபமாய் (௭) "இசைமாலை" என்னும்படி காநத்தோடேகூடி மதுரமாயிருப்பதொன்றென்கை. இசையென்று-இசைக்கப்பட்டதாய், சப்தஸந்தர்ப்பத்தைச் சொன்னதாகவுமாம்; அன்றிக்கே, சிட்டத்தமர்க்கிட்ட தமிழ்மாலையாயிருக்கும் என்றாகவுமாம். எம்பெருமானுக்கு இட்டத்தமிழ்ப்பாவென்றாகவுமாம். "இட்டப்பாட்டுக் கேட்கப்போகிறோம்" என்றிறே திருக்குறுங்குடிநம்பியும் அருளிச்செய்துபோருவது. அங்ஙனுமன்றிக்கே, இட்டத்தை - இட்டுச்சொன்னத்தைச், சொல்லும் அந்தாதியென்றாகவுமாம். ஆக, எல்லாவற்றாலும், ஆழ்வாரருளிச்செய்த தமிழ் அச்செவ்விமாறாதொழியவேணுமென்று சொல்லிற்று.

மங்கைநகர் வாழி வண்குறையலூர் வாழி
செங்கை யருள் மாரி சீர்வாழி—பொங்குபுனல்
மண்ணித்துறை வாழி வாழிபரகாலன்
எண்ணில் தமிழ்ப்பா விசை.

(மங்கைநகர்வாழி) கீழே "வழிபறித்தவாளன்வலி" என்றத்தை விஸ்தரிக்கிறது. பராங்குசர் தேசவைபவத்தை ஆசாஸித்தவநந்தரம் பரகாலன் தேசவைபவத்தை ஆசாஸிக்கிறது.

(மங்கைநகர்வாழி) என்று அதுவேநிரூபகமாம்படி திருமங்கையாழ்வாரென்றிறே திருநாமம். அது தான் குடிப்பேரிறே, (அ) "வாழி

---

(௧) திருவிரு-௨௬.
(௨) திருவாய்-௨-௭-௧.
(௩) திருவாய்-அ-௧௦-அ.
(௪) திருவாய்-அ-௧௦-௧.
(௫) திருவாய்-௫-௨-௧.
(௬) திருவாய்-௨-௭-௧௩.
(௭) திருவாய்.
(அ) முமுக்ஷுப்படி-தனி.

முடும்பையென்னும் மாநகரம்'' என்னுமாபோலே இப்போதும் மங்கைமடத்தையும் சிங்கப்பெருமாளையும் ஸேவிக்கலாயிருக்கும்(க) "கலிகெழுமாடவீதி வயல்மங்கை மன்னுகலிகன்றி" என்றும், (உ) "மன்னுமாமணிமாட மங்கை வேந்தன்" என்றும் (ங) "வயல்மங்கை நகராளன்'' என்றும் தாமேயருளிச்செய்தாரிறே. ஆகையால் அந்த ஸம்ருத்திமாறு தொழியவேணுமென்கிறது.(வண்குறையலூர்வாழி) அதுதான் அவதரணஸ்த்தலமிறே. திருவழுதிவளநாட்டுக்குத் திருக்குருகூர்போலே திருவாலிதிருநாட்டுக்குத் திருக்குறையலூரும்.

"திருவழுதிநாடுதாஸர்" "திருவாலிநாடுதாஸர்'' என்றிறே அத்தேச நாமத்தை தேசிகர் நடத்திப்போருவது. அதுக்கு வண்மையாவது - அழகும் ஔதார்யமும்; ஆழ்வார் அவதரிக்கையாலே வந்த அழகும், ஆழ்வாரையுண்டாக்கின ஔதார்யமும்; (ச) "வண்குருகூர்" என்னுமாபோலே. ஏவம்விதவைலக்ஷண்ய ஸ்த்தலமும் உத்தேஸ்யமாகையாலே வாழவேணுமென்கிறது. (செங்கையருள்மாரி சீர்வாழி) செங்கையாவது - சிவந்து அழகியதாய் உபகரிக்குமதாயிருக்கும்கை. உபயார்த்தத்தையும் வழங்குமதாயிறே திருக்கைதானிபது. (ரு) "செங்கையாளன்'' என்னக்கடவதிறே.

அன்றிக்கே கண்ணனை வழிபறிக்கைக்குக்கேடகமும் வாளுமுடைய கையாகவுமாம். (அருள்மாரி) (௬) * திருமாமகளால் அருள்மாரியிறே. (எ) "திருமாலாலருளப்பட்ட சடகோபன்" என்னுமாபோலே தம்மை விசேஷகடாக்ஷம்பண்ணின (அ)*மழைக்கண் மடந்தையான(௯)*பங்கயத்தாள் திருவருள்போலேயிறே தாமும் அருளாலே திருமந்த்ரார்த்தத்தைச் சேதநர்க்குவர்ஷிப்பது. (கo) "நானும் சொன்னேன் நமருமுரைமின் நமோநாராயணமே."(கக)"பாடுமின்" (கஉ) "இருமின்" (கங) "தொண்டீர் தூஞ்சும்போதழைமின்" என்றுபிறே இவர்பரோபதேசமிருப்பது. அவர்க்குச் சீராவது-ஜ்ஞாந சக்தி வைராக்யாதி கல்யாணகுணமாதல், கைங்கர்ய ஸ்ரீயாதல்.

---

(க) திருமொழி-க-௬-கo.
(உ) திருநெடு-௩o.
(ங) திருமொழி-௬-௯-கo.
(ச) திருவாய்-௯-எ-கக.
(ரு) திருமொழி-க-எ-கo.
(௬) திருமொழி-அ-௬-கo.
(எ) திருவாய்-அ-அ-கக.
(அ) திரு-விரு-ருஉ.
(௯) திருவாய்-அ-உ-௪.
(கo) திருமொழி-௬-கo-௬.
(கக) தி-மொ-எ-௩-கo.
(கஉ)
(கங) தி-மொ-க-க-ச்o.

வாசிககாயிகரூபமாயிறே இவர் கைங்கர்ய மிருப்பது *அரங்கன்கூற (க) “మణిమణ్డపవప్రకణాన్వితధేపరకాలకవిః - மணிமண்டப வப்ரகணாந்விததேபரகாலகவிஃ” என்னக்கடவதிறே. (உ) “கொடிமதிள்கள் மாளிகை கோபுரங்கள் துன்னுமணி மண்டபங்கள் சாலைகள்” என்று தாமே அருளிச்செய்தபடியே தலைக்கட்டினவராயிற்றிவர் தான். இந்தஶ்ரீ நித்யஶ்ரீயாய் நிலைநிற்கவேணுமென்கிறது “சீர் வாழி” என்று.

(பொங்குபுனல்மண்ணித் துறைவாழி) அதாவது-(ங) “துறைதுறைதோறும் பொன்மணி சிதறும் தொகுதிரைமண்ணி” என்கிறபடியே (ச)* பொன்னும்பொன்னி கொணர்ந்தலைக்கும் திருப்பொன்னியாற்றின் பிரிவாயிறே மண்ணியாறு தானிருப்பது. அது தான் திருக்குறையலூருக்குத் தெற்காயிருக்கும். (பொங்குபுனலாவது) - அதுதான் ஸமுத்ரகாமிநியாகையாலே அதில் நீர் தேங்கியிருக்கையாலும், உத்ரேகத்தை யுடைத்தாயிருக்கு மென்னுதல்; (ரு) “பொங்கு புனலுந்துமணி” என்று திருக்காவேரியின் பிரிவாகையாலும் அப்படி யிருக்குமென்னுதல். (சு) “மண்ணியல் நீர்தேங்கும் குறையலூர்” என்றிறே அருளிச்செய்தது. (எ) *தேங்கும் பொருநல் திருநகரியைப்போலேயாயிற்று திருமண்ணியும் திருக்குறையலூரும். (அ) “కావేరీవర్ధతాంకాలే–காவேரீவர்த்ததாம்காலே” என்னுமாபோலே “பொங்குபுனல் மண்ணித்துறைவாழி” என்கிறது.

துறையென்று ஆற்றுத்துறையைச் சொல்லுகிறது. ஆழ்வார் திருவாலி திருநகரியில் நின்றும் திருநாங்கூருக்கு எழுந்தருளும் போது இழியுந்துறையாகையாலே அது தான் (கூ) “ஒண்டுறை” என்னுமாபோலே ஆதரணீயமாயிருக்குமிறே. திருச்சங்கணித்துறை போலேயாயிற்று இதுவும். (பரகாலன் எண்ணில் தமிழ்ப்பாவிசையாவது) - (க௦) “ప్రమాణంచప్రమేయంచ ప్రమాతారశ్చసాత్త్వికాః-జయ స్తుపితారిష్టం సహసర్వత్రసర్వదా- ப்ரமாணம்ச ப்ரமேயம்ச

* இது அநந்விதம்.

(க) ர-ஸ்த-க.
(உ) திருமொ-ங-க௦-அ.
(ங) தி-மொ-ச. க௦-ச.
(ச) ,, ரு-கு-கூ.
(ரு) திருமொ-ரு-க௦-கூ.
(சு) உபதேசர.
(எ)
(அ) முக்தகம்.
(கூ)
(க௦) ஶ்ருதப்ரகாசிகை.

ப்ரமாதாரஸ்சஸாத்விகா: । ஜயந்து க்ஷபிதாரிஷ்டம்ஸஹஸர்வத்ர ஸர்வதா" என்னுமாபோலே (க) "கொற்றவேல்பரகாலன்" என்றும், (உ) "மருவலர்த உடல்துணியவாள்வீசும் பரகாலன்" என்றும் பாஹ்யகுத்ருஷ்டிகளை நிரஸிக்குமவராயிற்றிருப்பது.

(பரகாலன் எண்ணில் தமிழ்ப்பாவிசையாவது) - எண்ணிலே நினைவிலேயுண்டான தமிழ்ப்பாவிசை என்னுதல்; அதாவது - ஆழ்வார் திருவுள்ளம் பற்றியருளின தமிழ்ப்பாவிசை யென்றபடி. அன்றிக்கே, எண்ணிலாத் தமிழ்ப்பாவிசை யென்றாகவுமாம். அங்ஙனுமன்றிக்கே அடிவரையாலே எண்ணப்பட்டதென்றுமாம். "இட்டத்தமிழ்ப்பாவிசை" "எண்ணில் தமிழ்ப்பாவிசை" என்கிற இரண்டுமெந்தாதியும் அடிவரையும் சொல்லிற்றென்பர்கள். (எண்ணுத்தமிழ்ப்பாவிசை.) என்றபோது எல்லாராலு மெண்ணப் படுவதான தமிழ்ப்பாவிசை யென்றாகவுமாம்.

(தமிழ்ப்பாவிசையாவது) த்ராவிடரூபமான சந்தஸ்ஸாலே ஸந்தர்ப்பமான ப்ரபந்தமென்கை. (ந) "பாவளரும் தமிழ்மாலை" என்றும், (ச) "இன்றமிழின்னிசைமாலை" என்றும் சொல்லக்கடவதிறே. இசையென்று-கானமாகவுமாம். மண்ணித்துறையென்று திருக்காவேரியின் ஏகதேசத்தைச் சொன்னது-திருக்காவேரிக்கு உபலக்ஷணமாய், அத்தீரவாஸிகளான திருப்பாணாழ்வார் கோயிலிலே மண்டியிருப்பாராய், (ரு) "தொண்டரடிப்பொடியாட நாம் பெறில்"என்று அதிலும் அத்யபிநிவிஷ்டராயாயிற்றுகுலசேகரப் பெருமாளிருப்பது. ஆகையாலே அவர்கள் அவதரண ஸ்த்தலமும் ஸூசிதம்.

வாழியரோ தென்குருகை வாழியரோ தென்புதுவை
வாழியரோ தென்குறையல் மாநகரம்—வாழியரோ
தக்கோர் பரவும் தடஞ்சூழ் பெரும்பூதூர்
முக்கோல் பிடித்த முனி.

இனி, கீழ்ப்ரஸ்துதமான பராங்குச பரகால பட்டநாதயதிவராதிகளுடைய அவதரண ஸ்த்தலங்கள் அதிசயமாகவாழவேணுமென்கிறது. (வாழியரோ தென்குருகை என்று)

---

(க) திருமொ-ந-ச-கo. (ந) திருமொ-அ-க-கo.
(உ) திருமொ-ந-கூ-கo. (ச) (ரு) பெருமாள்திரு-உ-உ.

தெற்குத்திக்கிலேயுண்டான திருநகரியானது வாழவேணும். ஆழ்வாருடையவும் பொலிந்துநின்ற பிரானுடையவும் ஸம்ருத்தியோடே நித்யமாய் வாழவேணும். (வாழியரோ தென்புதுவை) தெற்குத்திக்கிலேயான ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸம்ருத்தி மாறுதொழியவேணும். வடபெருங்கோயிலுடையானும் ஆழ்வாரும் ஆண்டாளும் மன்னனாருங் கூடியிருக்கிற ஸம்ருத்தியிறே. (வாழியரோதென்குறையல் மாநகரம்) தென்குறையல் மாநகரமும் அப்படியே வாழவேணும். (மாநகரம்) திருமங்கை மன்னன் அவதாரத்துக்குத் தகுதியாயிருக்கை.

(வாழியரோ தக்கோர்பரவும் தடஞ்சூழ்பெரும்பூதூராவது)- (க) "தாரார்மலர்க்கமலம்தடஞ்சூழ்ந்த" என்கிறபடியே பெரிய ஏரியாலே சூழப்பட்ட பெரும்பூதூரென்கை. (உ) "எம்பெருமானாராகிய பேரேரி" என்றும், (ங) "యతీన్ద్రాఖ్యపద్మాకరేన్ద్రం- யதீந்த்ராக்யபத்மாகரேந்த்ரம்" என்றும் அவரைச் சொல்லக் கடவதிறே. அதுவும் அப்படியேயாயிருக்கை. ஸர்வாத்மாக்களுக்கும் ஸத்தாஸம்ருத்தியையுண்டாக்குமூரிறே. பெரும்பூதூர் தாஸரென்றிறே பெரியோர்கள் பேரிட்டு அழைத்து ஆதரித்துப் போருவது. ஏவம்விதமான அத்தை அவதரணஸ்தலமாக வுடையவர். உடையவரவதாரத்தாலேயாயிற்று அவ்வூருக்குண்டான உயர்த்தி. (ச) "ஓங்குபுகழுடையவூர்" என்னக்கடவதிறே.

(முக்கோல்பிடித்த முனியாவது) (ரு) "அறம் மூன்றுகால் குன்றுங்கால் முக்கோல்பிடித்து உலகில் ஊன்றும் காலாக்குமூதாம்நகர்" என்கிறபடியே, அவைதிகரான ஏகதண்டிகளை நிரஸிக்கைக்காக வைதிகோத்தமரென்னுமது தோற்ற த்ரிதண்டதாரணம் பண்ணி இராமாநுசமுனியென்னும் திருநாமத்தையுடையவரானவரென்கை. (சா) "త్రిదణ్డరూపధృగ్విప్రస్సాక్షాన్నారాయణస్స్మృతః- த்ரிதண்டரூபத்ருக்விப்ரஸ்ஸாக்ஷாந் நாராயணஸ்ஸ்ம்ருதః" என்னக்கடவதிறே. அவர்தான் (எ) "ప్రమేయేనసహ శ్రీమాన్ వర్తతాం యతిశేఖరః- ப்ரமேயேநஸஹ ஸ்ரீமாந் வர்த்ததாம் யதிசேகரः" என்னும்

(க) திருமொ-கூ-கூ-கo. (ச) (எ)
(உ) (ரு)
(ங) (சா)

படி வாழவேணும். (க) "வாழியெதிராசன் வாழியெதிராசன்" என்றிறே தத்விஷயமங்களாசாஸநமிருப்பது.

மொழியைக்கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக் குறும்பாம்
குழியைக்கடக்கும் நங்கூரத்தாழ்வான்சரண் கூடியபின்
பழியைக்கடத்து மிராமாநுசன் புகழ்பாடியல்லா
வழியைக்கடத்த லெனக் கினியாதும் வருத்தமன்றே.

இனி, உடையவர்க் கநந்தரம் ஆழ்வானை யநுஸந்திக்கிறது. அவரிறே ப்ரதிகூல கோஷ்ட்டியிலே சென்று வென்றவர். அவர் தான் சிஷ்யாசார்யக்ரமத்துக்கு ஸீமாபூமியாய் அருளிச்செயலை யாதரித்துக்கொண்டு போருமவராயிறே யிருப்பது. அந்த ஏற்றமெல்லாம் தோற்ற அவர்தனியனையும் ஆசார்யர்கள்கூட்டி யநுஸந்தித்தார்கள். (மொழியைக் கடக்கும். பெரும்புகழான் இத்யாதி.)

இதினர்த்தத்தைப் பெரியஜீயர் செய்தருளின நூற்றந்தாதி யுரையிலே யநுஸந்திப்பது.

நெஞ்சத்திருந்து நிரந்தரமாக நிரயத்துய்க்கும்.
வஞ்சக்குறும்பின் வகையறுத்தேன் மாயவாதியர்தாம்
அஞ்சப்பிறந்தவன் சீமாதவ னடிக்கன்புசெய்யும்
தஞ்சத்தொருவன் சரணைப்புய மென்றலைக்கணிந்தே.

(நெஞ்சத்திருந் தித்யாதி) இந்நாலாயிரத்துக்கும் ப்ரவர்த்தகர் நம்பிள்ளையாகையாலே அவர் திருநாமத்தை யநுஸந்திக்கிறது. இதில் ஆழ்வான் குமாரரான பட்டர்ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயித்தவராயிறே நஞ்சீயர்தாமிருப்பது; அவர் திருவடிகளை யாஸ்ரயித்தவரிறே நம்பிள்ளை. அந்த ஸம்பந்தம் தோற்றச்சொல்லுகிறது (நெஞ்சத்திருந்து) என்று.

அதாவது - ப்ரத்யக் விஷயமான பகவத்விஷயத்தை யநுஸந்திக்கைக்குப்பரிகரமான மநஸ்ஸிலே நிரந்தரமாகவிருந்து; நிரந்தரமாக நெஞ்சத்திருந்தென்றபடி. (உ) "நெஞ்சமே நீணகராக விருந்த என் தஞ்சனே" என்னும்படி (ரு) *நெஞ்சத்துப்பேராது நிற்கும் பெருமானை யநுஸந்திக்க ப்ராப்தமாயிருக்க, இந்த்ரியங்கள் குடியேறி (ச) "மனமாளுமோரைவர் வன் குறும்பர்" என்னும்படி ஸ்வ

(க) ஆர்த்தி - க. (ரு) ரு-திரு - அக.
(உ) திருவாய் - ரு - அ - உ. (ச) பெரியதிருவ - ௩௧.

வசமாக மநஸ்ஸையிழுத்து விஷயங்களிலே மூட்டி மேல்நரகாநுப வம்பண்ணும்படியாயிறே ஆசைநடத்துவது. நிரந்தரமாக நிரயத்து ய்க்குமென்று மேலேகூட்டவுமாம். க்ருத்ரிமரான குறும்பர் செய்யு மத்தையாயிற்று இந்த்ரியங்கள் நடத்திப்போருவது. அப்படி இந்த் ரியவர்க்கத்துக்கு இரையிடாமல் அந்தக்குறும்பையறுத்தேன். (க) "முழுவேரரிந்த னன்யான்" என்னுமாபோலே.

அன்றிக்கே, (உ) "విద్యామదో ధనమద స్తృతీయోఽభిజనో మదః- வித்யாமதோ தநமதஸ்த்ருதீயோபிஜநோமதஃ" என்கிற முக்குறும்பா கவுமாம். இது எந்த ராஜகுலமாஹாத்ம்யத்தாலேயென்னில்; சொல்லுகிறதுமேல், (மாயவாதியர்தாமென்று). அதாவது - மாயாவாதி கள் மநம்கலங்கி யஞ்சும்படியாக வவதரித்த ஸ்ரீமாதவனென்னுதல்; க்ருத்ரிமவாதிகள் அஞ்சும்படி அவதரித்தவனென்னுதல். (மாயவா தியர்தாமஞ்சப்பிறந்தவன்) என்கிறத்தை மாதவனோடேகூட்டுதல், அடிக்கன்புசெய்யும் தஞ்சத்தொருவனோடேகூட்டுதல். (சீமாதவன டிக்கன்பு செய்கையாவது) - (ஙு) "மூயல்கின்றேனுன்றன் மொய்க மூற்கன்பையே" என்கிறபடியே திருவடிகளிலே நிரவதிக ப்ரேமத் தைப்பண்ணுமவரென்கை.

(தஞ்சத்தொருவனுகையாவது) - எல்லார்க்கும் தஞ்சமாயிருப் பாரொருவரென்கை. ஆத்மாக்களுக்குத் தஞ்சமான அருளிச்செய லினர்த்தத்தை உபகரித்தருளினவரிறே இவர்தான். (ச) "அந்தண னொருவன்" என்கிறவிடத்தில் வ்யாக்யாநத்தில் இவர் வைபவத்தை ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தார். [சரணம்புயமென்றலைக்கணிந்து வஞ்சக்குறும்பின் வகையறுத்தேன்] பால்குடிக்க நோய்தீருமா போலே. (ரு) "பாதபங்கயம் தலைக்கணியாய்" என்று ப்ரார்த்திக்க வேண்டாதே அணியப்பெற்று வஞ்சக்குறும்பின் வகையறுத்தேன். (சு) "பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி-பாதவிலச்சினைவைத் தான்பண்டன்றுபட்டினங்காப்பே"என்னக்கடவதிறே. (சீமாதவன்) நஞ்சீயர். (அடிக்கன்பு செய்யுமவர்) நம்பிள்ளை. மாதவன் சிஷ்யரிறே.

ஊழிதொறு மூழிதொறு முலகமுய்ய
வும்பர்களும் கேட்டுய்ய வன்பினாலே

---

(க) திருவாய்உ-சு.
(உ) முக்தகம்.
(ஙு) கண்ணி - கo.
(ச) திருமொ - ரு - அ - அ.
(ரு) திருவாய் - கூ - உ - உ.
(சு) பெரியா - திரு - ரு - ஙு - அ.

வாழியெனும் பூதம் பேய் பொய்கை மாறன்
மழிசையர் கோன் பட்டர் பிரான் மங்கைவேந்தன்
கோழியர்கோன் தொண்டர் துகள்பாணன்கோதை
குலமுனிவன் கூறியநூலோதி வீதி
வாழியென வரும்திரளை வாழ்த்துவார்தம்
மலரடி யென் சென்னிக்கு மலர்ந்தபூவே.

(ஊழிதொறு மூழிதொறு முலகமுய்ய) இனி மங்களாசாஸந பரரான ஆழ்வார்கள் திவ்யப்ரபந்தங்களின் இயலநுஸந்தாநத்துடனே திருவீதியிலெழுந்தருளும் ஸ்ரீவைஷ்ணவர்களை மங்களாசாஸநம்பண்ணுவார் ஸ்ரீபாதபத்மங்கள் சிரஸாவாஹ்யமென்கிறார்.

(ஊழிதொறு மூழிதொறு முலகமுய்ய) கல்பந்தோறும் கல்பந்தோறும் ஸ்ருஷ்டமான லோகத்திலுள்ளாருஜ்ஜீவிக்க. (க) "படைத்தான்கவி" என்றபோதே இதுவும் யதாபூர்வகல்பநமாமோவென்று ஆசார்யஹ்ருதயத்திலே அருளிச்செய்தாரிறே. (உ) "కల్పే కల్పే జాయమానస్స్వమూర్త్యా - கல்பேகல்பேஜாயமாநஸ் ஸ்வமூர்த்யா" என்று அவனவதரிக்குமாபோலே ப்ரபந்தாவதரணமுமுண்டாயிறே இருப்பது.

(உம்பர்களும் கேட்டுய்ய) (ந)* "மேலாத்தேவர்களும்" இத்திவ்யப்ரபந்தத்தைக்கேட்டு உஜ்ஜீவிக்க. (ச) "ததுபர்யபி" என்றிறே இருப்பது. அன்றிக்கே, (ரு) "கேட்டாரார் வானவர்கள்" என்று நித்யஸூரிகளாகவுமாம். கீழ் "உலகம்" என்றது-(சு) "உலகமென்பது உயர்ந்தோர்மாட்டு" என்ற ப்ரமேயத்தாலேயிறே, இவர் மங்களாசாஸநம்பண்ணுவது. (எ) "வாயவனையல்லது வாழ்த்தாது" (அ)*வாழ்த்தியவாயராயிறே அவர்கள் இருப்பது.(மாறன்)இத்யாதியாலே (கூ) "తేషాం మౌత్సుక్యమాలక్ష్య రామస్సత్ర నిశ్చితః। కృతాఞ్జలి రువాచేదం ఋషిం కులపతిం తతః - தேஷாமௌத்ஸுக்யமாலக்ஷ்ய ராமஸ்ஸ்வாத்மநிசங்கிதஃ। க்ருதாஞ்சலி ருவாசேதம் ருஷிம்குலபதிம்

---

(க)
(உ)
(ந) திருவாய்-க-க-அ.
(ச) ப்ரஹ்மஸூ-ச-ந-உரு.
(ரு) திருவாய்-கo-சு-கக.
(சு) திவாகரம்.
(எ) க - திரு - கச.
(அ) ந - திரு-கூசு.
(கூ) [காணவில்லை.
* இந்த ப்ஸ்லோகத்துக்கு இங்கு ஸந்தர்ப்பம்

ததஃ"மற்றை எழுவரும் "பல்லாண்டு" "போற்றி" "காப்பு" "நமஃ" என்றிறே மங்களாசாஸநம்பண்ணுவது. ஆண்டாளையும் அவர்க்கண்ணரானவுடையவரையும் சொன்னபோதே மத்யேபதிதரான மதுரகவிகளும்ஸூசிதர்.

(க) "ஆண்டாள் மதுரகவியாழ்வார் எதிராசராமிவர்கள்" என்றிறே ஜீயருமருளிச்செய்தருளிற்று. அவரும் (உ) முயல்கின்றேனுன்றன் மொய்கழற்கன்பை" என்று ததீயமங்களாசாஸநத்திலே தலைகட்டினார். (குலமுனிவன் கூறியநூலாவது) - ப்ரபந்நகுலமூலபூதரான ராமாநுஜமுனி விஷயமாகச் சொன்ன நூற்றந்தாதி ப்ரபந்தமென்கை. அல்லது அவரருளிச்செய்ததாக ஒருத்ராவிட ப்ரபந்தமில்லையிறே. குலமுனிவன் விஷயமாகக் கூறியநூலை ஓதியென்றபடி. (ங) "என்கவிகளன்பால் மயல்கொண்டுவாழ்த்து மிராமாநுசனை" என்றிறே இவர் விஷயத்திலே மங்களாசாஸநமிருப்பது.

(ஓதிவீதிவாழியெனவரும் திரளைவாழ்த்துகையாவது) - மங்களாசாஸந விஷயமான திவ்யப்ரபந்தங்களை அப்படியே திருவீதியிலே யநுஸந்தித்து எழுந்தருளும் (ச) *இன்பமிகுபெருங்குழுவைக்கண்டு, (ரு) "பொலிக பொலிக" என்றும் (சு) "நாத்தழும்பெழநாரணாவென்றழைத்து மெய்த்தழும்பத்தொழுதேத்தி இன்புறுந்தொண்டர் சேவடியேத்தி வாழ்த்துமென்னெஞ்சம்" என்றும் மங்களாசாஸநம்பண்ணுகை. இப்படி மங்களாசாஸநம்பண்ணுமவர்கள் திருவடிகள், (என்சென்னிக்கே) அவர்கள் வாசியறிந்து உகந்திருக்குமென்சென்னிக்கே. (செவ்விப்பூவே) இது நிஸ்சயம். அமரர் சென்னிப்பூவானவவன் திருவடிகளன்று; அவனைவாழ்த்துவார்களை வாழ்த்துமவர்கள் திருவடிகளாயிற்று.

தலைக்குச்சூடும் மலர்ந்தபூவாலே. (எ) "நம்தலைமிசையே பொங்கிய கீர்த்தியிராமாநுசனடிப்பூ" என்னக்கடவதிறே. இதிலே ஆழ்வார்களெல்லாரையும் ஸஹபடிக்கையாலே, கீழ் சிறிது ஆழ்வார்கள் அவதரணஸ்த்தலம் அநுக்தமாயிருந்ததேயாகிலும் அவையும் அநுஸந்தேயம். மாறனவதரணஸ்த்தலத்தோடே மதுரகவிகளவதரணஸ்த்தலமும் அந்தர்ப்பூதம். (அ) "சீராரும் வில்லிபுத்தூர் செல்வத்

(க). உபதேசா-உக.
(உ) கண்ணி-கக.
(ங) இரா - நூ-சு.
(ச) பெருமாள்திரு-க-கo.
(ரு) திருவாய் - ரு - உ-க.
(சு) பெருமாள்திரு - உ-ச.
(எ) இரா - நூ - கoஅ.
(அ) உபதேசரத்-ருரு.

திருக்கோளூர் ஏரார்பெரும்பூதூர்" என்றிறே சேர்த்திருப்பது. (கூறிய நூலோதிவீதி வாழியென வருகையாவது-) இவற்றில் இயலநுஸந்தாநத்துடனே எழுந்தருளுகை, திருச்சந்த விருத்தம், பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், இயற்பா, இவற்றினநுஸந்தாநம் இன்னதிருநாளிலே என்று வ்யவஸ்த்திதமாயிருக்கும். பெரியாழ்வார் திருமொழி, நாய்ச்சியார் திருமொழி, பெருமாள்திருமொழி துடக்கமானவற்றுக்கும் ராமோத்ஸவ க்ருஷ்ணோத்ஸவாதிகளிலும் (க) "நீ பிறந்த திருநன்னாள்" என்று அவர்கள் அவதாரதிவஸமான திருநாள்களிலும் இவற்றினநுஸந்தாநமுண்டாயிருக்கும். மற்றுமுண்டான திவ்யப்ரபந்தங்களுக்கும் விநியோகமுள்ளவிடத்தே கண்டுகொள்வது.

இத்தால், தத்விஷயாநுஸந்தாநத்திலும் ததீயவிஷயாநுஸந்தாநம் அவனுக்கு மிகவுமுகப்பாயிருக்கையாலும், அவர்கள் தாம்அருளிச்செயலுக்கு ப்ரவர்த்தகராம் பெருமையையுடையராகையாலும் மதிளிட்டுவைத்தார். ஓத்துச்சொல்லுவார், ஸங்கீர்த்தநம்பண்ணுவார், பாடுவார். இயல் விண்ணப்பஞ்செய்வார்.

இயல்சாத்து வ்யாக்யாநம் முற்றிற்று.

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளேசரணம்.

நன்றும் திருவுடையோம் - பிள்ளையுறங்கா வில்லிதாஸர், வாழி திருக்குருகூர் - வகுளாபரணபட்டர், திருநாடுவாழி - ஸ்ரீபராங்குசதாஸர், மங்கைநகர்வாழி - பரகாலதாஸர், வாழியரோ தென்குருகை - பிள்ளை ராமாநுஜதாஸர், நெஞ்சத்திருந்து - பிள்ளையழகிய மணவாளதாஸர், ஊழிதொறு மூழிதொறும் பின் பழகராம் பெருமாள் சீயர்.

(க) பெரியாழ் - திரு - உ - ச - அ.